











# மீள்பார்வை

මීල්පාර්වෙ


Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/93/NEWS/2018 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 402 • 14 செப்டம்பர் 2018 வெள்ளிக்கிழமை • முஹர்ரம் 1440 • விலை 40.00







## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு அங்கீகாரம்

### இன்னும் பல விடயங்களைச் சேர்க்குமாறும் கோரிக்கை



வெளிநாட்டு அமைச்சர் திலக் மாரப்பனவினால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் இன்னும் பல அத்தியாவசியமான விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, விஜேதாச ராஜபக்ஷ ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர். அதனால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட பத்திரம் இன்னும் பல திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(பக். 14)

## புகை பிடிப்பது குறைவதால் அரச வருமானம் வீழ்ச்சி



மக்களிடம் புகை பிடிக்கும் பழக்கம் குறைந்து வருவதனால் அரச வருமானம் 1800 கோடியால் வீழ்ச்சி அடைந்திருப்பதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். புகைத்தலுக்கு அடிக்கடி விதிக்கப்படும் சட்டங்களால் புகைத்தல் பாவனை மிகவும் குறைந்துள்ளதாகத் தெரிவித்த அவர், இது அரச வருமானத்திலும் பாதிப்புச் செலுத்தியுள்ளதாகக் குறிப் பிட்டார். சிகரட்டினை சில்லறையாக விற்பனை செய்வதனைத் தடை செய்ய வேண்டும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அமைச்சரவைக்கு முன்வைத்த கருத்து தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சரவையில் சுகாதார அமைச்சரின் கருத்தை மங்கள சமரவீர எதிர்த்துப் பேசியுள்ளார். சுகாதார அமைச்சரின் இந்தக் கருத்துத் தொடர்பாக ஆராய்வதற்கென ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்படும் வரை இந்த அமைச்சரவைப் பத்திரத்தை தள்ளிப் போடுவதற்கு தீர்மானமாகியுள்ளது.

## உயிர்ப் பலித் தடை கோவில்களுக்கு மட்டுமே



இந்து ஆலயங்களில் மிருகங்களையோ பறவைகளையோ பலியிடுவதைத் தடை செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரமொன்றை இந்து விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்துள்ளார். இது சட்டமாக்கப்படுமிடத்து இந்துக் கோவில்களில் உயிர்ப்பலி நடாத்துவது தடை செய்யப்படும்.

(பக். 14)

## புதிய அரசியலமைப்பில் சர்வதேசத்துடன் உடன்பட்ட விடயங்கள் உள்வாங்கப்பட வேண்டும்



பாதுகாப்புக்கென இலங்கை செலவிடும் தொகையை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என இலங்கையின் அழைப்பை ஏற்று வருகை தந்துள்ள கடன் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விஷேட பிரதிநிதி வான் பப்லோ பொஹொஸ்லோஸ்கி தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலங்களில் இலங்கை சமாதானம் மற்றும் பொருளாதார அபிவிருத்திகளில் காட்டியுள்ள பிரதான மாற்றங்கள், வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கென ஒதுக்கியுள்ள நிதியில் பிரதிபலிக்கிறதா என்பது தொடர்பில் திறந்த கலந்துரையாடலொன்று நடத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (பக். 14)

## பொதுஜன பெரமுனவுக்கு தலைமை தாங்கி தேர்தல் பிரச்சாரத்தில் இறங்குகிறார் மஹிந்த



நான் பொதுஜன பெரமுனவுக்கு தலைமை வகிப்பேன். அரசிலமைப்பில் திருத்தமொன்று செய்தால் என்னால் போட்டியிடவும் முடியும் என்றொரு கருத்தும் இருக்கிறது. அது தொடர்பில் நீதிமன்றில் போராடுவார்கள். ஆனாலும் இந்த அபாய தேர்வுக்கு முகம் கொடுப்பது தொடர்பில் நான் இன்னும் தீர்மானிக்கவில்லை என தனது இந்திய விஜயத்தின் போது இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (பக். 14)

## இலஞ்ச ஊழல் சம்பவங்களை பதிவு செய்து தருமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள்



போக்குவரத்துப் பொலிசார் எவரேனும் லஞ்சம் கேட்டாலோ ஊழலில் ஈடுபட்டாலோ அந்தச் சம்பவங்களை வீடியோ அல்லது ஓடியோ வடிவில் பதிவு செய்து அனுப்புவதற்குத் தயங்க வேண்டாம் என போக்குவரத்து பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

போக்குவரத்துப் பொலிசார் இலஞ்சம் கேட்பதாகவும் ஊழலில் ஈடுபடுவதாகவும் பல முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும், உண்மையிலேயே இவ்வாறான பொலிசார் இருப்பதாகவும் இவர்களால் பொலிஸ் திணைக்களத்துக்கு இழுக்கு எனவும் அவர் குறிப்பிட்டார். (பக். 14)

## ட்ரம்பின் போதைக்கெதிரான மாநாட்டில் ஜனாதிபதி



அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள உலக சட்ட விரோத போதைப் பொருள் விற்பனைக்கெதிரான மாநாட்டில் கலந்து கொள்வதற்கென இலங்கை ஜனாதிபதி அமெரிக்கா புறப்படவுள்ளார்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கென உலகத் தலைவர்களுக்கு அமெரிக்க

(பக். 14)

## ஊழல் பாரிய மோசடிகளை விசாரிப்பதற்கான இரண்டாவது உயர் நீதிமன்றம்



கடந்த மே மாதம் சட்டமாக்கப்பட்ட நீதிமன்றக் கட்டமைப்புச் சட்ட மூலத்தில் குறித்துரைக்கப்பட்டதற்கிணங்க இரண்டாவது விஷேட நிரந்தர உயர் நீதிமன்றத்தை நிறுவுவதற்கான அறிவித்தலை அரசாங்கம் விஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிட்டுள்ளது.

பாரிய நிதி மோசடிகள், ஊழல் மற்றும் உயர்மட்டக் குற்றங்களுக்கான நீதிமன்ற நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக மூன்று விஷேட

(பக். 14)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலில்லாத நரிகள்

காட்டிலிருந்து கோழி திருட கிராமப் பக்கமாக வந்த நரியொன்று வேலியொன்றுக்குள் சிக்கிக் கொண்டது.

மிகுந்த போராட்டத்துக்குப் பின்னால் தன்னை ஒருவாராக விடுவித்துக் கொண்டாலும் அதனது வாலின் முக்கால்வாசிக்கு மேல் அறுந்து வேலிக்குள்ளேயே நிற்கவாகிற்று. மிகுந்த வேதனையுடன் ஊளையிட்டுக் கொண்டே காட்டுக்குள் ஓடிய நரி, தூரத்தே இன்னொரு நரியைக் கண்டதும் ஊளையை அடக்கிக் கொண்டு வலுக்கட்டாயமாக சிரிப்பை வரவழைத்துக்கொண்டது.

''என்ன நண்பரே! எப்படி சுகம்? என்ன ஊளைச் சத்தம் ஊரைக் கூட்டும் படியாக இருந்தது?..... ஒஹோ எங்கே போனது உம்முடைய வால்?!''கேட்டே விட்டது அந்த நரி.

''அதைத்தான் நானும் சொல்ல வந்தேன், நல்ல வேளை நீரே வந்து சேர்ந்து விட்டீர்! இந்த பாழாய்ப் போன வாலை எடுத்து விட்டால் நீடித்த சுகம் கிடைக்குமென ஒரு துறவி சொன்னார், அதுதான் நான் உடனே வாலை அறுத்துக் கொண்டேன். அப்பப்பா என்ன சுகம்! எத்தனை சுகம்! வானத்தில் பறப்பது போல் இருக்கிறது நண்பரே! அந்த சுகத்தின் பரவசத்தில்தான் என்னையுமறியாமல் ஊளையிட்டு விட்டேன்'' நரிப் புத்தியைக் காட்டியது இந்த நரி.

''அட, இது நல்ல ஐடியாவாக இருக்கின்றதே...! அது சரி, நான் எப்படி எனது வாலை அறுத்துக் கொள்வதாம்?''

''அதற்கேன் கவலை? அதோ அங்கே பாரும்...'' என்று கூறி பக்கத்திலிருந்த ஒரு கற்குவியலை நோக்கி நண்பனை அழைத்துச் சென்றது வாலறுந்த நரி. அதனை உட்கார வைத்து அதன் வாலை ஒரு கல்லின் மீது வைத்து இன்னொரு பாரமான கல்லை கஷ்டப்பட்டு உருட்டி வாலின் மேல் ஏற்றி விட்டது. வலியில் துடித்த படி எழுந்தோட முயற்சித்த நட்பு நரியின் வால் கற்களுக்கிடையில் தஞ்சமடைந்தது.

வலி தாங்காமல் ஊளையிட ஆரம்பித்த புதிதாய் வாலறுந்த நரி, தன்னை வஞ்சித்த மற்ற நரியை ஊளைக்கிடையே திட்டித் தீர்க்கவும் தவறவில்லை.

அந்த நரியோ... ''நண்பரே! வலியைக் காட்டிக் கொண்டால் பிறர் உம்மைப் பார்த்துச் சிரிப்பார்கள், பேசாமல் 'வானத்தில் மிதக்கும் பரவசக் கதை' விட்டீரென்றால் உமக்கு மரியாதை'' என சிரித்துக் கொண்டே சொல்லியது.

அன்று 'முதல் காட்டில் நரிகளுக்கிடையே மும்முரமான வாலறுப்புப் பிரச்சாரத்தை இருவருமாய் முன்னெடுக்க, மெல்ல மெல்ல வாலறுந்த நரிச் சமுதாயமொன்று தோற்றம் பெற்றது. கூடவே ஊளைச் சத்தமும் காட்டில் அதிகரித்து ஏனைய மிருகங்களுக்கு கடும் தொல்லையளித்தது.

ஒரு கட்டத்தில் நரித் திருமணத்துக்கான அடிப்படை நிபந்தனையாக 'வாலின்மை' மாறும் அளவுக்கு அந்தக் கலாச்சாரம் வளர்ந்தது.

இப்படியாக நரிகளெல்லாம் தத்தமது வாலை அறுத்துக் கொண்டும் பிற நரிகளின் வாலை அறுக்க உதவிக் கொண்டும் வாலறுந்த கலாச்சாரத்தை நிலைநிறுத்திய பின்னர், காட்டில் வாலுடன் வாழ்ந்த ஏனைய மிருகங்களை இந்த நரிகளெல்லாம் கேலி செய்ய ஆரம்பித்தன.

வாலில்லாத நரிகளின் வாலின்மைக்கான உரிமைக் குரல்களும் மெல்ல மெல்ல ஏனைய மிருகளுக்கு மத்தியிலிருந்து எழ ஆரம்பித்தன.

- அபான் அப்துல் ஹகீம்




## சமூக வலைத்தளங்களில் அலசப்படுபவை

### வீட்டுக்கே சென்று அரச பணிகள் செய்து கொடுக்கப்படும்




புதுடில்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் அரச பணிகளை வீடு வீடாக சென்று செய்துகொடுக்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளாராம்.

வரிசையில் நிற்கத் தேவையில்லை.. லஞ்சம் கொடுக்க தேவையில்லை.. அதிகாரிகளை கெஞ்சிக் கொண்டிருக்க தேவையில்லை...

வீட்டுக்கே சென்று அரச பணிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன... சபாஷ் ...!

- சிவராஜா ராமசாமி

### வாசிப்பின் பெறுமதியை உணராவிட்டால்

இது எங்கள் பாடசாலைக்கு முன்னால் உள்ள நூலகத்தில்

ஆயிரக்கணக்கான நூல்கள் உள்ளன.

ஆனாலும் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் இதன் மூலம் பயன் பெறுவது ஒப்பீட்டளவில் காண்பதரிது.

எனினும் சகமொழி மாணவர்கள் அதிகம் வருகின்றனர் இரவல் பெறுகின்றனர்.

வாசிப்பின் சமூகமே வாசிகசாலையின் பெறுமதியை உணராவிட்டால்...



-பிஸ்தாமி அஹமட்

# இப்படிக்கு தந்தை

'வாங்க மகன் ' 'இங்க வாங்க மகள்'..
'அந்த பாட்டப் பாடிக் காட்டுங்கோ'
'அந்த கதைய சொல்லிக் காட்டுங்கோ '
'பேச்ச பேசிக் காட்டுங்கோ'
'அத நடிச்சு காட்டுங்கோ'
'அத செய்து காட்டுங்கோ'... என்று யாராவது உறவினர்களோ,நண்பர்களோ, தெரிந்தவர்களோ வீட்டுக்கு வந்தால் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை அழைத்து, அவர்களின் ஏதோவொரு கெட்டித்தனத்தை, அவர்கள் வெற்றிவாகை சூடிய நிகழ்ச்சியை, அவர்களின் திறமையுள்ள ஒரு விடயத்தை அந்த விருந்தினர்கள் முன்னிலையில் செய்து காட்டும்படி வேண்டிக் கொள்வர்.

தம் பிள்ளைகளின் அறிவை, ஆற்றலை மற்றவர்களுக்கு கூறிக் காட்டுவதில் பெற்றோர்களுக்கு இன்பமும் மகிழ்ச்சியும் இருக்காதா என்ன..? அது நியாயமான உணர்வுதான்.அதனை தவிர்க்க முடியாது.

இருப்பினும் நான் மேலே குறிப்பிட்ட சூழ்நிலையில் பிள்ளைகளுக்கு அவ்வாறு பணிக்கும் போது அவர்களது மனோநிலை கருத்திற் கொள்ளப்படுவது இன்றியமையாததாகும்.

பிள்ளைகளுக்கு சிலவேளை 'மூட்' இல்லாமல் இருக்கும். அலுப்பு, சோம்பல், களைப்பு, மன அழுத்தம் போன்ற நிலைகளில் அவர்கள் இருக்கக் கூடும். சில வேளைகளில் அவர்கள் வெட்கப்படக் கூடும்.

இவ்வாறான சூழ் நிலைகளில் அவர்கள் நிர்ப்பந்தப்படுத்தப்படும் போது பெற்றோர்களை சந்தோஷப்படுத்துவதற்காக அவர்கள், அவற்றை மறுக்காமல் செய்யக் கூடும். நாளடைவில் தாம் அவ்வாறான கெட்டித்தனங்களை காட்டினால் தானே அவ்வாறு பணிக்கப்படுவது என்றெண்ணி இக்கட்டான நிலைகளைத் தவிர்ப்பதற்காக குறிப்பிட்ட வெற்றிகளைப் பெறுவதிலோ ஆற்றல்களைக் காட்டுவதிலோ அவர்கள் பின்னடைவைக் காட்ட முடியும்.

தம் பிள்ளைகள் என்பதால் 'சாவி கொடுத்த பொம்மை போல்' அவர்களுக்கு விருப்பம் இருந்தாலோ இல்லையோ மனோநிலை கருத்திற் கொள்ளப்படாமல் அவர்களை அவ்வாறு பணிப்பது, பாரதூரமான, குழந்தைகளை சிதைக்கின்ற, அவர்களது ஆளுமைகளை மழுங்கடிக்கச் செய்கின்ற ஒரு நடவடிக்கையாக ஆகிவிடக் கூடும். - எம்.ரிஸான் ஸெய்ன்

### கோத்தாவுக்கு முன் நாமல்

மஹிந்தவின் ஜனபலய போராட்டத்தில் தோல்வி அடைந்தவர் கோத்தபாய ராஜபக்ச மாத்திரமே. மஹிந்தவுக்கு பிறகு நான்தான் என கனவு கண்டவருக்கு மஹிந்த ராஜபக்ச சிறந்த செய்தியொன்றை கூறியுள்ளார்.

இந்த போராட்டம் மூலம் கோத்தபாயவின் ஜனாதிபதி கனவை கலைத்து அடுத்த தலைவராக நாமல் ராஜபக்ச்வை மறைமுகமாக மஹிந்த ராஜபக்ச நியமித்துள்ளார்.

- இம்ரான் மகரூப்

Cartoon of the week




# சமயப் பாடத்திற்கு ஆசிரியர்கள் இணைத்துக்கொள்வது பற்றிய அறிவிப்பு

2018.08.31 ஆம் திகதி வெளிவந்த வர்த்தமானி பத்திரிகையில் இனமத பேதமின்றி தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்கு சமயப் பாடத்திற்கு ஆசிரியர்கள் இணைத்துக் கொள்வது பற்றிய அறிவிப்பு வெளிவந்தது.

அந்த அறிவிப்பில் 'கல்வித் தகைமை'யின் கீழ் இருந்த விடயங்களை முஸ்லிம் சமூகத்துடன் ஒப்புநோக்கியபோது சமூகத்திற்கான தொழில் வாய்ப்புக்கள் பற்றி எதிர்மறையான எண்ணங்கள் உதித்தது.

**5. கல்வித் தகைமை**

5.1. இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பு 6 இன் படி கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழியைப் பாடமாகச் சித்தியடைந்து இருக்க வேண்டும்.

5.2. க.பொ.த. (உ.த) பரீட்சையில் குறைந்த பட்சம் மூன்று பாடங்கள் (பொது சாதாரண பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர) ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

5.3. மேற்கூறப்பட்ட தகமைகளுக்கு மேலதிகமாக விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியான 2018.09.28 ஆம் திகதி கீழ்க் குறிப்பிடப்பட்ட தகமைகளைப் பூரணப்படுத்தி இருக்க வேண்டும்



(அ) பௌத்த சமயப் பாடத்திற்காக பௌத்த தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

(ஆ) கத்தோலிக்க சமயப் பாடத்திற்காக கத்தோலிக்க தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

(இ) கிறிஸ்தவ சமயப் பாடத்திற்காக கிறிஸ்தவ அறிவு தொடர்பான தேசிய சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

(ஈ) இந்து சமயப் பாடத்திற்காக இந்து தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

(உ) இஸ்லாம் சமயப் பாடத்திற்காக மௌலவி சான்றிதழ் பெற்றிருத்தல்

இலங்கையில் உள்ள சமயக் கல்லூரிகளில் (மத்ரஸா, பிரிவென, இந்து சமய அறநெறிப் பாடசாலை) கற்று வெளியேறுகின்ற மதகுருமார்களுக்கு அரச தொழில்வாய்ப்பை வழங்கும் விதமாகத்தான் சமயப் பாட ஆசிரியருக்கான தகைமைகள் வடிவமைக்கப்பட்டது. இதனால் ஆரம்பத்தில் மௌலவி பட்டம் மட்டும் பெற்ற பலருக்கு அன்று ஆசிரிய தொழில்வாய்ப்பு கிடைத்தது. என்றாலும் இன்று இதற்கு மேலதிகமாக சமயப் பாட ஆசிரியர்களுக்கான 'கல்வித் தகைமை'களாக சாதாரண தரப்பரீட்சை மற்றும் உயர் தரப்பரீட்சை என்பவற்றில் சித்தியடைந்து இருக்க வேண்டும் என்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

என்றாலும் இன்று பல பிரபல்யமான அரபு மத்ரஸாக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சாதாரண தரம், உயர்தர பரீட்சை எழுதுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுப்பதில்லை. இதற்கு மேலதிகமாக உலகக் கல்வி தேவையில்லை என்ற பிரசாரமும் சமூகத்தில் நடக்குது. எதிர் பக்கம் ஷீயாக்கள் சர்வதேச பல்கலைக்கழகம் உருவாக்கி இஸ்லாமிய கற்கை நெறிக்கான பட்டதாரி சான்றிதழை வழங்குகின்றனர். இதனால் முஸ்லிம் சமூகம் பல இன்னல்களை எதிர்நோக்கவுள்ளது.

எதிர்காலத்தில் குறித்த சமயப் பாடநெறிக்கு விண்ணப்பிப்பவர்களில் ஷீயா சிந்தனையுள்ளவர்களும் இடம்பெறவுள்ளனர். அவர்களுக்கு பட்டதாரிச் சான்றிதழ் உள்ளதால் இலகுவாக அருகிலுள்ள சிறந்த பாடசாலைக்கு அவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படலாம். இங்கு ஷீயாக்களின் அடுத்த கட்ட நடவடிக்கை கட்டிளமை பருவ பாடசாலை மாணவர்களுக்கு ஷீயா சிந்தனையை போதிப்பதிலும் அவர்கள் வெற்றியடைவார்கள். இதனால் எமது 3 ஆவது பரம்பரையில் ஷீயா சிந்தனையுள்ளோர் அதிகரிக்கலாம்.

இலங்கையில் இன்று வேலையின்மை வீதம் அதிகரித்த வண்ணமுள்ளது. இந்தப் பிரச்சினையில் பல மௌலவிமாரும் இன்று சிக்கியுள்ளமை மறுக்க முடியாத உண்மையாகும். இந்நிலையில் இலங்கையில் உள்ள மத்ரஸாக்களில் சாதாரண தரம், உயர்தரம் கற்காமல் மௌலவி பட்டம் மாத்திரம் பெற்று வெளியேறுகின்ற ஆலிம்களுக்கு அரச துறையில் தொழில்வாய்ப்புக்கள் இல்லாமல் போகலாம்.

உலமாக்களே! நமக்கு அரச தொழில்வாய்ப்பு தேவையில்லை என்று இதனை புறக்கணிக்கவும் வேண்டாம். இதனால் பாதிக்கவுள்ளது எமது இளம் சமூகம் என்பதையும் மறக்க வேண்டாம்.

எனவே, எதிர்கால சமூகத்தை ஷீயா சிந்தனையில் இருந்து காப்பதற்கும், ஆலிம்களுக்கான அரச தொழில்வாய்ப்பை உறுதி செய்து கொள்ளவும் இன்றே அனைத்து மத்ரஸாக்களிலும் சாதாரண தரம், உயர்தர பரீட்சைகளில் தோற்றுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கவும்.

**- இப்னு ஆஸாத்**

# குட்டக் குட்டக் குனிதல்

அரச அலுவலகங்கள் முதல் ஆன்மீகத் தலங்கள் வரை பெண்கள், விரசமாய் ஆடை அணிவதை ஆட்சேபிக்காது, அதனை அவரவர் சதந்திரமாய் நோக்கும் தேசமொன்றில், முஸ்லிம் பெண்களின் சுதந்திரத் தெரிவான முகத்திரையையும், கறுப்பு அபாயாவையும் கழற்றிடத் துடிக்கும் பேரினவாதிகளின் அச்சுறுத்தலுக்கு அஞ்சிய எமது மார்க்க மேதைகளில் சிலர், 'முகத்திரையும் கறுப்பு அபாயாவும் மார்க்கத்தில் தடுக்கப்பட்டது அல்ல' என்றிருந்தும், இஸ்லாமிய ஆடை அமைப்புக்கும் குறித்த ஆடை அமைப்புக்கும் எந்தத் தொடர்புமில்லை என்ற ஒரு வாதப் பிரதிவாதத்தை முன்வைத்தனர்.

சில வருடங்களுக்கு முன்னர் தேசிய அடையாள அட்டைக்கான தொப்பியணிந்த புகைப்படங்கள் நிராகரிக்கப்பட்ட வேளை, ஒரு கூட்டம், ''தொப்பி ஒரு ஸுன்னாவல்ல, அதனைப் பொருட்படுத்தத் தேவையில்லை'' எனக் கூறி எம்மீதான அத்துமீறலின் ஆரம்பத்துக்கு இசைவு கொண்டார்கள்.

அடுத்து அனுராதபுரத்தில் காவல் துறையின் கண்முன்னேயே காவிகளின் உத்தரவில் காடையர்களால் உடைத்து நொறுக்கப்பட்ட ஸியாரத்தையிட்டும் சிலர், ''ஷிர்க் கொன்று நீங்கியதாக மகிழ்ந்தும் தமக்குள்ளேயே கொக்கரித்துக் கொண்டார்கள்.

தற்போது நூற்றாண்டு காலமாய் பலியிடப்பட்டு வ்ந்த பிராணிகளை, குறிப்பாக மாட்டை உழ்கியாவிலிருந்து தடுத்து, மாற்றீடுகளை நோக்கி நகரும் கருத்துக்களை சிலர் இஸ்லாமியப் பார்வைகளில் முன்வைத்து வருகிறார்கள்.

இனவாதிகளினால் நீட்டப்படும் சுட்டுவிரல்களின் ஒவ்வொரு அசைவுகளிலும் அனுசரித்து, அனுசரித்துப் போகப் பழக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நாம், 'மார்க்கத்தின் பார்வைகளில் இந்த அனுசரிப்புக்கும் பொறுமைக்கும் அங்கீகாரமுண்டு'' என்றிருப்பினும் எமது எதிர்கால சந்ததியினரில் அடிமைத்துவத்தை இனவாதிகளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக எழுதிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை கோழைத்தனத்தை பொறுமையின் போர்வையில் மறைத்துக் கொண்டு எதிர்கால விளைவுகளை அறியாதது போன்று நடித்துக் கொண்டிருக்கிறோம்.

ஒன்று மட்டும் நிதர்சனமாகத் தெரிகிறது. கௌரவத்தோடும், தனித்துவத்தோடும் அதேநேரம், பிற சமூகங்களோடும் இணக்கத்தோடும் வாழ்ந்த, அதனை நமக்கும் விட்டுச் சென்ற நமது மூதாதையர் போலன்றி, நாமோ... யாரோ காலி சென்ற கதை போல பெரும்பான்மையினரின் முகஞ்சுழிப்புகளைச் சரிசெய்ய அவசர அவசரமாக அனைத்தையம் தாரைவார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இனி ஒரு காலத்தில் அனைத்து மாமிச உணவுகளும் தடைசெய்யப்பட்டு, எம்மீது உணவுத் தட்டுப்பாடும் திணிக்கப்பட்டு, பன்றி இறைச்சி மாத்திரமே வழங்கப்பட்டால், அதற்கும் நிர்ப்பந்தத்தில் குற்றமில்லை, வரம்பு கடக்காது அதனை அளவோடு உண்ணுமாறும் எம் பிடரிமீது அழுத்தி சிலை முன்னே மண்டியிடுமாறு தள்ளப்பட்டால் குறைஷியரிடம் சிக்குண்டு உயிர்த்தப்ப, சிலைக்குத் தலை குனிந்த நபித்தோழரின் கதையையும் கூறி, அனைத்திலும் இனைவாதிகளின் கட்டளைகளுக்கு இசைந்து போகுமாறு இஸ்லாமியக் கோணத்தில் எமது வழிகாட்டிகள் பத்வாக்களை அள்ளி எறிவார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

**எம்.எம்.எம். மிப்ரான்**
கல்பொக்க, வெலிகம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பலத்தையும் குடும்ப பலத்தையும் இழந்து வரும் ராஜபக்ஷ பரிவாரம்

• பியாஸ் முஹம்மத்

ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான ஜனபலய போராட்டம் வெறும் புஸ்வாணமாக முடிந்திருக்கிறது. ராஜபக்ஷ குடும்பத்தினரை பாதுகாக்கவும் ஆட்சியில் அமர்த்தவும் கூட்டுச் சேர்ந்திருக்கின்ற கூட்டு எதிரணி இனி ராஜபக்ஷ குடும்பத்தின் செல்வாக்கில் தங்கியிருப்பது பயனளிக்கப் போவதில்லை என்பதை ஆட்சியைக் கவிழ்க்க வந்தவர்கள் கவிழ்ந்திருந்த விதம் அவர்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறது.

மறுபுறத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கண்டுபிடித்திருக்கும் மஹிந்தவை மீண்டும் ஜனாதிபதியாக்குவதற்கு அரசியலமைப்பில் இடமிருக்கிறது எனும் பேராதங்கம், கூட்டு எதிரணியைக் கவிழ்த்து விடுமளவுக்கு இப்பொழுது பூதாகரமாகியிருக்கிறது.

அரசியலமைப்பின் 92 ஆவது உறுப்புரை, பின்வரும் தகைமையீனங்களுள் எதற்கேனும் உட்பட்டவராயிருந்தால் ஒழிய தேருநராக இருப்பதற்குத் தகைமையுடைய ஆள் ஒவ்வொருவரும் ஜனாதிபதி பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமை உடையவராவார் என்று கூறுகிறது.

அ. அவர் 35 வயதை அடையாதவராக இருந்தால்


ஆ. பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமை அற்றவராக இருந்தால்

இ. அவர் ஜனாதிபதி பதவிக்கு மக்களால் இரு தடவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருந்தால்

ஈ. ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றப்பட்டவராக இருந்தால்

அவர் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட முடியாது என 92 ஆம் பிரிவு கூறுகிறது. இரண்டு தடவைகள் ஆட்சியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷ, இன்னும் பல தடவைகள் ஆட்சியில் அமரும் விதமாக இந்தச் சட்டத்தை திருத்தினார். இது அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தமாக அமைந்தது. ஆனாலும் இரண்டு தடவைகளுக்கு மேல் அவர் ஜனாதிபதியாக இருக்க வேண்டியதில்லை என மக்கள் கருதியதனால் அவருக்கு மூன்றாவது தடவை ஜனாதிபதியாகும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. அவரைத் தோற்கடித்து ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசு வந்த வேகத்திலேயே இந்தச் சட்டத்தை மாற்றுவதற்கான 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்றியது. இதன்படி ஏற்கனவே 92 ஆவது உறுப்புரையில் இருந்தது போல இனி எவரும் இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட முடியாது.

ஆனாலும் கூட்டு எதிரணியில் உள்ள சட்டவல்லுனர்கள் என அழைக்கப்படுகின்ற பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், நீதியரசர் சரத் என் சில்வா போன்றோர், 19 ஆவது திருத்தச் சட்டம் பின்நோக்கிச் செயற்படுகின்ற (Retrospective) ஒரு சட்டம் என வெளிப்படையாகக் கூறவில்லை. எனவே இந்தச் சட்டம் மஹிந்த ராஜபக்ஷ விடயத்தில் செல்லுபடியாகாது என வாதிடுகின்றனர்.



எதிர்காலத்தை முன்னோக்கிய (Prospective) சட்டத்தை பாராளுமன்றம் நிறைவேற்ற முடியுமாயிருப்பது போலவே, கடந்த காலத்தை உள்ளடக்கியும் (retrospective) சட்டமியற்றலாம் என அரசியலமைப்பின் 75 ஆம் உறுப்புரை கூறுகிறது. இது ஜனநாயகத்துக்கு உகந்ததல்ல என்றபோதும், இலங்கையில் இது நடைமுறையில் உள்ளது.

இலங்கையில் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஆறு வருடங்களாக குறித்துரைக்கப்பட்டுள்ள போதிலும் 19 ஆம் திருத்தத்தின் மூலம் இது ஐந்து வருடங்களாகக் குறைக்கப்பட்டது. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னரே இந்தச் சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் தனக்கும் செல்லுபடியாகுமா என ஜனாதிபதி உயர்நீதி மன்றத்தை விசாரித்த போது, ஜனாதிபதி பதவியேற்றபின் இந்தச் சட்டம் இயற்றப்பட்டாலும் நடப்பு ஜனாதிபதிக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என உயர்நீதிமன்றம் எடுத்துரைத்தது.

அதேபோல இரட்டைப் பிரஜாவுரிமை சம்பந்தமான சட்டம் கீதா குமாரசிங்க பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் நிறைவேற்றப்பட்டாலும், சட்டம் நிறைவேறியதன் பின்னர் அவர் தனது பாராளுமன்ற உறுப்புரிமையை இழக்க வேண்டி வந்தது. இந்தத் தொடரிலேயே மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இந்தச் சட்டத்தைப் பிரயோகிக்க வேண்டி வருகிறது. ஆகவே மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாவதற்கு சட்டத்தில் இடமிருக்கிறது என்ற கோஷம் வெறும் அரசியல் நாடகமேயன்றி சட்டரீதியாக மஹிந்த ஜனாதிபதி ஆவதற்கான வாய்ப்புக்கள் எதுவுமே இல்லை.

அரசியலமைப்பின் 92 ஆவது உறுப்புரை சொல்லுகின்ற ஜனாதிபதியாகப் போட்டியிடுவதற்கான தகைமையீனங்களில் 35 வயதுக்குக் குறைந்தவர்கள் ஜனாதிபதியாகப் போட்டியிட முடியாது என்பது மாற்றத்துக்குட்படவில்லை. அந்த வகையில் ஜனாதிபதியாகப் போட்டியிடுபவர் 35 வயதைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தில் ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக்குவது என்றிருந்தால் அந்த வாய்ப்பு நாமல் ராஜபக்ஷவுக்குக் கிடைக்காமல் போகிறது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலாகும் போது அவருக்கு 34 வயதே ஆவதால் அரசியலமைப்பின்படி அவராலும் போட்டியிட முடியாது.

எல்லோரும் எதிர்பார்த்த கோத்தாபய ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட முடியாமல் அவரது இரட்டைப் பிரஜாவுரிமை அவரைத் தடுக்கிறது. அவர் மீதுள்ள வழக்குகளில் அவர் நிரபராதி என நிரூபிக்கப்படும் வரை அவரது அமெரிக்க பிரஜாவுரிமையை ரத்து செய்ய முடியாது என இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஷாப் தெரிவித்திருந்தார். அமெரிக்கப் பிரஜாவுரிமையை ரத்துச் செய்யாமல் அவரால் தேர்தலில் போட்டியிட முடியாது என 19 ஆவது திருத்தச் சட்டம் சொல்கிறது.

தவிரவும் ராஜபக்ஷ குடும்பத்துக்குள்ளேயே அவர் செல்வாக்கிழந்தவராக தற்போது உள்ளார். இந்த நிலையில் பஸில், சமல் ராஜபக்ஷாக்களின் பெயர்கள் அடிக்கடி அரசியல் அரங்கில் வந்து போனபோதும் அவை எடுபடும்படியாக அமையவில்லை. இது ராஜபக்ஷ பரிவாரம் மீண்டும் தலைதூக்குவதற்கான வாய்ப்புக்கள் அருகி வருவதைக் காட்டுகின்றது.

அதேபோல தேர்தல் ஒன்று நடக்குமாக இருந்தால் இந்த ராஜபக்ஷ பரிவாரங்களுக்குப் பின்னால் மக்கள் ஒன்று திரளப் போவதில்லை என்பதை நடந்து முடிந்த ஜனபலய கொலம்பட்ட பேரணி எடுத்துக் காட்டியிருக்கிறது. இனி ராஜபக்ஷக்களின் அரியணைக் கனவுகள் நிறைவேற வேண்டுமென்றால் கூட்டணி சேர்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. பெரும்பாலும் அது பிரதமர் ரணிலுடனான கூட்டணியாகவே அமையும் என்பது பெரும்பாலானவர்களின் எதிர்பார்ப்பு.

ரணிலுக்கும் மஹிந்தவுக்கும் இடையில் நிலவுகின்ற ஊடல் நிறைந்த உறவு கூடலாக மாறுவதற்கு இடம் வைத்தே தொடர்வது இதற்குச் சான்றாகச் சொல்லப்படுகிறது. இந்தத் தேனிலவு கைகூடுமானால் நாட்டில் மீண்டும் ஸ்திரத்தன்மையற்ற ஆட்சியே நிலவப் போவது மட்டும் திண்ணம்.

# மத்ஹபுகளுக்கிடையில் திருமணத்துக்கான இயலுமை

## அறிமுகம்

திருமணம் என்பது சமூகத்தினதும் தனி மனிதனதும் நலனுக்கானதொரு குடும்ப நிறுவனம். ஷாபி மத்ஹபின் மின்ஹாஜுத் தாலிபீனின் கருத்துப்படி, திருமணம் என்பது திருமணத்தின் தேவையை உணர்கின்ற, திருமணம் முடிப்பதால் வருகின்ற பொருளாதாரக் கடப்பாடுகளை சுமக்க முடியுமான ஒவ்வொரு ஆணுக்கும் விதந்துரைக்க முடியுமான ஒன்று.

நூருல் நழீபா எதிர் மரிக்கார் ஹாஜியார் வழக்கில் நீதிபதி கனகரத்ன குறிப்பிடுவதன்படி, முஹம்மதிய சட்டத்தில் திருமணம் என்பது வெறுமனே ஓர் ஒப்பந்தம். எம்.ஏ. குறைஷி தனது முஸ்லிம் திருமண, விவாகரத்து, பராமரிப்புச் சட்டம் என்ற நூலில், முஸ்லிம் திருமணம் என்பது ஒரு மார்க்கக் கடமையும் ஓர் ஒப்பந்தமுமாகும் என்று குறிப்பிடுகின்றார்.

திருமண ஒப்பந்தம் துணைவர்களுக்கிடையில் பரஸ்பர உரிமைகளையும் கடமைகளையும் தோற்றுவிப்பதோடு, அவர்களது குழந்தைகளுக்கு சட்டபூர்வ அந்தஸ்தையும் பெற்றுக் கொடுக்கிறது. அந்த வகையில் திருமண ஒப்பந்தத்தின் இரு தரப்புகளும் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கும் நெறிமுறைகளுக்கும் முரண்படாத எந்த விதி முறைகளையும் ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொள்ள முடியும்.

இலங்கை முஸ்லிம்களுக்கான திருமணச் சட்டங்கள், 1951 ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் 16 ஆம் பிரிவில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்படி, முஸ்லிம் விவாகம் ஒன்று செல்லுபடியாவதில் திருமணத்தைப் பதிவு செய்வது எந்த முக்கியத்துவத்தையும் பெறுவதில்லை. அது திருமணத்துடன் தொடர்புடைய தரப்பினரின் மத்ஹபுகளின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும் என்று குறிப்பிடுகிறது.

சித்தீக் எதிர் சியாம் (2006) வழக்கில் ஷரீஆ விதிகளுக்கும் சட்ட ஏற்பாடுகளுக்கும் முரணான திருமணங்களைப் பதிவு செய்வது பயனற்றதாகும் என காதிகள் சபை தீர்ப்பு வழங்கியது. சட்டத்தில் மேலும் குறிப்பிடப்படுவதன்படி, எந்த முஸ்லிம் திருமண விவகாரங்களிலும், அதனுடைய நிலையும் இரு தரப்புகளுக்கும் இடையிலான உரிமைகளும் கடமைகளும் அந்தந்தத் தரப்புடைய மத்ஹபுகளின் சட்டங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்பட வேண்டும். ஆகவே, திருமணம் என்பது ஷரீஅத் ஆளுகைக்குட்பட்டு முஸ்லிம் விவாக விவாகரத்துச்



சட்டத்தின் சட்டபூர்வமான கட்டமைப்புக்குள்ளால் நிறைவேற்றப்படும் ஒரு விடயமாகும்.

### மத்ஹபும் அதன் முக்கியத்துவமும்

முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் 16 மற்றும் 98 (02) ஆம் பிரிவுகளில் மத்ஹப் முக்கியத்துவம் பெறுகின்றது. இஸ்லாத்தில் ஷீஆ, ஸுன்னி என்ற இரண்டு சமயப் பிரிவுகளே (Sect) இருக்கின்றன. ஸுன்னி முஸ்லிம்களில் ஷாபி, ஹனபி, மாலிகி, ஹம்பலி ஆகிய சிந்தனைப் பிரிவுகள் இருக்கின்றன. ஷீஆக்களில் இஸ்னா அஷரி, இஸ்மாஈலி (இதன் உபபிரிவான தாவூதிக்களில் போராக்கள் உள்ளடங்குவர்), ஸெய்தீ ஆகிய மூன்று சிந்தனைப் பிரிவுகள் இருக்கின்றன.

யாரேனும் ஒருவர் அவர் தனது மத்ஹபை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகளை முன்வைக்காதவரை இலங்கை முஸ்லிம்கள் எவரும் ஷாபி மத்ஹபைச் சார்ந்தவர்களே என்று தான் எமது நீதிமன்றங்கள் தொடர்ச்சியாகக் கருதி வருகிறது. எப்படியிருப்பினும் ஷாபி போன்ற சிந்தனைப் பிரிவு (School of thought) என்பது ஒரு வழி அல்லது மத்ஹபே அன்றி சமயப் பிரிவு (Sect) அல்ல என்பதை மறந்துவிடக் கூடாது.

ஒருவர் ஷாபி மத்ஹபைச் சார்ந்தவர் என்பது, அவர் அந்த மத்ஹபுடைய மரபுகளை கடுமையாகக் கடைப்பிடிப்பதாகும். அவர் வேறு மத்ஹபைச் சார்ந்தவர் என்பதை வெளிப்படுத்தினாலன்றி அவர் தனது மத்ஹபுக்கு வெளியால் செல்வதற்கான சுதந்திரம் அவருக்கு இல்லை. இதனால்தான் ஏ.எல்.எம். ஹனிபா எதிர் ஏ.ஏ.ரஸாக் வழக்கில் (1953), வலீயின் சம்மதம் இல்லாமல் திருமணம் செய்வதற்காக ஹனபி மத்ஹபுக்கு மாறுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சியின் போது, ஷாபி பெண்ணுக்கு அவளது மத்ஹப் கட்டாயமாக்கப்பட்டது.

மத்ஹபுகளை முன்வைத்தே இந்த நெகிழ்வற்ற தன்மைகளுக்கிடையில் இணக்கம் காண முடியாதா என்றொரு கேள்வி எழுகிறது. ஏனெனில் இமாம் ஷாபிஈ இமாம் மாலிக்கின் மாணவராக இருந்தவர். இமாம் ஷாபிஈயின் ஒரே மகன் இமாம் ஹம்பலியிடம் படித்த மாணவர். இமாம் மாலிக்கை விட அறிவில் சிறந்தவரில்லை என இமாம் ஷாபி கருதினார்.

அதே போல பிக்ஹ் விடயங்களில் நாங்கள் எல்லோருமே இமாம் அபூஹனிபாவையே பின்பற்றுகிறோம் என இமாம் ஷாபி தெரிவித்திருக்கிறார். (பத்ஹுத் தையான்) மக்களை ஷாபி, ஹனபி, மாலிகி, ஹம்பலி என சமயப் பிரிவுகளாக (Sect) தீவிரமாய் வகைப்படுத்துவது குர்ஆனின் போதனைகளுக்கும் முரணானது (சூறா அல் அன்ஆம் 159).

இது உண்மையில் நடைமுறைக்கும் பொருந்தாதது. எடுத்துக் காட்டாக ஷாபி மணப்பெண்ணுக்கும் ஹனபி மணவாளனுக்கும் திருமணம் நடப்பதாக வைத்துக் கொள்வோம். இந்த சம்பவத்தில் மத்ஹபுக்குரிய சட்டங்களே திருமணத்தின் போது செல்லுபடியாகும் என சட்டம் சொல்வதால், இதுபோன்ற நிலைமைகளில் பல பிரச்சினைகள் எழுகின்றன. முதலாவதாக, ஹனபி மத்ஹபின்படி வலீ இன்றி இந்தத் திருமணம் நடந்தால் அது செல்லுபடியாகுமா?

இரண்டாவதாக, வலி சம்மதம் கொடுத்ததாக வைத்துக் கொண்டு, சாட்சிகளாக ஒரு ஆணும் இரண்டு பெண்களும் மட்டுமே அந்த நிகாஹில் கலந்து கொண்டார்கள் என்று வைத்துக் கொள்வோம். ஹனபி மத்ஹபின்படி திருமணம் செல்லுபடியாகும். ஷாபி மத்ஹபின்படி அது செல்லுபடியாகாது. இரு தரப்பினரதும் மத்ஹபின் அடிப்படையில் திருமணம் நிர்ணயிக்கப்படும் என்றிருந்தால் இந்த விடயத்தில் யாருடைய மத்ஹபின் அடிப்படையில் திருமணம் நடத்துவது?

எனவே கணிசமான எண்ணிக்கையில் ஹனபி மத்ஹப் சார்ந்தவர்களும் இலங்கையில் இருக்கின்ற நிலையில் சமயப் பிரிவுகளைச் சார்ந்து சட்டப் பிரிவுகளை வகைப்படுத்துவது பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கும். ஷாபி, ஹனபி, மாலிகி, ஹன்பலி போன்ற பெரும் மத்ஹபுகளை சட்டப் பிரிவுகளாக (School of Law) நாங்கள் கருத முடியுமென்றால், நீதிமன்றங்கள் தகய்யுர் அடிப்படையில் சிறந்த தீர்வொன்றைப் பெற முடிவதோடு பரந்துபட்ட சுன்னி சட்டமொன்றையும் எம்மால் பெற முடியும்.

### முஸ்லிம் திருமணத்துக்கு அவசியமானவை

1. திருமணம் முடிக்கவோ முடித்துக் கொடுக்கப்படவோ உள்ள இயலுமை
2. இரு தரப்பினரதும் உடன்பாடு
3. திருமணத்துக்கான சம்பிரதாயங்கள் பேணப்படுதல்
4. சட்ட ரீதியான இடையூறுகள் ஏதும் இல்லாமலிருத்தல்
5. மஹர் செலுத்தப்படல்

### 1. திருமணத்துக்கான இயலுமை

முஸ்லிம் சட்டத்தின்படி, எவரும் திருமண ஒப்பந்தத்தில் இணைக்கப்பட முடியும். ஆனாலும் சித்த சுவாதீனமுள்ள, பருவ வயதை அடைந்த எவரும் அவர்களாகவே திருமண ஒப்பந்தமொன்றைச் செய்ய முடியும். முஸ்லிம் சட்டத்தில் திருமணத்துக்கு அவசியமானவைகளில் முதன்மையானது, இரு தரப்பும் திருமண ஒப்பந்தத்தில் இணைய முடியுமான இயலுமையைக் கொண்டிருப்பதாகும். இதற்கான இயலுமை இல்லாத பட்சத்தில் வலி ஒருவரின் துணையுடன் திருமண ஒப்பந்தத்தில் இணைவதாகும்.

வலீ தொடர்பாக இரண்டு வித விளக்கங்கள் மின்ஹாஜுத் தாலிபீனில் சொல்லப்பட்டுள்ளன. தாம் விரும்புகின்ற வகையில் ஒரு பெண்ணை கையளிக்கக் கூடிய உரிமை உள்ளவர்கள் (உ+ம் - தந்தை, தந்தையின் தந்தை) முதலாவது வகை. இரண்டாவது வகையினர், அவர்களுக்கு கையளிக்கின்ற உரிமை கிடையாது. ஆனால், திருமணத்தின் போது வலீயாக இருந்து உதவி செய்யக் கூடிய உரிமை பெற்றவர்கள். இவர்களில் தந்தை, தந்தையின் தந்தை, தந்தையின் தந்தையின் தந்தை, தந்தைவழி நேரடிச் சகோதரர்களும் திருமண பந்தத்தால் வந்த சகோதரர்களும், அந்தச் சகோதரர்களின் மகன்கள் அல்லது ஆண் வாரிசுகள், தந்தையின் சகோதரர்கள், இந்த ஒழுங்கில் வரும் ஆண் வாரிசுகள். இறங்கு வரிசையில் (தாய்க்கு மகன் வலீயாக இருத்தல்) வலீ அமைய முடியாது.

திருமண ஒப்பந்தத்தில் தாமாகவே இணைவதற்கான இயலுமை அற்ற இளவயதினருக்கு வலீ கொடுக்கும் ஜப்ர் முறைமை முஸ்லிம் சட்டத்தில் இருக்கிறது. முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் குறைந்தளவு திருமண வயதை நிர்ணயிக்கவில்லை. இது சிறுவயதுத் திருமணத்துக்கு இலங்கையில் அங்கீகாரத்தை வழங்குகிறது. ஓர் ஆண் பிள்ளைக்கான ஜப்ர் அதிகாரம், அவர் பருவமடைந்ததும் நிறைவுறுகிறது. ஷாபி மத்ஹபின் படி, ஒரு பெண்ணுக்கான ஜப்ர் அவள் கன்னியாக இருக்கும் வரை தொடர்கிறது.

இமாம் ஷாபி உடைய கருத்தின்படி, ஒரு பெண் கன்னியாக இருக்கும் வரை, அவளுடைய விருப்பமின்றியே அவளை திருமண ஒப்பந்தத்தில் கையளிக்கும் உரிமை தந்தைக்கு இருக்கிறது என்கின்றது. (ஹனபி மத்ஹபில் பெண்பிள்ளை பருவமடைந்ததும் ஜப்ர் முற்றுப் பெறுகின்றது)

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# கமரும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும்

இலங்கைக்கு சர்வதேச நாடுகள் விடுத்த அழுத்தங்களின் பின்னணியில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (CTA) அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த பயங்கரவாத தடைச் சட்டம் (PTA) வீரியம் போதாது என்பதனை எடுத்துக் காட்டியே புதிய சட்டம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்தின்படி பயங்கரவாதச் செயல் எனக் கருதப்படுகின்ற எந்தச் செயலுடனும் சம்பந்தப்பட்ட எவரும் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்படுவதற்கான அவகாசம் இருக்கின்றது. இது வகை தொகையின்றி யாரும் கைது செய்யப்படுவதற்கும் தண்டிக்கப்படுவதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது.

யாரையும் கைது செய்வதற்கு குறித்த நபர் தாம் பயங்கரவாதச் செயல் எனக் கருதுகின்ற எந்தச் செயற்பாட்டுடனும் தொடர்புடையவர் என நிரூபித்தல் போதுமானது. அந்த வகையில் எவரதும் சமய ரீதியான செயற்பாடுகள், சமூக ரீதியான செயற்பாடுகள் அனைத்துமே சந்தேகத்துக்கு உள்ளாக்கப்பட்டு, அது பயங்கரவாத நடவடிக்கையாக உருமாற்றப்பட்டு, பயங்கரவாதத்தைத் தடுத்தல் என்ற பெயரில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் ஊடாக கைது செய்யப்பட முடியும்.

அவுஸ்திரேலியாவில் கைது செய்யப்பட்ட கமர் நிஸாம்தீனின் நிலைமை இதற்கு நல்ல சான்று. தனது நோட்புக்கில் சிட்னி நகரின் அழகிய புகைப்படங்களை வைத்திருந்தமைக்காகவும், 'ஏனைய பகுதிகளுக்கு' விஜயம் செய்தமைக்காகவும் அவரை ஒரு ஐ.எஸ். தீவிரவாதி என்ற கருத்தில் அவுஸ்திரேலியாவின் பயங்கரவாத எதிர்ப்புப் பொலிசார் அவரைக் கைது செய்திருக்கிறார்கள். அவர்களது சந்தேகத்துக்குட்பட்ட வகையில் அவர் சில மத்திய கிழக்கு நாடுகளுக்கு பயணித்துள்ளமை அவர் மீது சந்தேகம் வருவதற்கான காரணமாகச் சொல்லப்பட்டுள்ளது.

சந்தேகத்துக்கிடமானதாகக் கருதப்படுகின்ற சிரியா கூட அவரது பயணப் பட்டியலில் இருக்கவில்லை என்பதோடு சந்தேகத்துக்கு இடமே இல்லாத அமெரிக்காவுக்கும் அவர் பயணித்திருக்கிறார். இருந்த போதிலும் அவரது வெளிநாட்டுப் பயணங்களைக் காரணம் காட்டி அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் ஒரு முஸ்லிமாக இருந்தமை இந்தச் சந்தேகத்துக்கு மேலும் எண்ணெய் வார்த்திருக்கிறது.

இப்படி தனக்கு வேண்டாத எவர் மீதும் பயங்கரவாதக் குற்றச்சாட்டின் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வழியமைக்கிறது. கமருடைய நிலைமையைப் பார்த்தால் போர்ட் சிட்டிக்கு முன்னால் நின்று எடுக்கப்படுகின்ற புகைப்படங்கள் கூட ஒருவரை பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்வதற்குப் போதுமான சான்றுகளாக அமைய முடியும். இலங்கையிலிருந்து அரபு நாடுகளுக்குப் பயணிக்கின்ற எவரையும் பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கான நடவடிக்கை எனக் கூறி கைதுசெய்ய முடியும்.

இத்தகையதொரு அபாயமான நிலைமை ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதனைக் கருத்தில் கொண்டே இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கான எதிர்ப்பு பல்வேறு தரப்புக்களில் இருந்தும் கிளம்பியிருந்தது. இனவாத உணர்வுகள் மேலோங்கியுள்ள தற்போதைய சூழலில் இந்தச் சட்டம் குறித்த இனமொன்றை ஒடுக்குவதற்காகவும் பயன்படுத்தப்பட முடியும் என்ற அச்சம் பரவலாக நிலவியது. தமக்கு இசைவாகாத நபர்களை அல்லது சமூகத்தை அல்லது குழுக்களை பணிய வைப்பதற்காகவும், தனிப்பட்ட பழிவாங்கல்களுக்காகவும் கூட இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட முடியும். ஒரு சமூகத்தின் மீது வெறுப்பை உமிழ்வதற்காக அந்தச் சமூகத்தை பயங்கரவாத இயக்கங்களுடன் தொடர்புபடுத்தி அவர்களுக்கெதிராக வெறுப்பை விதைக்கின்ற இலங்கைச் சூழலில் இந்தச் சட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பது கவனமாகக் கையாளப்பட வேண்டிய விடயமாகும்.

பயங்கரவாதம் எந்த வடிவில் வந்தாலும் எந்தத் தரப்பிலிருந்து வந்தாலும் நிச்சயமாக அது முறியடிக்கப்பட்டே ஆக வேண்டும். அதற்காக நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் ஒத்துழைத்தே ஆக வேண்டும். ஆனால் இந்தச் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்து யாருக்கும் அநீதி நடக்காமல் பாதுகாக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும். பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுலில் இருந்த வேளையிலேயே அநியாயமான கைதுகளும் காணாமலாக்கப்படுதல்களும் கொலைகளும் நடந்தேறியிருக்கின்றன. அந்தச் சட்டம் போதாதென்று தான் புதிதாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வரவிருக்கிறது. பழைய சட்டத்திலேயே நிறைய அநியாயங்களும் அநீதிகளும் நடந்திருக்கின்ற நிலையில் புதிய சட்டம் பற்றி மக்களிடையே இருக்கின்ற அச்சத்துக்கு அரசாங்கம் தெளிவுவழங்க வேண்டும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. 96, கிருலை வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : srockwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

• நிலந்த இளங்கமுவ

கடந்த புதன்கிழமை கொழும்பில் தலைநகரின் இதயமான பகுதியில் மகிந்த மீண்டும் தனது பலத்தைக் காட்ட முயன்றிருக்கிறார். இவ்வாண்டு அவர் இவ்வாறு தன் பலத்தைக் காட்டுவது இது மூன்றாவது தடவை. கடந்த மே தினத்தன்று காலிமுகத்திடலை அவர் தனது ஆதரவாளர்களால் நிறைத்தார். அது ஒரு பிரமாண்டமான சனத்திரள். அதன்பின் கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அவர் தன் பலத்தைக் காட்டியிருந்தார்.

இந்த வரிசையில் பார்த்தால் கடந்த புதன் கிழமை அவர் ஒழுங்குபடுத்திய ஆர்ப்பாட்டம் ஏறுமுகமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அது அப்படி அமையவில்லை. கொழும்பிற்கு வெளியிலிருந்து ஆயிரக் கணக்கானவர்களை அவர்களால் திரட்ட முடிந்தது. அத்தொகை கிட்டத்தட்ட ஒன்றரை லட்சம் வரை வரலாம் என்று கணிக்கப்படுகிறது. ஆனால் இரவானதும் அதில் பலர் ஊருக்குத் திரும்பி விட்டார்கள். இரவுப் போராட்டத்தில் கிட்டத்தட்ட இருபதினாயிரத்திற்கும் குறையாத தொகையினரே பங்குபற்றியதாகக் கணக்கிடப்படுகிறது.

வும் பேணிப் பாதுகாக்கப்படும் ஒரு கூட்டு உளவியல் அது. மகிந்த அதற்குத் தலைமை தாங்குகிறார். எனினும் கடந்த புதன்கிழமை அது எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. ஏனெனில் ராஜபக்ஷாக்களுக்கிடையே நிலவும் வாரிசுப் போட்டியே காரணமென்று கருதப்படுகிறது.

புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தை ஒழுங்குபடுத்தியது நாமல் ராஜபக்ஷ. அவரை எதிர்காலத்தில் தலைவராக ஸ்தாபிப்பதற்கு உரிய அடித்தளத்தை உருவாக்குவதும் இந்த ஆர்ப்பாட்டத்தின் ஒரு நோக்கம்தான். ராஜபக்ஷ குடும்பத்தில் யுத்தக் குற்றச்சாட்டிற்கு இலக்காக முடியாத வாரிசுகளில் ஒருவர் நாமல். மற்றவர் பசில். கடந்த மே நாள் கொண்டாட்டத்தை பசிலே ஒழுங்குபடுத்தினார். அது அவருடைய ஒழுங்குபடுத்தும் திறனுக்கு ஒரு சான்றாகக் காட்டப்பட்டது. ஆனால் கடந்த புதன் கிழமை நடந்த ஆர்ப்பாட்டம் நாமலுக்கு பெரு வெற்றியாக அமையவில்லை.

19ஆவது சட்டத் திருத்தத்தின் படி ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு வயதெல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த வயதை அடையும் வரை நாமல் போட்டியிட முடியாது.

மகிந்த தொடர்ந்தும் பலமாக இருந்தால் அது சீனாவுக்கு உற்சாகமூட்டும். ஆனால் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் அது அச்சத்தையும், எரிச்சலையும் கொடுக்கும். கோத்தபாய அடுத்த அரச தலைவராக வருவதை அமெரிக்கா விரும்பவில்லை என்பதை இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் மறைமுகமாக உணர்த்தியிருந்தார்.

இந்நிலையில் மகிந்த அணி மேலும் மேலும் தனது பலத்தைக் காட்ட முற்படுவதை அமெரிக்கா, எப்படிப் பார்க்கும்? இந்தியா எப்படிப் பார்க்கும்? நிச்சயமாக அவர்கள் மகிந்தவின் மீள் வருகையைத் தடுக்கவே முயற்சிப்பார்கள். அதற்கு எல்லாவிதமான வழி வகைகளையும் அவர்கள் பயன்படுத்துவார்கள். 2015 இல் மகிந்தவைக் கவிழ்க்க அவர்கள் எப்படியெல்லாம் காய்களை நகர்த்தினார்களோ அப்படியே இப்பொழுதும் யோசிப்பார்கள். தமக்கு விசுவாசமான ரணில் - மைத்திரி அரசாங்கத்தை எப்படியாவது பாதுகாக்க முயற்சிப்பார்கள்.

இது மகிந்தவுக்கும் தெரியும். முப்பெரும் வல்லரசுகள் மோதும் ஒரு ஆடுகளத்தில் தானும் ஒரு துருப்புச் சீட்டு என்பது அவருக்கு நன்கு தெரியும். அவருடைய இந்திய விஜயத்தின்



# பலம் காட்டும் மஹிந்த

நிதிக் குற்ற விசாரணைப் பிரிவு, விசேட உச்ச நீதிமன்றம் போன்றவற்றை அவர்கள் முற்றுகையிடக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அப்படியெதுவும் நடக்கவில்லை. அன்றைய இரவை உறங்கா இரவாக மாற்றப் போவதாக மகிந்த அணி அறிவித்திருந்தது. ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் போதையில் தடுமாறும் காட்சிகளும், வீதிகளில் வீழ்ந்து கிடக்கும் காட்சிகளும் ஆர்ப்பாட்டத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்துவிட்டன.

இதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. இலங்கைத் தீவில் மட்டுமல்ல இந்தியாவிலும் இது போன்ற ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் தன்னியல்பாக நடப்பது குறைவு. மனோ கணேசன் கூறுவது போல இது 'அரப் ஸ்பிரிங்' அல்ல. அரப் ஸ்பிரிங்கில் கூட மேற்கத்தைய முகவர்கள் பின்னணியில் இருந்தார்கள். எனவே செல்பி யுகத்தில் தன்னியல்பான எழுச்சிகள் என்று கூறப்படும் பல ஆர்ப்பாட்டங்கள் தன்னியல்பானவையல்ல. இவற்றில் பெரும்பாலானவை ஏற்கெனவே கிராம மட்டத்திற் காணப்படும் கட்சி வலைக்கட்டமைப்புக்களின் ஊடாக நன்கு திட்டமிட்டு ஒழுங்குபடுத்தப்பட்டவைதான்.

எத்தனை பேரைத் திரட்டுவது? எப்படித் திரட்டுவது? யார் திரட்டுவது? எப்படி ஒரு மையமான இடத்திற்கு கொண்டு வருவது? வாகன ஒழுங்குகளை யார் செய்வது? சாப்பாட்டை, சிற்றுண்டியை யார் ஒழுங்குபடுத்துவது? போன்ற யாவும் முன்கூட்டியே மேலிருந்து கீழ்நோக்கி செம்மையாகத் திட்டமிடப்படும். பங்குபற்றும் சாதாரண சனங்களைக் கவர்வதற்கு காசைக் கொடுப்பதா? மதுவைக் கொடுப்பதா? அல்லது வேறெதைக் கொடுப்பது? போன்றவையும் நன்கு திட்டமிடப்படுகிறது. இது போன்ற ஆர்ப்பாட்டங்களுக்கு ஒரு பட்ஜட் இருக்கும். எவ்வளவு பேரைத் திரட்டுவது என்பதையும் பட்ஜட்டே தீர்மானிக்கின்றது.

மகிந்தவுக்கு ஆதரவான மக்கள் திரள் எனப்படுவது அதன் முதலாவது பொருளில் யுத்த வெற்றிவாதத்திற்கு ஆதரவானதுதான். யுத்த வெற்றிவாதம் எனப்படுவது இனவாதத்தின் 2009 இற்குப் பிந்திய வடிவம்தான். எனவே மகிந்தவிற்காகச் சேரும் கூட்டமென்பது அதிக பட்சம் இனவாதத்திற்காகச் சேரும் கூட்டம் தான். அதை மகிந்ததான் திரட்ட வேண்டும் என்றில்லை. அது ஏற்கெனவே நன்கு நிறுவனமயப்பட்ட ஒன்றுதான். இலங்கைத் தீவின் இனவாதமென்பது கடந்த பல நூற்றாண்டுகளாக நன்கு நிறுவனமயப்பட்டிருக்கும் ஒரு கூட்டு உளவியலாகும்.

மகாசங்கம், யாப்பு, நாடாளுமன்றம், கட்சிகள், நீதிபரிபாலனக் கட்டமைப்பு, படைக் கட்டமைப்பு, அதிகாரப் படிநிலைக் கட்டமைப்பு, [illegible] என்று பல்வேறு கட்டமைப்புக்களிற்கூடாக

எனினும் எதிர்காலத் தலைமைத்துவத்திற்கு மகிந்த தன் வாரிசைத் தயார்ப்படுத்துகிறார்.

வரும் ஆண்டு மாகாண சபைகளுக்கான தேர்தலும் ஆண்டின் இறுதியில் ஜனாதிபதித் தேர்தலும் நடக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சம்பந்தரும், சுமந்திரனும் நம்புவது போல ஒரு புதிய யாப்பு உருவாக்கப்பட்டால் வருமாண்டில் ஜனாதிபதித் தேர்தலைப் பற்றி அஞ்சத் தேவையில்லை. ஆனால் மனோ கணேசன் கூறுவது போல யாப்பு மாற்றப்படவில்லையென்றால் மகிந்த அணி அத்தேர்தலின் மூலம் தலைகீழ் மாற்றத்தைக் கொண்டு வந்து விடும். அது இச்சிறிய தீவில் இப்போதுள்ள வலுச் சமநிலையை மட்டுமல்ல இப்பிராந்தியத்தின் இப்போதுள்ள வலுச் சமநிலையையும் மாற்றி விடக்கூடும். அது உலகப் பரப்பிலும் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும்.

எனவே வருமாண்டு ஒரு தேர்தலாண்டாக இருக்கலாம் என்ற ஓர் எதிர்ப்பார்ப்பின் பின்னணியில் மகிந்த இந்த ஆண்டு மூன்றாவது தடவையாக தனது பராக்கிரமத்தைக் காட்ட முற்பட்டார். அதுமட்டுமல்ல இவ்வாரம் புதுடில்லியில் மகிந்த உட்பட ஏனைய எல்லாக் கட்சித் தலைவர்களும் வெவ்வேறு நிகழ்வுகளில் பங்குபற்றுகிறார்கள். மகிந்த சுப்பிரமணிய சுவாமியின் அழைப்பின் பேரில் போகிறார். ஏனைய கட்சித் தலைவர்கள் இந்திய நாடாளுமன்றத்தின் அழைப்பின் பேரில் போகிறார்கள். இவர்கள் அனைவரும் ஒரே காலப்பகுதியில் புதுடில்லியில் தங்கியிருப்பார் கள். இவர்களை இந்திய அரசின் பிரதானி களும் அதிகாரிகளும் சந்திக்கவிருக்கி றார்கள். இப்படியொரு பின்னணிக்குள்ளும் மகிந்த தனது பலத்தைக் காட்ட முற்பட்டிருக்கிறார்.

அரசியலில் ஒரு தரப்பு தனது பலத்தை எதிரிக்கு எப்பொழுது காட்டலாம்? எப்பொழுது காட்டக்கூடாது? இக்கேள்விக்குப் பதில் காண்பதென்றால் மகிந்த யார் யாருக்குத் தனது பலத்தைக் காட்ட முற்படுகிறார் என்று பார்க்க வேண்டும். முதலாவதாக ரணில் - மைத்திரி அரசாங்கத்திற்கு இரண்டாவதாக இந்தக் கூட்டரசாங்கத்தைப் பின்னிருந்து ஆதரிக்கும் மேற்கு நாடுகளுக்கு. மூன்றாவதாக இந்தியாவிற்கு.

இவ்வாறு தனது பலத்தைக் காட்டுவதன் மூலம் இப்பிராந்தியத்தில் தான் ஓர் இன்றியமையாத தலைவர் என்ற செய்தியை மேற்படி தரப்புக்களுக்கு மகிந்த உணர்த்த முற்படுகிறார். யாப்பை மாற்றுவதும் மாற்றாமல் விடுவதும் கூட தனது கையில்தான் இருக்கிறது என்பதை அவர் காட்ட முற்படுகிறார். யாப்பை மாற்றாவிட்டால் அடுத்த அரசுத் தலைவருக்கான தேர்தலில் தனது அணி வெற்றி பெறுவதை யாரும் தடுத்து நிறுத்த முடியாது என்பதையும் மேற்படி தரப்புக்களுக்கு உணர்த்த முற்படுகிறார். இது எவ்வாறான எதிர் விளைவுகளை ஏற்படுத்தும்?

போது இது அவருக்கு உணர்த்தப்படும். எனினும் அவர் ஏன் திரும்பத் திரும்ப தனது பலத்தைக் காட்டப் பார்க்கிறார்? தனக்கு எதிராக உள்நாட்டிலும், பிராந்திய அளவிலும் உலக அளவிலும் காய்கள் நகர்த்தப்படும் என்று நன்கு தெரிந்திருந்தும் அவர் ஏன் இப்படிச் செய்கிறார்?

மக்கள் சக்தி எனப்படுவது அரசியலில் ஒரு கவர்ச்சியான தோற்றப்பாடுதான். ஜனநாயக அரசியலில் அது தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் ஒரு பிரதான தோற்றப்பாடாகும். ஆனால் சிறிய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடும் பெரிய நாடுகள் மக்கள் சக்தியைப் பொருட்படுத்தாது முடிவெடுத்த பல சந்தர்ப்பங்கள் உண்டு. மக்கள் ஆணையைப் பெற்ற ஜனவசியம் மிக்க, பல தலைவர்கள் அவர்களைத் தெரிந்தெடுத்த மக்களின் பெரு விருப்பங்களுக்கு மாறாக கவிழ்க்கப்பட்டிருக்கிறார்கள். சூதான சதிகள் மூலம் அரங்கிலிருந்து அகற்றப்பட்டிருக்கிறார்கள்.

பேரரசுகள் தமது பிராந்திய மற்றும் உலகளாவிய வியூகத் தேவைகளுக்காக சிறிய பலங்குன்றிய நாடுகளின் தலைவர்களைக் கவிழ்த்த பல முன்னுதாரணங்கள் உண்டு. குறிப்பாக பேரரசுகளின் இழுவிசைக் களத்தில் அமைந்திருக்கும் இலங்கைத் தீவு போன்ற நாடுகளின் தலைவர்கள் யார் என்பதைப் பேரரசுகளே பெரிதும் தீர்மானிக்கின்றன. அப்படித்தான் மகிந்தவும் கவிழ்க்கப்பட்டார். ரணில் - மைத்திரி ஆட்சி உருவாக்கப்பட்டது. அண்மையில் பாகிஸ்தானிலும் இதுதான் நடந்தது. இம்ரான் கானைத்தான் மக்கள் தெரிந்தெடுக்க வேண்டும் என்பதை படைத்தரப்பே தீர்மானித்தது. படைத்தரப்பு என்ன முடிவெடுக்க வேண்டும் என்பதை வெளித் தரப்புக்கள் தீர்மானித்தன.

எனவே மகிந்த நம்புவது போல அவருக்குப் பின்னாலுள்ள மக்கள் பலத்தைக் கண்டு பேரரசுகள் பயப்படும் என்பதற்கும் அப்பால், அவை அவருடைய மீள்வருகையைத் தடுக்கும் விதத்தில் தற்காப்பு மற்றும் முற்தடுப்பு நடவடிக்கைகளில் இறங்கக் கூடுமென்பதே இப்போதுள்ள இலங்கைத் தீவின் கள யதார்த்தமாகும். இவ்வாறு மேற்படி நாடுகள் முற்தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தால் மகிந்த நம்புவது போல நிலமைகள் தொடர்ந்தும் இப்படியே இருக்கும் என்பதல்ல. அரசாங்கம் சில வேளை தேர்தல்களை ஒத்தி வைக்கலாம். அல்லது புதிதாகச் சட்டங்களை இயற்றி மகிந்த அணியை தொடர்ந்து முன்னேற விடாமல் தடுக்கலாம்.

உதாரணமாக இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிடுவதென்றால் அப்பிரஜாவுரிமையை போட்டியிடுவதற்கு ஓராண்டுக்கு முன்னரே துறக்க வேண்டும் என்ற ஒரு சட்டத்தை உருவாக்குவது பற்றி அரசாங்கம் சிந்திக்கின்றது. இது கோத்தபாய, பசில் போன்றவர்களை (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சியில் அதிகரிக்கும் அமெரிக்க இஸ்ரேலிய செல்வாக்கு

• அபூ ஆகிப்

வரலாற்றில் எப்போதுமில்லாதவாறு பாதுகாப்புத் துறையின் 2019 ஆம் ஆண்டுக்கான பதீட்டில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார். அமெரிக்காவின் வரரலாற்றில் எதிர்வரும் ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவீனமே முன்னொருபோதும் இல்லாத அளவு மிக உயர்வானது எனக் க்கருதப்படுகின்றது. இது அமெரிக்கா தனது படைப் பலத்தை மென்மேலும் வலுப் படுத்தும் நோக்கில் மட்டுமன்றி, ஆதரவு நாடுகளின் படைப் பலத்தைப் பெருக்கவும் பயன்படுத்தப்படவுள்ளது,

பூகோள அரசியல் நலன்களை தனது வசதிக்கேற்ப கையாண்டு வரும் அமெரிக்கா, ஏற்கனவே வருடாந்தம் இராணுவ உதவியளிக்கும் பட்டியலொன்றைப் பராமரித்து வருகின்றது. அதில் அமெரிக்காவின் அதிகூடிய இராணுவ உதவித் தொகை பெறும் நாடாக இஸ்ரேலும், அதற்கடுத்த நிலையில் எகிப்தும் இருந்து வருகின்றன. அமெரிக்காவின் இத்தகைய இராணுவ உதவிகளைப் பெறும் நாடுகளின் பட்டியலில் இம்முறை இலங்கையும் இணைக்கப்பட்டுள்ளமை கவனிப்புக்குரியது.

தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளில் இலங்கையும் இந்தியாவும் பூகோள பிராந்திய நலன்களில் அமெரிக்காவுக்கு மிக முக்கியமானது. 2009 முதல் 2014 வரை இலங்கை தொடர்பாக அமெரிக்கா பின்பற்றிய கொள்கை இறுக்கமானது. மஹிந்த ஆட்சி யுகத்தில் சீனா இலங்கையிலும் இலங்கையின் கடற் பரப்பிலும் பெரும் ஆதிக்கம் பெற்றது. இன்றுவரை அவ்வாதிக்கம் தொடர்கிறது. மேற்கு நாடுகளுடன் பொதுவாகவும் அமெரிக்காவுடன் குறிப்பாகவும் மஹிந்த அரசாங்கம் பின்பற்றிய இறுக்கமான கொள்கையினால் அமெரிக்கா-இலங்கை உறவில் பாரிய ராஜந்திர உராய்வுகள் நிகழ்ந்தன. இதனால் 2009 இற்குப் பின்னர் இலங்கைக்கு நேரடியாக நிதியாதரவளிப்பதை அமெரிக்கா இடைநிறுத்தி வைத்திருந்தது. இலங்கை இராணுவத்திற்குப் பயிற்சியளிப்பதோடு அமெரிக்க உதவி சுருங்கியது.

ஆயினும் 2015 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர், குறிப்பாக ரணில் ஆட்சிக்கு வந்த பின்னர் இலங்கை தொடர்பான அமெரிக்காவின் இறுக்கமான போக்கு தளர்த்தப்பட்டதோடு, இலங்கையில் படிப்படியாக அமெரிக்கச் செல்வாக்க அதிகரிக்கத் தொடங்கியது. அதில் 2015 இற்குப் பின்னர் இலங்கை கடற்படையை வலுப்படுத்தும் கடற்படை கூட்டுப் பயிற்சிகளை அமெரிக்கக் கடற்படையினர் வழங்கி வந்தனர்.

சமீபத்தில் இலங்கை கடற்படையைச் சேர்ந்த 62 கொமோன்டோக்கள் திருகோணமலை கடற்பரப்பில் பலன்ஸ் ஸ்டைல் -2018 என்ற திட்டத்தின் கீழ் அமெரிக்கக் கடற்படை உயர் அதிகாரிகள் வழங்கிய பயிற்சியில் கலந்துகொண்டனர்.



போருக்குப் பிந்திய இலங்கை அமெரிக்காவுக்கு இரண்டு வகையில் முக்கியமாகின்றது. நேரடியாக இலங்கையின் இராணுவ, அரசியல், பொருளாதாரத் துறைகளில் அமெரிக்கா அகலக் கால் பதிக்க விரும்புகின்றது. அதேபோன்று இந்தோ-பசுபிக் கடல் பிராந்தியத்த்தில் வேகமாக வளர்ந்து வரும் சீனாவின் கடல் ஆதிக்கத்தைக் கடப்படுப்படுத்த அமெரிக்கா தீவிய முயற்சிகளில் இறங்கியுள்ளது.

2019 ஆம் ஆண்டின் அமெரிக்கப் பாதுகாப்புத் துறை நிதியொதுக்கீட்டில் மேலே குறிப்பிட்ட இரண்டாவது இலக்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்கா தொடங்கியுள்ள Indo-pacific Statergy குறித்து அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் இந்தோ பசுபிக் நாடுகளுடன் விரிவாக விவாதித்து வருகிறது.

இந்தோ பசுபிக் கடல் வலயத்தை அண்டியுள்ள அனைத்து நாடுகளுக்கும் அமெரிக்கா தனது இராணுவ உதவித் தொகையை 2019 இல் அதிகரிக்கவுள்ளது. சமீபத்தில் சிங்கப்பூரில் நடைபெற்ற தெற்கு தென்கிழக்காசிய நாடுகளின் கடற்படை அதிகாரிகளுக்கான உச்சிமாநாட்டில் வழமையை விட 300 மில்லியன் அமெரிக்கத் தொகை மேலதிகமாக வழங்கப்படும் என அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், பங்களாதேஷ், நேபாள், வியட்நாம், பிலிப்பைன்ஸ், பசுபிக் தீவுகள், இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் இந்தோ-பசுபிக் மூலோபாயத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. இந்நாடுகளோடு இரு தரப்பு மற்றும் பலதரப்பு இராணுவ மற்றும் ராஜதந்திர பேச்சுவார்த்தைகளை கடந்த ஆகஸ்ட் 17 இல் அமெரிக்க ராஜாங்கப் பேச்சாளர் ஈத்தர் நோட் மேற்கொண்டிருந்தார்.

இதில் 39 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியை அமெரிக்கா இலங்கைக்கு வழங்கப் போவதாக அறிவித்துள்ளது. கடல் சார் கண்காணிப்புக்கே இவ்வுதவி வழங்கப்படுவதாக பொதுவாக அறிவிக்கப்பட்டாலும், அதில் கடல்சார் பாதுகாப்பு, மனிதாபிமான உதவிகள், அனர்த்த முகாமை, எல்லை கடந்த குற்றச்செயல்களைத் தடுத்தல், அமைதிப் படையை நிறுத்தும் ஆற்றலை வளர்த்தல் என்பன அடங்கும்.

எவ்வாறாயினும், இலங்கையின் கடற்படையை நவீன போர்ப் பயிற்சி கொண்டதும் படைக் கலன்கள் கொண்டதுமான் அலகாகப் பயிற்றுவிப்பதே ஒதுக்கப்படும் நிதியின் முக்கிய நோக்கமாகக் கருதப்படுகின்றது.

வங்காள விரிகுடாவில் அமெரிக்கா சார்பாக இலங்கைக் கடற்படையை நிறுத்துவது குறித்து இலங்கை அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக சிங்கப்பூரில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஈத்தர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமெரிக்கா தனது கடலோரக் காவல் படையிலிருந்து நீக்கப்பட்ட போர்க் கப்பலொன்றையும் இலங்கைக்கு வழங்கியுள்ளது. USCG Serman எனப்படும் இக்கப்பல் 378 அடி நீளம் கொண்டது. 1967 ஆண்டில் தயாரிக்கப்பட்டது. வியட்நாம் போரின் போது எதிரிகளின் கப்பல்களை மூழ்கடித்து வெற்றிவாகை சூடியது. கடந்த 50 ஆண்டுகள் அமெரிக்கக் கடற்படையினரால் பயன்படுத்தப்பட்ட இக்கப்பல் தற்போது இலங்கை கடற்படையினருக்கு வழங்கப்படுகின்றது.

ஏற்கனவே அமெரிக்கா 2004 ஆம் ஆண்டு கடற்படைக்கு வழங்கிய கப்பல் இப்போதும் SLNS rKj;uh எனும் பெயருடன் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் எதிர்வரும் ஆண்டிலிருந்து USCG போர்க் கப்பல்கள் இலங்கை கடற்படையினரில் பயன்பாட்டுக்கு வரவுள்ளது.

சீனாவின் செல்வாக்கை உடைத்து, ஆதிகத்தைக் குறைக்கும் நோக்கிலேயே அமெரிக்கா இலங்கைக்கு போர்க் கப்பலை வழங்க முன்வந்துள்ளது. இதற்குப் பதிலளித்துள்ள சீனா, தானும் இலங்கைக்கு போர்க் கப்பலை வழங்கப் போவதாக எச்சரித்துள்ளது. ஆனால், எந்தவகையான போர்க் கப்பலை அது இலங்கைக்கு வழங்கப் போவது என்பதை இதுவரை அறிவிக்கவில்லை.

இந்தியப் பெருங்கடலில் கட்டுப்பாட்டுக்காக மேற்குலகும் இந்தியாவும் ஒரு பக்கம் சீனா மற்றொரு பக்கம் என நடாத்துகின்ற கடல் ஆதிக்கப் போட்டி இலங்கை இழுபட்டுச் செல்கின்றது. இலங்கையில் யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது படைக் கலன்களை விற்பதற்கு மறுப்புத் தெரிவித்த நாடுகள் தற்போது அவற்றை நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளன. இது மேற்கு நாடுகள் -குறிப்பாக அதமெரிக்காவின் பூகோள பொருளாதார அரசியல் நலன்களை முன்னிறுத்தியது என்பதில் சந்தேகமில்லை.

இலங்கையில் மென்மேலும் இராணுவ மயமாக்கும் செயற்பாடுகளில் மேற்கு நாடுகள் ஈடுபட்டிருப்பது இலங்கை நலன்களுக்கு அமைவானதல்ல. இதேபோன்று 2009 இற்குப் பிந்திய ஒவ்வொரு ஆண்டிலும் சர்வதேச அல்லது தெற்காசியப் பிராந்திய பாதுகாப்பு மாநாடொன்றுக்கு இலங்கை அனுசரணை வழங்கி வருகின்றது. கடந்த 9 ஆண்டுகளாக பாதுகாப்பு நாடு கொழும்பில் நடைபெறுகின்றது. இவ்வாண்டில் நடைபெற்ற பாதுகாப்பு மாநாட்டில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. அதில் இஸ்ரேலின் இரு இராணுவ உயர் அதிகாரிகள் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளன.

இஸ்ரேல் உருவாக்கப்பட்டு அதன் 70 ஆண்டுகால வரலாற்றில் மத்திய தரைக் கடல் பகுதியில் இஸ்ரேலிய கடற்படையினர் நடாத்திய பிரமாண்டமான கடற் பயிற்சியில் இலங்கைக் கடற்படையினரும் கலந்துகொண்டிருந்தனர்.

கொழும்பில் பாதுகாப்பு மாநாடு நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முன்பாக அவுஸ்திரேலிய பல்கலைக் கழகமொன்றில் கலாநிதிக் கற்கை நெறியில் ஈடுபட்டுள்ள இலங்கை மாணவர் கமர் நிஸாம் பயங்கரவாதக் குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டார். பாதுகாப்பு மாநாட்டுக்கும் இந்தக் கைதுநடவடிக்கைக்கும் ஏதேனும் தொடர் உள்ளதா என்ற சந்தேகம் வலுத்து வருகின்றது. போருக்குப் பிந்திய இலங்கையில் அமெரிக்காவும் இஸ்ரேலும் மிக லாவகமாக ஊடுருவி வருவதையே அவற்றின் இராணுவ ராஜதந்திர உறவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இன்னொரு புறம் பல்வேறு நாடுகளின் போர்க் கப்பல்கள் அவ்வப்போது இலங்கைத் துறைமுகங்களை தரிசனம் செய்வது இலங்கையை சர்வதேச சக்திகள் திட்டமிட்ட வகையில் இராணுவப் பொறியொன்றிற்குள் சிக்க வைக்க முயல்வதையே காட்டுவதாக எட்மிரல் கொலம்பகே குறிப்பிட்டுள்ளார். ஏனெனில், இதுவரை இந்தியாவின் 82 பொர்க் கப்பல்களும் பாகிஸ்தான் 24 போர்க் கப்பல்களும் ஜப்பானின் 67 போர்க் கப்பல்களும் பங்களாதேஷின் 23 போர்க் கப்பல்களும் அமெரிக்காவின் 18 போர்க் கப்பல்களும் சீனாவின் 31 போர்க் கப்பல்களும் ரஷ்யாவின் 26 போர்க் கப்பல்களும் இலங்கைத் துறைமுகங்களுக்கு வந்துள்ளன.

கொலம்பகேயின் கருத்தை வைத்து நோக்கும்போது சர்வதேச சக்திகளின் இராணுவமயமாக்கல் நிகழ்ச்சி நிரலுக்குள் இலங்கை அகப்பட்டு விட்டதோ என்று அஞ்ச வேண்டியுள்ளது. இலங்கை அரசாங்கமே நினைத்தாலும் இதிலிருந்து வெளியேறி விட முடியாமல் போகும் என்பதையே எட்மிரல் கொலம்பகேயின் கருத்து உணர்த்தி நிற்கின்றது.

# பலதார மணத்தைக் கட்டுப்படுத்தலும் நிபந்தனையிடலும்

## மொரோக்கோவின் குடும்பவியல் சட்டக்கோவை

### - ஓர் அனுபவப் பகிர்கை -

இலங்கையின் இன்றைய முஸ்லிம் தனியார் சட்ட சீர்திருத்தம் தொடர்பான விவாதத்தில் கருத்தொருமைப்பாட்டிற்கு வர முடியாதுள்ள பரிமாணங்களில் பலதார மணமும் ஒன்று. பலதாரமணத்திற்கு நிபந்தனையிடலாமா? அதன் மூலம் கட்டுப்பாடற்ற வகையில் நிகழும் பலதாரமணங்களின்; தீமைகளைத் தடுக்கலாமா? என்பதே இங்குள்ள விவாதமாகும்;. 1951 இன் 24 ஆம் சட்டத்தின் 04 ஆம் பிரிவு கணவன் விரும்பினால் 02 ஆம், 03ஆம், 04 ஆம் பெண்களைத் திருமணம் செய்யலாம் எனக் குறிப்பிடுகின்றது. இது அல்குர்ஆன் பலதாரமணம் குறித்து வழங்கும் பொது அனுமதியை அடிப்படையாகக் கொண்டது.

தனியார் சட்டத்தில் 24 ஆம் சட்டத்தின் 04 ஆம் பிரிவில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1. இரண்டாவது திருமணம் முடிக்க இருப்பவர் 30 நாட்களுக்கு முன்னர் முதல் மனைவிக்கு இது பற்றி அறிவிப்பதோடு அவரது பிரதேசக் காழிக்கும் இதைத் தெரியப்படுத்த வேண்டும்.

2. காழி விண்ணப்பதாரியின் முதல் மனைவி வசிக்கும் ஜும்ஆ மஸ்ஜிதிலும் புதிய மணவாழி வதியும் ஜும்ஆ மஸ்ஜிதிலும் அந்த அறிவித்தலைப் பொதுமக்கள் பார்வைக்குக் கொண்டுவரும்; ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும்.

3. இவ்வாறு செய்து 30 நாட்களுக்குப் பின்னர் ஓர் அத்தாட்சிப் பத்திரம் மூலமாக காழி புதிய விவாகத்திற்கு அனுமதியளிப்பார்.

4. முதல் மனைவிக்குப் பராமரிப்புச் செலவு கொடுக்கப்பட வேண்டும்.

பலதாரமணம் அல்குர்ஆனின் அனுமதியே ஒழிய ஒவ்வொரு முஸ்லிம் ஆண் மீதும் விதிக்கப்படும் கட்டாயக்கடமையல்ல. ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் முடிப்பதற்கு அல்குர்ஆன் நிபந்தனைகளையும் விதித்துள்ளது. நீதியாகவும் பாரபட்சமின்றியும் ஓர் ஆண் இரண்டாம், மூன்றாம் மனைவிமார்களையும் நடத்த வேண்டும். அது போன்றே பொருளாதார ரீதியிலும் உடலியல் ரீதியிலும் மனைவிமார்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவராகவும் அவர் இருக்க வேண்டும். இது குர்ஆன் மிகத் தெளிவாகவும் அழுத்தமாகவும் முன்வைக்கும் நிபந்தனையாகும்.

ஏனெனில், ஒருவர் இரண்டாம் மணம் செய்ய முற்படும் போது தனது மனைவிமார்களிடையே நீதியாக நடந்து கொள்ள முடியாது என சந்தேகம் அல்லது அச்சம் ஏற்படும் பட்சத்தில் அவர் அதனைத் தவிர்த்து ஒரேயொரு மனைவியுடன் வாழ்வதே உசிதமானது எனக் குர்ஆன் குறிப்பிடுகின்றது.



மேலே முஸ்லிம் தனியார் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரமாணங்கள் அல்குர்ஆன் முன்வைக்கும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்கோ குடும்ப வாழ்வின் குறிக்கோள்களை எட்டுவதற்கோ போதுமான வகையில் அமையவில்லை. முதல் மனைவியிடம் அனுமதி பெற வேண்டுமென்பது இஸ்லாத்தில் கட்டாயமில்லை என வாதிப்போர் தமக்குப் பொருளாதாரப் பலமும் உடற்பலமும் உள்ளதா என்பதைப் பற்றிய [illegible] யைத் துஷ்பிரயோகம் செய்ய முயல்கின்றனர். முதல் மனைவிக்குத் தெரியாமலேயே இரண்டாவது திருமணம் முடித்துக்கொண்ட சம்பவங்கள் பல நடந்தேறியுள்ளன. இதனால் முதல் மனைவியும் பிள்ளைகளும் நடுத் தெருவில் நிறுத்தப்படுகின்றனர்.

சிலர் வேறொருவரின் மனைவியைக் கூட்டிச் சென்று இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்த சம்பவங்களும் நடைபெற்றுள்ளன. காழி நீதிமன்ற வழக்குகளிலிருந்து இவ்வுண்மை தெரிய வந்துள்ளது.

நடைமுறையிலுள்ள முஸ்லிம் விவாக - விவாகரத்துச் சட்டம் பலதாரமணத்திற்குத் தெளிவான நிபந்தனைகள் எதனையும் விதிக்கவில்லை என்பதை மேலே நாம் குறிப்பிட்ட ஷர்த்துகள் உணர்த்துகின்றன. வெறுமனே, முதல் மனைவிக்கு பராமரிப்புச் செலவு வழங்கப்பட வேண்டும் என்று மிகப் பொதுவாக வலியுறுத்தப்பட்டுள்ளது. இதற்கான செயற்பாட்டுப் பொறிமுறை எதுவும் இச்சட்டத்தில் இல்லை.

பலதாரமணம் குறித்து மொரோக்கோவின் குடும்பவியல் சட்டக்கோவையில் உள்ளடங்கியுள்ள பிரமாணங்கள் முக்கியமானவை. எமது சூழலுக்கும் தேவையானவை. மொரோக்கோவின் குடும்பவியல் சட்டக் கோவையின் 40 ஆம் பிரிவு பின்வருமாறு குறிப்பிடுகின்றது. மனைவிமார்களுக்கிடையில் நீதியாக நடந்துகொள்ள முடியாது என்று அச்சம் ஏற்படும் பட்சத்தில் பலதார மணம் தடைசெய்யப்படும். அதேபோன்றே திருமணம் முடிப்பதற்கு முன்னர் ஒரு பெண் தனது எதிர்காலக் கணவனிடம் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்யக்கூடாதென்று நிபந்தனை இட்டிருந்தாலும் அந்த ஆணுக்கு இரண்டாம் மணம் செய்ய முடியாது.

இவ்வாறு நிபந்தனை விதிக்கப்படும் ஆண் இரண்டாம் மணம் செய்வதிலிருந்தும் சட்ட ரீதியாகத் தடுக்கப்படுகின்றான். இது இஸ்லாமிய ஷரீஆவின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. திருமணம் என்பது இரண்டு தரப்புகள் சம்மந்தப்படும் ஓர் ஒப்பந்தமாகும். ஆண் - பெண் ஆகிய இரு தரப்பினரும் இதில் சம்மந்தப்படுகின்றனர். அந்த வகையில் ஏனைய ஒப்பந்தங்கள் போன்று திருமண ஒப்பந்தத்திலும் சம்மந்தப்படும் தரப்புகள் பரஸ்பரம் நிபந்தனைகளை விதித்துக் கொள்ளலாம். இது ஷரீஆவுக்கு முரணானதல்ல. மாறாக, திருமண பந்தத்தின் நோக்கங்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான ஒன்று. அந்த வகையிலேயே மொரோக்கோவில் திருமணத்தில் ஈடுபடும் பெண்களுக்கு தனது மணமகனுக்கு முன்னால் எழுத்து மூல நிபந்தனைகளை விதிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை

இதழ் - 402

## நாடுவது நலம்



இத்தியாஸ் பாக்கிர் மாக்கார்

# அல்குர்ஆன், ஸுன்னா வழிமுறையில் நடப்பது சகல பிரச்சினைகளுக்கும் தீர்வாகும்

முஸ்லிம்களது வியாபார நிலையங்கள் மற்றும் முஸ்லிம்களது வழிபாட்டுத்தளங்கள் பலவற்றுக்கு தீ மூட்டியதன் பின்னரும் கூட இஸ்லாம் தொடர்பில் சிங்கள மக்களுக்கு தெளிவூட்டுவதற்கு முஸ்லிம்களிடம் உள்ள பணம், உழைப்பு, வளங்களை செலவு செய்வதற்கு முயற்சிப்பது எவ்வாறிருப்பினும், சிங்கள மக்களை தன்சல் அன்னதான நிகழ்வுக்கு அழைப்பதன் மூலமும், பௌத்த தேரர்களுக்கு உபசரிப்பதனாலும், சிங்கள மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை வழங்கி வைப்பதனாலும் அவர்களது உள்ளங்களை மாற்றி, எமது தேவைகளுக்கு ஏற்ற வகையில் மென்மேலும் இந்த நாட்டில் சுதந்திரமாக வாழ்வதற்கான சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும் என்று முஸ்லிம்கள் நம்புகிறார்கள்.

முஸ்லிம்கள் உடனடியாக சிங்கள மக்கள் மத்தியில் இஸ்லாத்தை பிரசாரப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்வதே தற்போது ஏற்பட்டுள்ள இந்த நிலைமையை மாற்றுவதற்கு ஒரே மாற்றீடாக உள்ளது. நிச்சயமாக அது பாரதூரமான சவாலாக அமையும். எனினும் இஸ்லாம் மதத்தை பிரசாரப்படுத்துவதன் மூலம் சிலர் இஸ்லாத்தை தழுவும் வாய்ப்பு உள்ளதுடன், முஸ்லிம்கள் தங்களது பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றாத பொழுது இஸ்லாம் மதத்தை தழுவிய சில நபர்களால் இஸ்லாமியப் பிரச்சார நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படும்.

ஒரு முஸ்லிம் முகம்கொடுக்கின்ற எந்தவொரு கவலையான சந்தர்ப்பத்திலோ அல்லது பிரச்சினையின் போதோ அவர்களுக்கு சரியான வழியைக் காண்பிக்கின்ற ஒரே வழிமுறை அல்குர்ஆனும், ஸுன்னாவுமாகும். பெரும்பாலான நபர்கள் வெள்ளிக்கிழமையன்று ஜும்ஆ பிரசங்கத்தின் போது அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் அடிப்படையாகக் கொண்டு தீர்வுகளை வழங்குவதற்குப் பதிலாக அவரரவர் அறிவை மையமாகக் கொண்டு தீர்வுகளை வழங்கிவரும் நிலையைக் காண முடிகிறது. ஊடகங்களால் மாத்திரமே அதனை தீர்க்க முடியும் என ஒரு சிலர் தெரிவிக்கின்றனர்.

அல்லாஹ் மீது மாத்திரமே நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். எமக்கான பாதுகாப்பையும் வெற்றியையும் அல்லாஹ்விடமிருந்து மாத்திரமே பெற முடியும். அல்லாஹ்வின் விருப்பமின்றி ஒருபோதும் எந்தவொரு விடயமும் இடம்பெறாது. இஸ்லாத்துக்கும் அதற்கு எதிராக நிற்பவர்களுக்கும் இடையில் ஏற்படுகின்ற மோதல்களுக்கான காரணம் என்ன என்பதை அல்குர்ஆன் எமக்கு தெளிவுபடுத்தியுள்ளது.

பனூ இஸ்ரவேலர்களுக்கு தாக்குதல் நடாத்துவதற்கு அல்லாஹ்வினால் மனிதர்கள் அனுப்பப்பட்டமைக்குரிய காரணங்கள் என்ன? அது தொடர்பில் அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் என்ன?

மக்களுக்கு நல்வழியைக் காண்பிப்பதற்கு தௌராத் வேதத்தை இறக்கி, அல்லாஹ்வை வழிபட வேண்டியது எப்படி என்பது குறித்தும், இஸ்லாத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் சக்திகளுக்கு எதிராகப் போராடி இஸ்லாமிய சட்டத்தை ஸ்தாபிக்கும் பொறுப்பு குறித்தும் பனூ இஸ்ரவேலர்களுக்கு அல்லாஹ் தெளிவுபடுத்திக் காட்டினான். எனினும் அவர்கள் அப்படி நடந்துகொள்ளாமல், அல்லாஹ்வினால் தங்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றாமல், அல்லாஹ்வினை நிராகரித்தமையினால் அவர்களுக்கு தொடர்ந்தேர்ச்சியாக தண்டனைகளை இறக்கியதாக ஸூரா பகராவில் தெளவுபடுத்தப்பட்டுள்ளது.

அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி, நாமும் எம்மிடம் உள்ள குர்ஆன், ஸுன்னவை ஒதுக்கி எம்மால் இஸ்லாத்திற்காக வேண்டி உயிர் உடைமைகள் தியாகம் செய்யப்படாமல், பனூ இஸ்ரவேலர்களைப் போன்று சுயமாகவும் (Own View) சிதைந்து போன பகுத்தறிவுப் பார்வையிலும் (Distorted Rational View) நடந்துகொள்வதின் மூலம் பனூ இஸ்ரவேலர்களுக்கு நடந்தவை அனைத்தும் எமக்கும் உரித்தாகி விடும்.

பிறிதொரு சமூகம் எமது சமுதாயத்தை ஆக்கிரமிக்கும் (Replace) காலம் வெகுதொலைவில் இல்லை. இதனால் இலங்கையில் வாழும் சகல முஸ்லிம் ஆராய்ச்சியாளர்களும் அல்குர்ஆன், ஸுன்னாவை ஆராய்வது தொடர்பில் மிகுந்த ஈடுபாடு கொள்ள வேண்டும். அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் அடிப்படையாகக் கொண்டு இந்தப் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது குறித்தும் அவர்கள் ஆராய வேண்டும்.

உதாரணத்திற்கு தனது உயிர் மற்றும் உடைமைகளை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பில் அல்குர்ஆன் மற்றும் ஸுன்னாவில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது நீங்கள் உயிரிழந்தால் உங்களுக்கு ஷஹீத் (அல்லாஹ்வுக்காக வேண்டி உயிர் நீத்தவர்) அந்தஸ்து கிடைக்கும்.

# எண்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா



அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரச் சந்தையின் கேந்திர நிலையமாக்குவதன் ஊடாக 2025 ஆகும் போது இலங்கையை ஒரு செல்வந்த நாடாக மாற்றும் கனவினை நல்லாட்சி அரசாங்கம் கொண்டிருக்கின்றது. இதற்கு நாட்டு மக்கள் அனைவரிடமும் கை நிறைந்த வருமானமும் உயர்ந்த வாழ்க்கைத் தரமும் அமைய வேண்டும். இதனை அடைவதற்காக இந்து சமுத்திரத்தின் மத்திய ஏற்றுமதித் தளமாக இலங்கையை மாற்றுகின்ற அணுகுமுறையை அரசாங்கம் பின்பற்றி வருகின்றது. இதனால் உள்நாட்டுச் சந்தையிலுள்ள 20 மில்லியன் நுகர்வோரும் பயன்பெற முடியும்.

இந்தப் பொருளாதார அடைவுகளுக்காக உலக உற்பத்திகளுக்கு மத்தியில் உள்ளூர் தேசிய வர்த்தகத்துக்குள்ள வாய்ப்பை தக்க வைத்துக் கொள்வதை அரசு தனது முதல் இலக்காகக் கொண்டுள்ளது. இலங்கையை விட 26 மடங்கு பெரிய நீலக் கடல்பரப்பைப் பயன்படுத்துவதனூடாகவும், உள்நாட்டின் பசுமையைப் பேணும் வகையிலான சூழல் நேய அபிவிருத்திகளினூடாகவும் இந்த இலக்கை அடைவதற்கான நீல பசுமை வரவு செலவுத் திட்டமொன்றை அரசாங்கம் முன்வைத்துளளது. இதன் மூலம் இந்த ஆண்டு இறுதியில் தலாவருமானத்தை 5000 டொலராக அதிகரிப்பதற்கு அரசு நாடியுள்ளது. இது பல பொருளாதார மறுசீரமைப்புக்களை வேண்டி நிற்கின்றது.

நிரந்தரமான அபிவிருத்தி இலக்குகளை வரைவது இதில் முக்கியமானது. இதில் அறிவுபூர்வமான வல்லுனர்களால் நிறைந்த அறிவை அடிப்படையாகக் கொண்டதாக பொருளாதாரம் அமைவது முக்கிய இலக்காகும். இதனால் உலக பொருளாதாரத்துடன் போட்டி போடக் கூடிய சூழலை உருவாக்க முடியும் என்பது அரசின் எதிர்பார்ப்பாகும். இந்தத் திட்டங்களினூடாக பொருளாதார வளர்ச்சிக்கு தனியார் துறையின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்து அரசின் இலக்கான பத்து இலட்சம் தொழில்வாய்ப்புக்களை அடைந்து கொள்ள அரசு திட்டமிடுகிறது.

இந்த இலக்கை நோக்கிய பல வேலைத் திட்டங்களை அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் உள்ளடக்கியிருக்கிறது. கல்விச் சீர்திருத்தம், தொழிற்பயிற்சி, கடனை திருப்பிச் செலுத்துதல், தகவல் தொழில்நுட்பம், ஏற்றுமதி, விவசாய தொழில்நுட்பம் ஆகிய வேலைத் திட்டங்கள் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

2025 இல் அடைய நினைத் திருக்கின்ற பாரிய பொருளாதார அடைவில் தனியார் துறையையும் இணைத்துக் கொள்வதற்காக இவ்வாறான வேலைத் திட்டங்களில் ஈடுபடக் கூடிய தொழில் முயற்சியாளர்களை பலப்படுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியிருக்கிறது. அத்தகைய தொரு வேலைத்திட்டமாகத் தான் 2018 வரவு செலவுத் திட்டத்தில் என்டர்பிரைஸஸ் ஸ்ரீலங்கா அறிமுகப்படுத்தப்பட்டது.

பண்டைய காலம் தொட்டு இலங்கையரிடம் காணப்படுகின்ற வியாபாரத் தேர்ச்சிகளை அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதையும், தனியார் துறையை மட்டுமன்றி அனைத்து இலங்கையர்களையும் அபிவிருத்தியின் பங்காளர்களாக்குவதையும் என்டர் பிரைஸஸ் ஸ்ரீலங்கா நோக்காகக் கொண்டுள்ளது.

கிராம சக்தி, கம்பெரலிய வேலைத்திட்டங்களும் இதற்குச் சமாந்தரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனால் சிறிய ரக வியாபாரிகள், சுயதொழிலில் ஈடுபடுவோர், முச்சக்கர வண்டி உரிமையாளர்கள், சில்லறை வியாபாரிகள், சிறிய தொழில் முயற்சிகளில் ஈடுபடும் பெண்கள், தகவல் தொழில்நுட்பத் துறையில் ஈடுபாடு உள்ள இளைஞர்கள் அனைவரும் தமக்குத் தேவையான வசதிகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக் கொள்வர்.

கடந்த ஐந்தாறு வருடங்களில் நாட்டின் அரச துறை இருமடங்காகியுள்ளது. 14 இலட்சம் அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவுக்காக அரச வருமானத்தை 32 வீதத்தால் அதிகரிக்க வேண்டியிருக்கிறது. 2014 இல் அரச மற்றும் உள்ளூராட்சி சேவைகளின் சம்பளத்துக்காக ஒதுக்கப்பட்ட 487 பில்லியன் ரூபா, 2018 ஆகும் போது 705 பில்லியனாக அதிகரித்திருக்கிறது. இதனால் அரச செலவினங்களை மேலும் அதிகரிப்பதை விட தொழில் முயற்சியாளர்களை பலப்படுத்துவதற்கு இந்தத் திட்டங்களூடாக அரசாங்கம் முயற்சி எடுத்து வருவது தெரிகிறது.

என்டர்பிரைஸஸ் ஸ்ரீலங்கா பிரதான ஆறு வழிமுறைகளூடாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. 2017 இல் அறிமுகப்படுத்தப்பட்ட சிறிய, நடுத்தர மற்றும் அடிமட்ட தொழில் முயற்சியாளர்களைக் குறைந்த வட்டியில் கடன் வழங்கும் 08 திட்டங்களும் அரசின் உதவியுடன் செயற்படுத்தப்படும் கடன் திட்டங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து வடிவமைக்கப்பட்ட கடன் திட்டமும் இதில் முதலாவதாகும்.

வட்டியின் ஒரு பகுதியை அரசாங்கம் பொறுப்பேற்றமை இரண்டாவதாகும். ஜனாதிபதியின் கிராமசக்தி திட்டத்துக்கு பங்களிப்புச் செய்தல் மூன்றாவதாகும். நான்காவதாக பெண்களைப் பலப்படுத்தும் நோக்கில் 10 வீதத்துக்கு மேல் வட்டிச் சலுகை வழங்கும் அடிப்படையில் கடன் வழங்குதலாகும்.

2018 - 2020 காலப்பகுதியில் விவசாய, மீனவ சங்கங்கள் 50, பெண்களுக்கு அதிக உரிமை கொண்ட நிறுவனங்கள் 25, இளைஞர் களை அடிப்படையாகக் கொண்ட வியாபார முயற்சிகள் 150 ஆகியவற்றை ஆரம்பித்து என்டர் பிரைஸஸ் ஸ்ரீலங்கா மூலமாக இந்த நிறுவனங்களுக்கு கடன் உதவியும் மூலதன உதவியும் வழங்குதல் ஐந்தாவதாகும். தொழில்சார் திறமையுள்ளவர்களுக்கு தமது தொழில் முயற்சியை முன்னேற்றிக் கொள்வதற்காக 15 வீத சலுகை வட்டியின் அடிப்படையில் கடன் வழங்குவது ஆறாவது வழிமுறையாகும்.

2018 இல் வட்டிக்கான சலுகை வழங்குவதற்காக அரசாங்கம் 5250 மில்லியனை ஒதுக்கியுள்ளது. இதற்கென வழங்கப்படும் நிதியினூடாக 60,000 மில்லியன் ரூபா மூலதனச் சந்தைக்குச் சேரும் என அரசு எதிர்பார்க்கிறது. இதனூடாக 50,000 வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. என்டர் பிரைஸஸ் ஸ்ரீலங்கா திட்டத்தினுள் 16 கடன் வழங்கும் திட்டங்கள் அடங்குகின்றன. இதில் சலுகை வட்டி அடிப்படையிலான கடன் திட்டங்கள் 11, வெளிநாட்டு உதவியுடனான மீளப்பெறும் கடன் திட்டங்கள் 03, நிதிசார் மற்றும் நிதிசாரா வசதிகளை வழங்கும் திட்டங்கள் 02 என்பன உள்ளடங்குகின்றன.

| திட்டம் | பயனாளிகள் | உச்ச எல்லை | செலுத்த வேண்டிய வட்டி வீதம் |
|---|---|---|---|
| 1. ரன் அஸ்வன்ன | 1. சிறிய அளவிலான விவசாயிகள், மலர்ச் செய்கை, தொட்டி மீன் வளர்ப்பு<br>2. விவசாய, மீன்பிடி சகசும்<br>3. வர்த்தக ரீதியான விவசாயத் தோட்டங்கள் | 5 மில்லியன்<br>300 மில்லியன்<br>750 மில்லியன் | 6.75 வீதம் |
| 2. கொவி நவோதா | சிறிய அளவு விவசாயிகள் (இயந்திர உபகரணங்களுக்காக) | 5 இலட்சம் | 3.38 வீதம் |
| 3. ரிய சக்தி | பாடசாலை வேன் உரிமையாளர்கள் | 4 மில்லியன் | 3.38 வீதம் |
| 4. ரிவி பல சவி | சூரிய சக்தியை பயன்படுத்த விரும்பும் தனியார் வீடுகள் | 350,000 | 6.75 வீதம் |
| 5. திரி சவிய | கோழிப்பண்ணை, சுயதொழிலாளர்கள் | 50,000 | வட்டியில்லை |
| 6. ஜய இசுர | 1. 10-250 மில்லியன் வரையிலான வருடாந்தப் புரள்வும் 5-50 வரையான ஊழியர்களும் கொண்ட சிறிய வகை தொழில்முயற்சிகள் (காமன்ட்ஸ், பிரின்டர்ஸ், கால்நடை,...)<br>2. 250-750 வரையான வருடாந்தப் புரள்வும் 51-300 வரையான ஊழியர்களும் கொண்ட மத்திய தர தொழில்முயற்சிகள் | 100 மில்லியன் (ஏற்றுமதி)<br>50மில்லியன் (ஏற்றுமதியல்லாத)<br>400 மில்லியன் (ஏற்றுமதி)<br>200 மில்லியன் (ஏற்றுமதியல்லாத) | 6.75 வீதம்<br>10.12 வீதம் |
| 7. சொந்துரு பியச | 1000 சதுர அடிக்குக் குறைந்த வீடு | 02 இலட்சம் | 6.75 வீதம் |
| 8. மாத்ய அருண | 1. பதிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் ஊடக உபகரணங்களை கொள்வனவு செய்தல்<br>2. உபகரணங்களை மேம்படுத்தல் | 03 இலட்சம்<br>150,000 | வட்டியில்லை<br>6.75 வீதம் |
| 9. அரம்பும | இளம் பட்டதாரிகள் | 1,500,000 | வட்டியில்லை |
| 10. Green Loan | 1. சிறிய வகை ஹோட்டல்மை.<br>2. சுற்றுலாச் சேவைக்கான சிறிய வகை ஹோட்டல் | 01 மில்லியன்<br>05 மில்லியன் | 6.75 வீதம்<br>6 வீதம் |
| 11. மத்திய வருமான முள்ளோருக்கான வீடு | வீட்டுத்திட்டம் ஒன்றில் முதற் தடவையாக வீடு வாங்க விரும்பும் இளைஞர்கள் | 05 மில்லியன் | 07 வீதம் |
| 12. கூரையில் பொருத்தும் சூரியஒளி மின்சாரம் | தனியாள் வீடுகள், தொழில் முயற்சியாளர்கள் | 7,500,000 | 8 வீதம் |
| 13. சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் (SMELoCP) கடன் | சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் | 50 மில்லியன் | 11-14 வீதம் |
| 14.பவித்ர கங்கா | தற்போது களனி கங்கைக்கு கழிவுகளை அகற்றும் நிறுவனங்கள் | 30 மில்லியன் | 6.5 வீதம் |
| 15. தேசிய கடன் பராமரிப்பு நிலையம் (NCGI) | சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் | மொத்தத் தொகையில் 1/3 | 1-2 வீதம் |
| 16. சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான | இளைஞர் யுவதிகள் | வழிகாட்டல்களும் குத்தகைகள் பெற்றுக் கொடுத்தலும் | 6.75 வீதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆய்வுக் கலாச்சாரம்: ஆய்வின்றேல் தீர்வுகள் இல்லை

## செய்னுலாப்தீன் நிஹாஸ்

ஆய்வுக்கும் உரையாடலுக்குமான நிலையத்தின் (CDR) மக்கள் தொடர்பாடல் பணிப்பாளர்

செய்னுலாப்தீன் நிஹாஸ் அவர்கள் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை திரு/பெரிய கிண்ணியா ஆண்கள் பாடசாலையிலும் இரண்டாம் நிலைக் கல்வியை திரு/கிண்ணியா மத்திய கல்லூரியிலும் கற்றுள்ளார். கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும் (B.A), இந்திய மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் அரசியல் துறையில் முதுமாணிப்பட்டத்தையும் (M.A) பூர்த்தி செய்துள்ளார்.

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக பாடசாலை ஆசிரியராக கடமையாற்றியுள்ள இவர், தற்போது ஆய்வுக்கும் உரையாடலுக்குமான நிலையத்தின் (CDR) மக்கள் தொடர்பாடல் பணிப்பாளராகவும், கல்வித்துறை சார்ந்த வளவாளராகவும், சமூக செயற்பாட்டாளராகவும் செயற்பட்டு வருகின்றார். செய்னுலாப்தீன் நிஹாஸ் அவர்கள் மீள்பார்வை பத்திரிகைக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல் இங்கு தரப்படுகிறது.

**நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி**

- ஆய்வுக்கும் உரையாடலுக்குமான நிலையம் CENTRE FOR DIALOGUE AND RESEARCH (CDR) உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை சற்று தெளிவுபடுத்த முடியுமா?

இது எமது சமூகத்தில் காணப்படும் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இலங்கை 30 வருட காலமாக இனப் பிரச்சினையை எதிர்கொண்டு வந்தது என்ற வகையில் மக்கள் மத்தியில் புரையோடிப் போயுள்ள பிரச்சினைகளை பேசித் தீர்ப்பதற்கான வழிமுறையாகவும், தங்களது பிரச்சினைகளை நேருக்கு நேராக நின்று உரையாடும் கலாசாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும் அடுத்தவர்களது பிரச்சினைகளுக்கான நியாயங்களை உணர்ந்துகொள்ளும் வகையில் இந்தக் கலாசாரத்தை இந்நாட்டில் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கில் ஆய்வுக்கும் உரையாடலுக்குமான நிலையம் CENTRE FOR DIALOGUE AND RESEARCH (CDR) உருவாக்கப்பட்டது.

ஆய்வுக் கலாசாரம் என்பது இன்று அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணப்படும் முக்கியமானதொரு செயற்பாடாகக் காணப்படுகின்றது. எமது நாட்டைப் பொறுத்தவரையில் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையில் ஆய்வுக் கலாசாரம் என்பது மிகவும் பலவீனமான பகுதியாகக் காணப்படுகின்றது. எனவே இவ்விரண்டு அடிப்படைகளையும் மிக முக்கியமாக கொண்டு இந்நிலையம் செயற்பட்டு வருகிறது.

- ஆய்வுக்கும் உரையாடலுக்குமான நிலையத்தின் (CDR) பணிகளை சற்று குறிப்பிடுங்கள்...

எமது நாட்டை பொறுத்தவரையிலும் முஸ்லிம் சமூகத்தை பொறுத்தவரையிலும் ஆய்வுக் கலாசாரம் என்பது மிகவும் பலவீனமான பகுதியாகவே காணப்படுகின்றது. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆய்வுக் கலாசாரத்தை ஒரு வழிமுறையாகக் கொள்ள வேண்டும் என்ற நோக்கினையும் இந்நிறுவனம் கொண்டிருக்கிறது.

- ஆய்வுக்கும் உரையாடலுக்குமான நிலையத்தின் பணிகளைக் குறிப்பிடுங்கள்...

இந்நிறுவனம் உருவாக்கப்பட்ட காலம் முதல் சமூகப் பிரச்சினைகள் தொடர்பாகவும் தேசியப் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் துறைசார்ந்த அறிஞர்களை அழைத்து பல்வேறு கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக சமூகப் பிரச்சினைகளை நாம் எவ்வாறு தீர்த்துக் கொள்வது? என்பது தொடர்பாகவும், முஸ்லிம் தனியார் சட்ட விவகாரம், எல்லை நிர்ணய விவகாரம் பற்றிய பல்வேறு விடயங்களை கலந்துரையாடியுள்ளோம். இவ்வாறு குறிப் பிட்ட காலப்பகுதிகளில் மேலெழுகின்ற பிரச்சினைகள் குறித்து நாட்டில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் அவற்றை எப்படிப் பார்க்கிறார்கள்? நாம் எப்படி அவற்றை அணுக வேண்டும்? போன்ற வழிகாட்டல்களை நாம் வழங்கியுள்ளோம்.

இதேபோன்று மாற்றுக் கருத்துக்கள் மற்றும் சிந்தனைகளுக்கு இடம்கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு நூல்களையும் வெளியிட்டுள்ளோம். மறைந்த முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பாராளுமன்றில் ஆற்றிய உரைகளை தொகுத்து ஆங்கில மொழியில் ஒரு நூலை வெளியிட்டோம். வடகிழக்கு இணைப்பு, தமிழ் முஸ்லிம் உறவுகள் போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஸ்டாலின் அவர்களின் ஆய்வுக் கட்டுரைகளை தொகுத்து கிழக்கின் சுயநிர்ணயம் என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டோம். இஸ்லாமிய அரசியல் பரப்பில் இன்று அவசியமாக உள்ள, மாறுபட்ட அரசியல் விடயங்களை எவ்வாறு வித்தியாசமான கோணங்களில் பார்க்க வேண்டும் என்பது தொடர்பாக சகோதரர் ஸகீ பௌஸ் எழுதிய இஸ்லாமிய சிந்தனையின் அண்மைக் காலப் போக்குகள் என்ற நூலையும் வெளியிட்டு வைத்தோம்.

- ஆய்வுக்கும் உரையாடலுக்குமான நிலையத்தின் எதிர்காலத் திட்டங்களை சுருக்கமாக குறிப்பிட முடியுமா?

CDR நிறுவனத்தை பொறுத்தவரையில் ஏலவே குறிப்பிட்டது போன்று தேசம் சம்பந்தப்பட்ட மிக முக்கிய பிரச்சினைகள் குறித்து கூடுதல் அவதானம் செலுத்தவுள்ளது. அண்மைக் காலமாக எமது நாட்டில் இனங்களுக்கிடையில் வித்தியாசமான முறுகல் நிலை காணப்படுகிறது. சிங்கள முஸ்லிம் உறவுகளை பாதிக்கும் வகையிலான கருத்துப் பறிமாற்றங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழ் முஸ்லிம் உறவில் விரிசல்களை தோற்றுவிப்பதற்கான முஸ்தீபுகளாகவே நாம் இவற்றை பார்க்கின்றோம்.

எனவே சமூகங்களுக்கிடையில் உறவாடல் நிகழ்ச்சிகளை அதிகரித்து, அரசியல் தலைமைகள் மற்றும் துறைசார்ந்த கல்விமான்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்கான உரையாடல்களை இன்னும் அதிகரிக்கவுள்ளோம். ஆய்வுக் கலாசாரத்தை எல்லா சமூக மட்டத்திலும் கொண்டு வருவது தொடர்பில் எமது நிறுவனம் அவதானம் செலுத்தியுள்ளது.

- அண்மைக் காலமாக இலங்கை மிகப் பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருகிறது. இதனை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?

சுதந்திரத்திற்கு பின்னர் ஆட்சிக்கு வந்த பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் வெளிநாடுகளின் உதவிகளை பெற்று இலங்கையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற கருத்துப் போக்கில் செயற்பட்டு வந்துள்ளன. அண்மைக் காலமாக எமது நாட்டின் அரசியல் தலைமைகள் எந்த விதமான ஆய்வுநோக்களும் இன்றி தாண்தோன்றித் தனமான முறையில் கட்சிகளையும் தங்களையும் முதன்மைப்படுத்தி அபிவிருத்தி என்ற மாயையில் அதிகளவில் கடன்பெற்றுள்ளனர்.

இதனால் நாடு மிகப்பெரும் கடன் சுமைக்கு தள்ளப்பட்டுள்ளது. இன்று எமது நாட்டு வருமானத்தில் 80 வீதமானவை கடனை திருப்பிச் செலுத்தப் பயன்படுத்தப்படுகிறது. இது மிகவும் துர்ப் பாக்கிய நிலையாகும். சரியான ஆய்வு முயற்சிகளும் திட்டமிடலும் இல்லாத ஒரு நிலைமையின் காரணமாக ஏற்பட்ட விடயமாகவே இதனை நோக்குகிறோம்.

- நாடு மிகப்பெரும் கடன் சுமைக்கு தள்ளப்பட்டுள்ளது. இதிலிருந்து மீள்வதற்கு நீங்கள் எவ்வாறான வழிமுறைகளை முன்வைக்கின்றீர்கள்?

எந்தவொரு நாடும் சரியான முறையில் ஆட்சி செய்யப்படுகின்ற போது இன்னுமொரு நாட்டிடம் தங்கியிருக்கக் கூடிய, மந்தநிலையையடையக் கூடிய நிலைமைகள் காணப்படாது. பிரதானமாக ஊழலற்றதொரு அரசாங்கத்தில் பொருளாதார ரீதியான அபிவிருத்திகளை எதிர்பார்க்க முடியும். எமது நாட்டுக்கு தேவையான வகையில் இந்நாட்டின் வளங்களை அடிப்படையாக வைத்து நீண்ட திட்டமிடல்களையும் வருமானம் தரக் கூடிய செயற்திட்டங்களையும் செயற்படுத்துகின்ற போது எமது நாட்டிலிருந்து மிகப்பெரிய அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியும். இதே போன்று கடன்பெறுவதாக இருந்தாலும் திருப்பிச் செலுத்தும் இயலுமைகளை கருத்திற் கொண்டு, அபிவிருத்தித் திட்டங்களின் வருமானங்களை கவனத்திற் கொண்டும் கடன்களைப் பெறுவதாக இருந்தால் சிறந்ததாக இருக்கும்.

எமது சொந்த வளங்களையும் உழைப்பையும் கொண்டு, எமது நாடு விவசாய நாடு என்ற வகையில் விவசாயத்தையும், கைத்தொழிலையும் தொழில்நுட்பத்தையும் எம்மைச் சூழவுள்ள கடல் வளத்தையும், அதிலுள்ள கனிய வளங்களையும் பெற்றுக்கொள்வதினூடாக நாட்டையும் மக்களையும் கடன் சுமையிலிருந்து மீட்க முடியும். கல்விமான்கள் என்ற வகையில் அதிகாரிகளும், துறைசார்ந்த நிபுணர்களும் மக்களும் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்துவதன் மூலம் எமது நாட்டை கடன் சுமையிலிருந்து மீட்கலாம்.

- முஸ்லிம் சமூக அரசியல் குறித்த உங்களது பார்வை என்ன?

சுதந்திரத்திற்கு பின்னரான காலப்பகுதி முதல் முஸ்லிம் சமூக அரசியல் பெரும்பான்மைக் கட்சிகளுடனும், வடகிழக்கில் தமிழ் மக்களுடனும் இணைந்ததாக காணப்பட்டது. ஆனால் பெரும்பான்மைக் கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட பிளவுகள், இனரீதியான கட்சிகளின் தோற்றங்களுக்கு பின்னர் இலங்கையில் முஸ்லிம் அரசியலில் 90 களுக்கு பிறகு தனியான அரசியல் பயணம் ஆரம்பிக்கப்பட்டதைக் காண முடிகின்றது.

முஸ்லிம்களுக்கான அரசியல் பயணம் என்பது வெறுமனே முஸ்லிம் சமூகத்திற்கு மாத்திரமான ஒரு அரசியல் பயணமாக ஆரம்பிக்கப்பட்டதனாலும், தேச நலனும் ஏனைய சமூகங்களுடனான உறவாடலும் இரண்டாம் தரத்துக்கு தள்ளப்பட்டதனாலும் இலங்கை முஸ்லிம் தனிக் கட்சிகளை ஏனைய சமூகங்கள் வித்தியாசாமான பாணியில், நோக்கும் போக்கினை அண்மைக் காலமாகக் காண முடிகின்றது.

தேச நலனோடு இணைந்த வகையில் அடுத்த சமூகங்களுடன் உறவாடுவதன் மூலம் முஸ்லிம் கட்சி அரசியலை நாம் வழிநடத்தவில்லை என்ற குறைபாடு காணப்படுகின்றது. எனவே அடுத்த சமூகங்களின் கருத்துக்களையும் உள்வாங்கும் சமநிலையான போக்கும் எமது முஸ்லிம் அரசியலில் உருவாக வேண்டும் என்ற கருத்தை கூற விரும்புகின்றேன்.

- இலங்கை அரசியலை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?

சுதந்திரத்திற்கு பின்னரான காலம் முதல் இன்று வரை கட்சி நலன் சார்ந்ததாகவும், அடுத்த தேர்தலில் வெல்வதற்கான வழிமுறைகளை கொண்டதாகவுமே அரசியல் யாப்புகள் உருவாக்கப்பட்டன. இந்த இடத்திலிருந்து விடுபடாத வரை இலங்கைக்கு அரசியல் விமோசனம் இல்லை. எனவே ஏனைய வளர்ச்சியடைந்த நாடுகள் சிந்திப்பது போல நாட்டு மக்களின் கல்வி, பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்துவது? என்பது பற்றி சிந்திக்கக் கூடிய விடயங்களில் அரசியல்வாதிகள் கவனம் செலுத்த வேண்டும். உதாரணமாக 4 பக்கங்களும் கடலால் சூழப்பட்ட எமது நாடு இன்றுவரைக்கும் வெளிநாடுகளிலிருந்து மீன் இறக்குமதி செய்கிறது. எமது வளம் பற்றி எவ்வித கரிசனையும் இல்லாமல் தன்னுடைய அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்கிறது. எனவே அரசியல்வாதிகள் நாட்டை அபிவிருத்தி செய்வது தொடர்பில் சிந்தித்து செயற்பட வேண்டும்.

- இறுதியாக இலங்கை முஸ்லிம் சமூகத்துக்கு கூற வரும் விடயங்கள் என்ன?

முக்கியமாக இரண்டு விடயங்களை குறிப்பிட விரும்புகின்றேன். (பக்.14)



# எழுவாய், பயமில்லை

அபூ ஷாமில்

## மௌலவிதுமா

மாதம்பை இஸ்லாஹியா இஸ்லாமியக் கல்வி நிலையத்தின் விரிவுரையாளரான அசாத் சிராஸ் தனது பட்டப்பின் படிப்பை பௌத்த மதக் கற்கைகளில் நிறைவு செய்திருக்கிறார். இது தொடர்பில் செய்தி வெளியிட்ட சிங்களப் பத்திரிகையொன்று, பட்டப்பின் படிப்புக்காக பௌத்த தர்மத்தை தெரிவு செய்த மௌலவிதுமா என்று தலைப்பிட்டிருந்தது.

இலங்கையில் ஏனைய மதங்களுக்கு இருப்பது போல முஸ்லிம்களிடத்தில் மத குருக்கள் காணப்படுவதில்லை. ஆனாலும் மௌலவிமார்களை அவர்கள் மதகுருக்களாகவே அடையாளப்படுத்துகிறார்கள். அல்லது முஸ்லிம் மத குருக்களாக அவர்கள் கருதுபவர்களை எல்லாம் மௌலவிதுமா என்ற சொல்லினூடாக அழைக்கிறார்கள். பொதுவாக சிங்களவர்களுடைய பரிபாஷையில் முஸ்லிம்களது மதகுருதான் மௌலவிதுமா.

ஆனால் முஸ்லிம் சமூகத்துக்குள்ளால் மௌலவிகள் என்றும் அஷ்ஷெய்க் என்றும் இருவகையானவர்கள் இருக்கின்றார்கள். பாரம்பரிய மத்ரஸாக்களில் கற்று வெளியேறியவர்கள் எல்லாம் மௌலவி பட்டம் பெறுகிறார்கள். இஸ்லாமிய கற்கை நிலையங்களில் அல்லது பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்று வெளியேறியவர்கள் அஷ்ஷெய்க் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இலங்கையில் வள்ளல் நளீம் ஹாஜியார் ஜாமிஆ நளீமியாவை உருவாக்கும் வரைக்கும் இலங்கையின் ஆலிம்கள் மௌலவிகளாகவே இருந்தார்கள். ஷரீஆத் துறையில் ஆழமான அறிவை வழங்கக் கூடிய ஒரு பல்கலைக்கழகமாக நளீமிய்யா உருவானதன் பின்புலத்தில், அங்கிருந்து வெளியேறியவர்கள் அஷ்ஷெய்க் அடைமொழியுடன் அறியப்பட்டார்கள். தற்பொழுது இன்னும் சில ஷரீஆத் துறையிலான இஸ்லாமியக் கற்கை நிலையங்களும் அஷ்ஷெய்க் பட்டத்தை வழங்குகின்றன. இதன்வழி, ஷரீஆத் துறையில் கற்றவர்களை இலகுவாக அடையாளப் படுத்த முடியுமான நிலை இருந்தது.

மத்ரஸாக்களில் இருந்து வெளியேறியவர்கள் மௌலவிகளாக அடையாளப்படுத்தப்பட்டாலும் கூட, இந்த மௌலவிகளில் சிலர் தம்மை அஷ்ஷெய்க் என்ற அடைமொழியால் அணைத்துக் கொள்வதையும் காணமுடிகிறது. இதனால் ஆலிம்களை அடையாளம் காண்பதில் ஒரு குழப்ப நிலை தெரிகிறது. மத்ரஸாக்கள் எனும் போது அவை உலகக் கல்வியை ஊக்குவிக்காத நிறுவனங்களாக உள்ளன. இதனால் ஆன்மீகம் சார்ந்த விடயங்களுக்காகவே மக்கள் மௌலவிகளைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இவர்களும் அஷ்ஷெய்க் அடைமொழியில் அடங்கும் போது, யாரை எந்த விடயத்தில் அணுகுவது என்று தெரியாமல் மக்கள் தடுமாறுகிறார்கள்.

இலங்கையில் முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தம் தொடர்பில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களிடையே இந்த வித்தியாசத்தைத் தெளிவாக அடையாளம் காண முடிகிறது. உலகக் கல்வியை விட்டு விட்டு, அரசியலமைப்பில் முஸ்லிம் தனியார் சட்ட விவகாரம் குறித்துப் பேசும் போது மக்கள் வித்தியாசத்தை இலகுவாக அடையாளம் கண்டு கொள்கிறார்கள். அதிகம் அதிகமாக மக்களுடன் தொடர்பான உலக விவகாரங்களில் ஈடுபடும் போது இந்த வித்தியாசங்கள் இன்னும் தெளிவாக மக்களுக்கு விளங்க வரும். அதற்கு முன்னர் மௌலவிகள் மௌலவிகளாகவும் அஷ்ஷெய்க்குகள் அஷ்ஷெய்குகளாகவும் இருக்க விடுவது தான் சமூகத்துக்கு ஆரோக்கியமானது.

அத்தோடு குறித்த முஸ்லிம் தனியார் சட்ட விவாதங்களின் போது இலங்கை முஸ்லிம்களிடையே ஆலிம்கள் அல்லது உலமாக்கள், இஸ்லாமிய அறிஞர்கள், பொதுவான அறிஞர்கள் என பல்வேறு மட்டங்களில் அறிஞர்கள் இருப்பது தெளிவாகத் தெரிகிறது. இவர்களைத் தெளிவாக அடையாளம் காண்பதற்கான இலகுவான அடையாளங்கள் காணப்பட வேண்டும். அப்போது தான் அவரவர் பணியறிந்து செயற்படுவதற்கும் மக்களின் எதிர்பார்ப்புக்களை எதிர்கொள்வதற்கும் வசதியாக இருக்கும்.

இஸ்லாத்தில் குருத்துவம் இல்லாமையினால் இந்த இரு தரப்புக்களையுமே அவர்கள் மௌலவிதுமா என்று அழைக்கட்டும். இதில் நாங்கள் அவர்களுக்கு விளக்கங்கள் வழங்க வேண்டிய அவசியமில்லை. ஆனாலும் நமக்கிடையே இருக்கின்ற இந்த அடையாளங்களைப் பாதுகாப்பதற்கு முயற்சி எடுப்பது மிகவும் சிறந்ததாக அமையும்.


ஊருக்கொரு மத்ரஸா உருவாகி வீட்டுக்கொரு மௌலவி உருவாக்கப்படும் இன்றைய சூழலில் மௌலவி என்பதை சில்லறைத் தனமாக நினைத்து தம்மை அஷ்ஷெய்க் என்ற அடையாளத்துக்குள் போர்த்திக் கொள்ளாமல் மௌலவிகளுக்கான சிறப்பை எடுத்துக் காட்டும் வகையில் மத்ரஸாக்கள் மௌலவிப் பட்டத்தை வழங்க வேண்டும். மௌலவிப் பட்டத்தை நபிப் பட்டமாகக் கருதிய காலமும் மௌலவிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்த காலங்களில் இருந்தது.

அஷ்ஷெய்குகளை அப்படியே விட்டு விட்டு மௌலவிகளை மேலாக்குவதற்கான முயற்சிகளை செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசப் பார்வை

## சிங்கியான் மாநில முஸ்லிம்கள் மீது மீண்டும் அடக்குமுறை




சுதந்திர குடியரசாக இருந்து சீனாவுடன் வட்புறுத்தலின் பேரில் இணைக்கப்பட்ட சிங்கியான் மாநில உய்கூர் முஸ்லிம்கள் மீளவும் சீன அரசினால் ஒடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இம்முஸ்லிம்களின் மத கலாசார அடிப்படை உரிமைகளை சீன அரசாங்கம் திட்டமிட்டு மீறிவருவதாக உய்குர் முஸ்லிம்கள் வாக்கு மூலம் அளித்துள்ளனர். சிங்கியானின் தலைநகர் உரும்கீயில் வசித்து வரும் முஸ்லிம் வணிகர்கள் சீனப் பொலிஸாரினால் கடத்தப்பட்டு கப்பம் கோரப்படுவதாக அறிக்கைகள் வெளிவந்துள்ளன. அதே போன்று, பெருந்தொகை சமூக செயற்பாட்டாளர்கள் ரகசிய முகாம்களில் வைத்து விசாரிக்கப்படுகின்றனர். கடந்த ரமழானில் நோன்பு நோற்பதிலிருந்து முஸ்லிம்கள் தடுக்கப்பட்டதோடு, ஹிஜாப் அணிதல், ஆண்கள் தாடி வைத்தல் போன்றவற்றை சீன அதிகாரிகள் வற்புறுத்தலாகத் தடைசெய்தனர்.

கடந்த 10 ஆண்டுகளாக சிங்யான் மாநில முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் அரச அடக்குமுறைகள் குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. கடந்த சில மாதங்களில் 20,000 இற்கு மேற்பட்ட உய்குர் முஸ்லிம்கள் சிங்யானிலிருந்து வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்துள்ளனர். அவர்களில் கணிசமானோர் துருக்கியில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்கள் வழங்கிய வாக்கு மூலங்களிலிருந்து மனித உரிமை கண்காணிப்பகம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

## ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் போர்க் குற்றங்களை விசாரித்தால் கடும் நடவடிக்கை

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மேற்கொண்ட போர்க் குற்றங்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டால் அமெரிக்கா அதற்கு தகுந்த பதிலளிக்கும் என அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புத் துறை ஆலோசகர் ஜோன் பெல்டன் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தை அச்சுறுத்தியுள்ளார்.

செப்டம்பர் 11 தாக்குதலை நினைவுகூர்ந்து உரையாற்றுகையிலேயே ஜொன் பெல்டன் இவ்வாறு கூறினார். 9/11 தாக்குதலை அடுத்தே அமெரிக்கா ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தது. குழந்தைகள், பெண்கள் என்ற பாகுபாடின்றி அமெரிக்கா இராணுவம் பல்லாயிரக்கணக்கான ஆப்கானியர்களைக் கொன்றொழித்தது. இது குறித்த குற்றவிசாரணைகளை முன்னெடுக்கவுள்ள தருணத்திலேயே ஜோன் பெல்டன், "நாம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்க மாட்டோம். எந்த உதவியும் வழங்க மாட்டோம். அது செயலிழந்து போவதற்கு முடியுமான முயற்சிகளை மேற்கொள்வோம். எங்களைப் பொறுத்தவரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஏற்கனவே இறந்துவிட்டது என்று பெல்டன் அச்சுறுத்தியுள்ளார்.



2016 இல் நெதர்லாந்தின் ஹேக் நகரைத் தளமாகக் கொண்ட சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அமெரிக்காவின் ஆயுதப் படையினரும் மத்திய உளவு நிறுவனமும் ஆப்கான் கைதிகளை சித்திரவதை செய்தமை போர்க் குற்றம் என அறிவித்திருந்தது. ரோம் ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே 2002 இல் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட்டது. இனப்படுகொலை, மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள் என்பவற்றை விசாரிப்பதற்கான சர்வதேசத்தின் முதல் நீதிமன்றமாக ICC ஸ்தாபிக்கப்பட்டது. உலகத்தின் 120 நாடுகள் இதில் அங்கத்துவம் வகிக்கின்றன.

அமெரிக்கா, சீனா, ரஷ்யா ஆகிய வல்லரசுகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உருவாக்க ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை. தற்போது அமெரிக்காவுக்கு எதிரான விசாரணைகள் ஏதும் இடம்பெற்றால் நீதிபதிகள் எவரையும் நாட்டிற்குள் நாம் அனுமதிக்க மாட்டோம், அதேபான்று நீதிபதிக்குச் சொந்தமான அமரிவிக்காவிலுள்ள நிதி மூலங்களும் முடக்கப்படும் என்று வோல்டன் அச்சுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் அரசியலமைப்பை விட உயர்ந்த அதிகாரமொன்று உலகத்தில் இருப்பதை நாம் அங்கீகரிக்க மாட்டோம் என்று போல்டன் எச்சரித்துள்ளார்.

## இத்லிப் மீது சிரிய மற்றும் ரஷ்யக் கூட்டணி குண்டு வீச்சை ஆரம்பித்துள்ளது



சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் இறுதிப் புகலிடம் எனக் கருதப்படும் இத்லிப் மற்றும் ஹமா மாகாணங்கள் மீது சிரிய மற்றும் ரஸ்யப் படையினர் கடும் குண்டுவீச்சுத் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். இப்பிரதேசங்கள் சிரியாவின் வடமேற்குப் புறமாக அமைந்துள்ளது.

ஒரு வார தாக்குதலில் 20 பேரளவில் கொல்லப்பட்டுள்ளதாக துருக்கியின் ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. வான் தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்கள், லெஹிகொப்டர்கள் மூலம் வீசப்படும் கொத்தனிக் குன்றுகள் என்பன தெற்கு இத்லிப் மற்றும் வடக்கு ஹமா மாகாணங்களின் குறிப்பிட்ட கிராமங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்லிப் மக்கள் மிக அடர்த்தியாக வாழும் பகுதி என்பதனால் பாரிய மனித அழிவுகள் ஏற்படும் என்று அஞ்சப்படுகின்றது. தெற்கு இத்லிபில் வீசப்பட்ட கொத்தனிக் குண்டுகளால் பல குழந்தைகள் இறந்துள்ளதாக அங்கு மனதாபிமானப் பணியில் ஈடுபட்டுள்ள வைட் ஹெல்மட் குழு அறிக்கையிட்டுள்ளது.

ஈரான், சிரியா, ரஷ்யா ஆகியன ஒன்றிணைந்து கிளர்ச்சியாளர்களைத் தோற்கடிப்பதற்கான இறுதிப் புகலிடமாக இத்லிபை இலக்கு வைத்துள்ளன. ஆனால், அலெப்போ போன்று பாரிய உயிர்ச் சேதம் ஏற்பட போவதாக துருக்கி உள்ளிட்ட சில மேற்கத்திய நாடுகள் கவலை வெளியிட்டள்ளன. இதேவேளை, துருக்கி போர் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்குத் தனது படையினரை இத்லிப் மாகாணத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

## PLO வின் அலுவலகம் மூடப்படுவதாக ட்ரம்ப் அறிவிப்பு



அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் இயங்கி வந்த பலஸ்தீன் விடுதலை அமைப்பின் உத்தியோகபூர்வ அலுவலகத்தை மூடிவிட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார். இது பலஸ்தீனர்களுக்கு எதிரான போர்ப் பிரகடனம் என்று பலஸ்தீன் விடுதலை அமைப்பு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுடனான பேச்சுவார்த்தைகளில் அர்த்த புஷ்டியுள்ள எந்த நடவடிக்கையையும் பலஸ்தீன் விடுதலை அமைப்பு மேற்கொள்ளவில்லை என்பதனால் அலுவலகம் மூடப்பட்டதாக ட்ரம்ப் நிருவாகம் தெரிவித்துள்ளது.

"இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்திற்கு இடையில் விரிவானதும் நிலையானதுமான அமைதியை ஏற்படுத்தும் நோக்கிலே PLO அலுவலகம் வொஷிங்கடனில் செயற்பட அனுமதித்தோம். எனினும் PLO அதனை நிறைவேற்றத் தவறிவிட்டது எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை PLO அதிகாரிகள் ட்ரம்பின் இந்நடவடிக்கையை கடுமையாகக் கண்டித்துள்ளதோடு இது அமைதி முயற்சிகளுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் என்றும் தெரிவித்துள்ளது.


## சிரியாவில் அரசியல் தீர்வை வலுயுறுத்தும் தெஹ்ரான் மாநாடு

சிரியாவின் நெருக்கடிக்கு இராணுவ நடவடிக்கைகள் எந்தவகையிலும் தீர்வாகப் போவதில்லை. அரசியல் இணக்கப்பாட்டுடனான பேச்சுவார்த்தைகளே சிரியா முறுகலுக்கான தீர்வு என்று தெஹ்ரான் உச்சிமாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 2254 ஆவது தீர்மானம் சிரியாவின் அரசியல் தீர்வுத் திட்டத்தையே முன்மொழிகின்றது. 2017 ஜனவரி முதல் எஸ்டானாவில் நடைபெற்று வந்த அமைதிப் பேச்சுவார்த்தைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்கள் தமது திருப்திய வெளியிட்டுள்ளனர்.

சிரியாவில் இடம்பெறும் போர் மற்றும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதும் அமைதி, பாதுகாப்பு, ஸ்திரப்பாடு என்பவற்றை நிலைநாட்டுவதுமே எஸ்டானா பேச்சுவார்த்தைகளின் இலக்குகளாகும். ஈரான், துருக்கி, ரஷ்யா ஆகியன இப்பேச்சுவார்த்தைகளில் தொடராகக் கலந்துகொண்டன. இம்மூன்று நாடுகளும் சிரியாவின் சுதந்திரம், ஐக்கியம், இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு என்பன தொடர்ந்தும் பாதுகாக்கப்படும் என்று ஏற்றுக் கொண்டுள்ளது. ஐ.நா. சட்டம் இவற்றை மதிக்குமாறு வேண்டுவதையும் இம்மூன்று நாடுகளின் தலைவர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். எவ்வாறாயினும், அரசியல் தீர்வுத் திட்டத்தை மீறி சிரிய அரச படையினர் இத்லிப் மீது தாக்குதலை ஆரம்பித்துள்ளமை சமாதான முன்னெடுப்புகளை முடக்கி விடும் என்று அஞ்சப்படுகின்றது.

## ஸல்மானுல் அவ்தா, இவழ் அல் கர்னி ஆகியோருக்கு மரண தண்டனை





சவூதி அறேபியாவில் சிறைவாசம் அனுபவித்து வரும் முன்னணி அறிஞர்களுள் இருவரான இவழ் அல் கர்னி, ஸல்மானுல் அவ்தா ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று அந்நாட்டின் நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது.

டுவிட்டர் பக்கங்களில் அரசாங்கத்தை விமர்சித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளே இவர்கள். இவர்களை விசாரிப்பதற்கென உருவாக்கப்பட்ட விசேட குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இவழ் அல் கர்னி மீது பல்வேறு போலிக் குற்றச்சாட்டுக்கள் அடுக்கப்பட்டன.

இதற்கு முன்னர் விசாரணைக்கு உட்படுத்தப் பட்ட ஷெய்க் சல்மான் அல் அவ்தா மற்றும் அலி அல் உமரி ஆகியோருக்கும் மரண தண்டனை வழங்கலாம் என்று நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளது.

2017 செப்டம்பரில் பயங்கரவாதக் குற்றச்சாட்டின் பேரில் சல்மான் அல் அவ்தா, அலி அல் உமரி, இவழ் அல் கர்னி ஆகியோர் சவூதி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர். முஹம்மத் பின் சல்மானின் கட்டார் குறித்த கொள்கைக்கு இம்மூன்று அறிஞர்களும் ஆதரவளிக்கவில்லை என்பதே இவர்கள் மீதான பிரதான குற்றச்சாட்டாகும்.

ஜூன் 2017 இல் பயங்கரவாதக் குற்றச்சாட்டை முன்வைத்து சவூதி அறேபியா அமீரகம், பஹ்ரைன், எகிப்து என்பன கட்டாருடனான ராஜதந்திர உறவுகளை முறித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரோஹிங்யா: முடிவின்றித் தொடரும் வரலாற்றுத் துயரம்

• முஷாஹித் அஹ்மத்

சமீபகால உலக வரலாற்றில் முழு மொத்த புவிப் பரப்பிலும் மிக மோசமாக சோதிக்கப்பட்ட சமூகம் மியன்மாரின் ரெக்கைன் மாநில ரோஹிங்யர்களே. இதைத்தான் ஐ.நா. பொதுச் செயலாளர் ''புவியில் மிக மோசமாக சோதிக்கப்படும் சிறுபான்மை'' என்று வர்ணித்தார்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் முன்னாள் தலைவர் செய்யித் ராஇத் ஹுஸைன் ''இனச் சுத்திகரிப்புக்கு ஒரு பாடநூல் உதாரணம்'' என்று இந்த வரலாற்றுக் கொடுமையை வர்ணித்திருந்தார். ஆனால், ஐ.நா. மனித உரிமைப் பேரவை முதல் உலக வல்லரசுகள் வரை எவரும் ரோஹிங்யர்களின் துயர் துடைப்பதற்கு செயலளவில் முன்வரவில்லை என்பது மிகுந்த துயரத்திற்குரியது.

2017 ஆகஸ்ட் மாதம் ரெக்கைன் மீது கட்டவிழ்க்கப்பட்ட இராணுவ அடாவடித் தனத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திட்டமிட்டு இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர். 7 இலட்சம் மக்கள் நடந்தே வந்து பங்களாதேஷில் தஞ்சம் புகுந்தனர். இன்னும் 480,000 ரோஹிங்யர்கள் ரெக்கைனில் அடைபட்டுக் கிடக்கின்றனர்.

மியன்மார் இராணுவத்தின் மீது போர்க் குற்ற விசாணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் புதிய தலைவி மிச்செல் பெச்லட் வற்புறுத்தியுள்ளார். சிலி நாட்டின் முன்னாள் ஜனாதிபதியான இவர் கூட இளவயதில் சித்திர வதைகளை எதிர்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

செப்டம்பர் 01 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் தலைமைப் பதவியை ஏற்ற பெச்லட் வெளியிட்ட முதல் அறிவிப்பே ரோஹிங்யர்களுக்கு எதிரான மியன்மார் அரசின் போர்க் குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்பதுதான்.

இது தொடர் பில் மிச்செல் பெச்லட் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் மியன் மாரின் போர்க் குற்றங்களை விசாரிப்ப தற்கு புதியதோர் பொறி முறை உருவாக்கப்பட வேண்டும். இப்பேரவை மியன்மார் தொடர்பான தீர்மானமொன்றை நிறைவேற்றி, அதற்கான ஆதரவைப் பெறுவதற்கு பொதுச் சபைக்கு முன் வைக்க வேண்டும். அதன் பின்னர் போர்க் குற்றத்தோடு சம்பந்தப்பட்டவர்களை ஹேக்கிலுள்ள குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்'' எனத் தெரிவித்துள்ளார்.



கடந்த ஆகஸ்ட் 27 இல் மியன்மார் ரோஹிங்யா விவகாரம் குறித்து ஒரு சுதந்திர சர்வதேச உண்மை கண்டறியும் குழு தனது ஆய்வறிக்கையை வெளியிட்டது. அதில், ரோஹிங்யர்களுக்கு எதிராக மியன்மார் இராணுவம் கட்டவிழ்த்த இனப்படுகொலை திட்டமிடப்பட்டவை. தாராளமான போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் அனைத்தும் ஏற்கனவே நன்கு முறைப்படுத்தப்பட்டவை என்பதை வெளிப்படுத்தியிருந்தது.

இனப்படுகொலைகளுக்குப் பொறுப் பான மியன்மாரின் ஆறு உயர் இராணுவ அதிகாரிகளை ஐ.நா. ஏற்கனவே பட்டியலிட்டுள்ளது.

இதற்கிடையில் ரெக்கைனில் எஞ்சியுள்ள ரோஹிங்யர்கள் மீதான வன்முறைகளும் மனிதாபிமானத்திற்கு முரணான அடாவடித் தனங்களும் தொடர்வதாக மிச்செல் பெச்லட் குற்றம் சுமத்தியுள் ளார். 2018 இல் மாத்திரம் 12,000 ரோஹிங்யர்கள் பங்களாதேஷிற்கு அகதிகளாய் இடம்பெயர்ந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

47 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைப் பேரவை கொடூரமான அடக்கு முறைகள், சட்டவிரோதப் படுகொலைகள், பாலியல் வல்லுறவு, தான்தோன் றித் தனமான கைது நடவடிக்கைகள் தொடர்வதனாலும் பங்களாதேஷில் நிலைகொண்டுள்ள 9 இலட்சத்திற்கும் அதிகமான அகதிகளின் தாயகம் திரும்பும் உரிமை மறுக்கப்படுவதனாலும் ரோஹிங்யர்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டோர் குற்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளதுார்.

பங்களாதேஷிற்கு ரோஹிங்யர்களை அகதிகளாகப் புலம்பெயருமாறு நிர்ப்பந்தித்தமை நடைமுறையிலுள்ள சர்வதேச சட்டங்களின்படி மனித குலத்திற்கு எதிரான குற்றமாகும். இதனை முன்னிறுத்தியே முதற்கட்ட விசாரணைகளை ஆரம்பிக்கலாம் என்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மேற்கொண்ட தீர்மானத்தை பேரவையின் தலைவி பெச்லட் வரவேற்றுள்ளார்.

இது ரோஹிங்ய மக்களின் துயரைத் துடைப்பதற்கு குற்றவியல் நீதிமன்றம் எடுத்துள்ள மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நடவடிக்கை என்று பெச்லட் குறிப்பிட்டுள்ளதோடு, பேரவையின் உறுப்பு நாடுகள் அனைத்தும் மியன்மார் விவகாரம் குறித்து விசாரிப்பதற்கான ஒரு சுதந்திர சர்வதேசப் பொறிமுறையை உருவாக்குவதற்கு எடுக்கும் முயற்சிகளையும் தான் வரவேற்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே மியன்மார் இனப்படுகொலை குறித்து தரவுகளை திரட்டச் சென்ற சர்வதேச பத்திரிகையாளர்கள் சிலர் சிறையிடப்பட்டு நீதிமன்ற விசாரணைகளுக்கு உட்பட்டுள்ளதையும் மிச்செல் கவலையோடு நினைவு கூர்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபையானது கடந்த ஆகஸ்ட் முதல் இதுவரை கொல்லப்பட்ட ரோஹிங்யர்களின் தொகை 25 இற்கும் அதிகமானது என அறிக்கையிட்டுள்ளது. அதேவேளை. பெண்களும் சிறுமிகளும் பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டுள்ளனர். ஆகக் குறைந்தது 288 கிராமங்கள் முற்றாகக் கொழுத்தி எரிக்கப்பட்டுள்ளன. மனித உரிமை கண்காணிப்பகத்தின் செய்மதிப் புகைப்படங்கள் இதனை நிறுவியுள்ளன.




மிச்செல் பெச்லட்

பங்களாதேஷில் நிலைகொண்டுள்ள 9 இலட்சத்திற்கும் அதிகமான அகதிகளின் நிலையோ சோகமயமாகி வருகின்றது. வருமானமின்மையால் பெண்கள் அயல் நாடுகளுக்கு பாலியல் தொழிலாளர்களாக கடத்திச் செல்லப்படுகின்றனர். சுகாதார ஆரோக்கிய குறைபாடுகளால் பெருந்தொகை குழந்தைகள் தொற்று நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர். போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் தொகையோ அதிர்ச்சியூட்டும் அளவு அதிகரித்து வருகின்றது.
எல்லாவற்றுக்கும் அப்பால் அனைத்துக் குழந்தைகளும் கல்வி வாய்ப்பினை முற்றிலும் இழந்துள்ளனர். இவ்வாறு மனிதர்களாய் வாழ்வதற்கான அனைத்து உரிமைகளும் திட்டமிட்டு மறுக்கப்பட்டுள்ள ஒரு மக்கள் திரளின் துயரம் முடிவின்றித் தொடர்கிறது.

மியன்மாரின் ஆங்சான் சூகி அரசாங்கம் இதற்குப் பதில் கூறுமா? அல்லது ஐ.நா. மனித உரிமைப் பெரவைதான் விடை சொல்லுமா?

## மியன்மார் - நிகழ்வுகளின் குறிப்பேடு




- ஹி. இரண்டாம் நூற்றாண்டில் இஸ்லாம் அறிமுகம். உமைய்யா, அப்பாஸியர் ஆட்சிக்காலத்தில் அரக்கானுடன் நெருக்கிய தொடர்பு.
- 1430 ஆம் ஆண்டு நர்மக் ஹிலா ஸுலைமான் ஷாஹ் அரக்கானில் இஸ்லாமிய ஆட்சியை நிறுவினார். இவர் நிறுவிய ஆட்சி 354 ஆண்டுகள் நீடித்தன. 18 ஆட்சியாளர்கள் அரக்கானை ஆண்டனர்.
- 1784 செப்டம்பர் 28 பூதாபாய் எனப்படும் பர்மா ஆட்சியாளர் அரக்கானை ஆக்கிரமித்து பள்ளிவாயல்கள், பாடசாலைகள், அறபு மத்ரஸாக்களை அழித்தான். தொடர்ந்தும் அங்கு பர்மா இராணுவம் நிறுத்தப்பட்டது.
- 1824 இல் பிரிட்டிஷ் இந்தியாவைக் கைப்பற்றியிருந்த காலகட்டத்தில் மியன்மாரை பிரிட்டிஷ் கைப்பற்றியபோது அரக்கானையும் அதனோடு இணைத்தது.
- 1937 இல் பிரிட்டிஷ் அரசாங்கம் அரக்கான் பர்மாவின் ஒரு பகுதி என அறிவித்தது.
- 1948 ஜனவரி 4 இல் பர்மா பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்றது. சுதந்திரத்தைத் தொடர்ந்து (Union Citizenship Law) எனும் சட்டத்தை பர்மா அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. அது தேசிய அடையாள அட்டையைக் கட்டாயப்படுத்தியது. ஆனால், அரக்கான் முஸ்லிம்களுக்கு தேசிய அடையாள அட்டை மறுக்கப்பட்டது.
- 1962 இல் பர்மாவில் இராணுவ சதிப்புரட்சி நடந்தது. தேசிய அடையாள அட்டைக்குப் பகரமாக தேசியப் பதிவு அட்டை (National Registration Card) ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இப்பதிவு அட்டையும் முஸ்லிம்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.
- 1982 நே வின் (Ne Win) என்பவர் இராணுவ சதிப்புரட்சி மூலம் அதிகாரத்திற்கு வந்தார். முஸ்லிம்களிடமிருந்து தேசியப் பதிவு அட்டை பிடுங்கப்பட்டது. முஸ்லிம்கள் பர்மாவின் தேசியக் குடிகள் அல்ல என அறிவிக்கப்பட்டதோடு பங்களாதேஷில் இருந்து இடம்பெயர்ந்த அகதிகள் என்று நே வின் அரசு அறிவித்தது.


### இனப்படுகொலையின் வரலாறு.

- 1940 - இரண்டாம் உலகப் போரின் போது ஆங்கிலேயர்களுக்கும் ஜப்பானியர்களுக்குமிடையிலான போர்க்களமாக பர்மா மாறியது. குறிப்பாக சுதந்திரக் குடியரசாகக் காணப்பட்ட அரக்கான் நாடு பிரிட்டனின் ஆடுகளமாக மாறியது, அரக்கான் மாநிலமே 1784 இல் பர்மாவுடன் இணைக்கப்பட்டு ரெக்கைன் என மருவியது. அங்கு சிறுபான்மையாக மூக் இன பௌத்தர்கள் குடியேற்றப்பட்டனர். மூக் இனத்தவரை அரக்கான் ரோஹிங்கிய முஸ்லிம்களுக்கெதிராகத் திருப்பிய பர்ம அரசாங்கம் 1940 களிலிருந்தே இனப்படுகொலைகளைக் கட்டவிழ்த்தது. 1940 களிலேயே ஒரு இலட்சம் முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். 308 முஸ்லிம் கிராமங்கள் முற்றாக அழிக்கப்பட்டன.
- 1942 - பர்மா அரச படையினரால் கட்டவிழ்க்கப்பட்ட திட்டமிட்ட இன வன்முறையின் போது நூற்றுக் கணக்கான அரக்கான் ரோஹிங்கிய முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். பள்ளிவாயல்கள், அறபு மத்ரஸாக்கள் கொளுத்தப்பட்டன. 5 இலட்சம் ரோஹிங்கியர்கள் கிழக்கு பாகிஸ்தானுக்கு (தற்போதைய பங்களாதேஷிற்குப்) புலம் பெயர்ந்தார்கள்.
- 1948 ஜனவரி 4 - பர்மா எனும் பௌத்த நாடு ஏகாதிபத்திய பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்றது. அதன்போது அரக்கான் பர்மாவின் ஒரு பகுதி என அறிவிக்கப்பட்டது.
- 1954 - மூட்டப்பட்ட இனக் கலவரத்தில் நூற்றுக்கணக்கான அப்பாவிமக்கள் கொல்லப்பட்டதோடு பல பத்தாயிரம் பேர் தாய்லாந்து, மலேஷியா, பங்களாதேஷ் என்பவற்றுக்குத் தப்பியோடினர்.
- 1978 - இராணுவ அரசாங்கம் திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்தது. பல்லாயிரக் கணக்கானோர் அகதிகளாக வெளியேறினர்.
- 1982 - நே வின் ஆட்சி வந்தது. ரோஹிங்கியா என அரக்கான் முஸ்லிம்கள் அழைக்கப்பட்டது சட்ட ரீதியில் தடுக்கப்பட்டது. பங்காளிகள் என்றே அழைக்கப்பட வேண்டுமென சட்டம் பிறப்பிக்கப்பட்டது. பர்மாவில் பங்காளிகள் வந்தேறு குடிகள் எனக் கருதப்பட்டனர்.
- 1990 - இராணுவம் நேரடியான இனச் சுத்திகரிப்பில் இறங்கியது. 268 000 ரோஹிங்கியர்கள் எல்லைப்புற நாடான பங்களாதேஷிற்கு இடம்பெயர்ந்தனர்.
- 1994 - திட்டமிட்ட அரச பயங்கரவாதம் கட்டவிழ்க்கப்பட்டு இடம்பெற்ற வன்முறைகளில் நூற்றுக்கணக்கான ரோஹிங்கியர்கள் கொல்லப்பட்டனர்.
- 1996 - அரக்கானின் முக் இனத்தவர்களின் ஆதரவுடன் இராணுவம் நடாத்திய இனக் கலவரங்களில் பெண்கள் வேட்டையாடப் பட்டனர். மஸ்ஜிதுகள் கொளுத்தப்பட்டன.
- 2005 - மீண்டும் அரச படையினரின் வன்முறைகள் ஆரம்பிக்கப்பட்டன.
- 2012 - ஜுன் 10 இல் பௌத்த பெண் ஒருவரை ரோஹிங்கிய இளைஞர்கள் பாலியல் பலாத்காரம் செய்கின்றனர் என்று வதந்தி பரப்பப்பட்டது. அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு திட்டமிட்ட முறையில் இனச் சுத்திகரிப்பு இடம்பெற்றது.
- 2017 - ஆகஸ்ட் இதற்கு முந்திய சில ஆண்டுகளாக அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்ட இனச் சுத்திகரிப்பு நடவடிக்கை கனகச்சிதமாக அரங்கேற்றப்பட்டு 07 இலட்சம் ரோஹிங்கியர்கள் வெளியேற்றப்பட்டனர். பங்களாதேஷில் துறைமுக நகராக கொக்ஸ் பஸாரில் ரோஹிங்கிய அகதிகள் தட்டழிந்து வருகின்றனர்.
- 2018 - ரெக்கைன் ரோஹிங்கியர்களின் வாழ்விடம் தரைமட்டமாக்கப்பட்டு மியன்மார் அரசாங்கத்தின் இராணுவ முகாம்கள் உருவாக்கப்பட்டுள்ளதோடு பெற்றோலிய வளம் உள்ளதாக நம்பப்படும் நிலங்கள் சீனாவுக்கு ஒப்படைக்கப்படவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துமீறிய குடியேற்றங்களும் கேள்விக்குறியாகும் முஸ்லிம் இருப்பும்

ஹெட்டி ரம்ஸி,
தோப்பூர் - எஸ்.ஏ.எம். அஸ்மி



எமது நாட்டில் தனித்துவம் வாய்ந்ததொரு மாவட்டமாக திருகோணமலை மாவட்டம் காணப்படுகின்றது. இயற்கை எழில் கொஞ்சும் துறைமுகத்தோடு, மூவின மக்களும் இரண்டறக் கலந்து வாழும் இம்மண்ணில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னரான காலப்பகுதியில் சிறுபான்மையினரை இலக்கு வைத்து பல்வேறு காய் நகர்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிலும் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் நிலங்கள் திட்டமிட்ட வகையில் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதுடன் குடியேற்றங்களும் நடைபெற்று வருவதனையும் பரவலாக அவதானிக்க முடிகின்றது.

இதன் ஓர் அங்கமாக, திருகோணமலை மாவட்ட குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட, புல்மோட்டை மாலானா ஊர் என்ற இடத்தில், அத்துமீறிய சிங்களக் குடியேற்றம் நடைபெற்று வருவதாக அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். இதேவேளை அப்பகுதியைச் சூழவுள்ள தென்னைமரவாடி, விளாந்தோட்டம், குடாத்தரை, மரக்கறிக்குடா பகுதிகளில் சிலாபம், நீர்கொழும்பு போன்ற பிரதேசங்களிலுள்ள சிங்கள மக்கள் வந்து தற்காலிக கொட்டில்களை அமைத்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருவதுடன் அப்பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு உரிமை கோரியும் வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

குறித்த மாலானா பிரதேசத்தில் தற்போது 12 வீடுகளுக்குரிய அத்திவாரமிடும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இதற்கான அனைத்து பாதுகாப்பு உதவிகளும் பொலிஸாராலும் மற்றும் புல்மோட்டை அரிசிமலை விகாரைக்குப் பொறுப்பாகவுள்ள விகாராதிபதியினாலும் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காக, இங்கு காணப்படுகின்ற பெரும்பாலான காடுகள் அழிக்கப்பட்டு வருவதுடன், இயற்கை வளங்களும் சூறையாடப்படுகின்றன. இங்கு பகல் வேளைகளில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளாது இரவு வேளைகளில் மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு தற்போது இரவோடு இரவாக ஒன்பது கொட்டில்களை அமைத்து குடியேறும் அத்துமீறிய முயற்சியில் இறங்கியுள்ளனர்.

குறித்த தேரர் சிங்கள மக்களை காடு வெட்டத் தூண்டி, இந்த கொட்டிலமைக்கும் விடயத்தில் ஈடுபடுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படும் அதேநேரத்தில், ஏற்கனவே புல்மோட்டை முஸ்லிம்களுக்கு காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு, வன இலாகா திணைக்களத்தினால் தடைவிதிக்கப்பட்டிருந்த 17 குடும்பங்களுக்குரிய காணிகளிலேயே தற்போதைய குடியேற்றம் நடைபெற்று வருகிறது.

கொட்டிலமைக்கும் முன்னதாக இவர்கள் காடு வெட்டும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில் வனபரிபாலன இலாகா திணைக்களத்திற்கு இவ்விடயம் கொண்டு செல்லப்பட்டதையடுத்து, பொலிஸாரின் உதவியுடன் காடுவெட்டும் செயலைத் தடை செய்திருந்தும் மறுதினம், குறித்த தேரரின் தலையீட்டினால் மீண்டும் காடு வெட்டப்பட்டு, விடியற் காலையில் கொட்டிலும் அமைக்கப்பட்டுள்ளதோடு, கடந்த புதன்கிழமை (05) முதல் அத்திவாரமிடும் வேலைகளும் தீவிரமாக இடம்பெற்று வந்தன.

இவ்விடயம் தொடர்பில் பிரதேச செயலாளர், வன இலாகா திணைக்களத்தினர், மாகாண காணி ஆணையாளர் ஆகியோருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டும் இதுவரைக்கும் குறித்த இடத்திற்கு யாரும் சமுகமளிக்கவில்லை என்பது இம்மக்களின் பாரிய குற்றச்சாட்டுக்களாகும்.

ஏற்கனவே மாலானா ஊர் என்ற இடத்தில், 2014 களில் புதிய விகாரையொன்றும் நிறுவப்பட்டது. பின்னர், பௌத்த தியான நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டு, அவற்றைச் சூழ வெளி மாவட்டங்களிலுள்ள சிங்கள மக்களைக் கொண்டு வந்து குடியேற்றியுள்ளனர். இப்பகுதி விஸ்தரிக்கப்படுமாக இருந்தால் இதற்கு அருகாமையிலுள்ள கொக்குளாய்க் களப்பு பறிபோகும் அபாயம் ஏற்படலாம் என்ற அச்சம் மக்கள் மத்தியில் இருந்து வந்தது.

முஸ்லிம்களுக்குரிய 5 ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டு, கொக்குளாய்க் களப்பு பகுதியில் இராணுவ முகாம் ஒன்று ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. இவர்களின் துணையுடன் கொக்குளாய்க் களப்பை ஆதிக்கம் செலுத்துவதன் மூலம் கொக்குத் தொடுவாய், கருநாட்டுக் கேணி, தென்னைமரவாடி, புல்மோட்டை முதலான பிரதேசங்கள் புதிதாகக் குடியேறுகின்ற சிங்கள மக்களின் அதிகாரத்திற்குள்ளாகும் வாய்ப்பேற்படும் என்ற அச்சமும் இருந்து வருகிறது.

நீண்ட காலமாக காணிப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்ற முஸ்லிம் பிரதேசங்களில் புல்மோட்டையும் ஒன்று. புல்மோட்டையில் குடியிருப்பு நிலங்களும் ஐந்து தலைமுறைக்கும் மேலாக செய்கை பண்ணப்பட்டு வரும் ஆயிரக்கணக்கான விவசாய மற்றும் தோட்டக் காணிகளும் இலக்கு வைக்கப்படுகின்றன. கடந்த அரசாங்கங்களினால் தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகள் என்றும் வனவள இலாகாவுக்குச் சொந்தமான காணிகள் என்றும் பாதுகாப்புப் படைகளுக்கு முகாம் அமைப்பதெற்கென்றும் விகாரைக் காணிகள் தியான நிலையங்கள் அமைப்பதெற்கென்றும் பல ஏக்கர் காணிகளை புல்மோட்டை முஸ்லிம்கள் இழந்துள்ளனர்.

இக்காணிகள் போக, மேலும் பல ஏக்கர் நிலங்களும் குறிவைக்கப்படுகிறது. அரசாங்கப் படைகளின் கெடுபிடிகளாலும் குறித்த விகாராதிபதியின் முயற்சியாலும் அரசாங்க அதிகாரிகளின் பொறுப்பற்ற - அதிகார துஷ்பிரயோகங்களாலும் புல்மோட்டை முஸ்லிம்களுக்குச் சொந்தமான பல ஏக்கர் காணிகள் இன்று கையறு நிலையில் உள்ளன.

பொன்மலைக்குடா அரிசிமலை, மண்கிண்டி மலை (மதீனா நகர்), இரும்படிச்சான் (செம்பிலிய கந்தை), கண்ணீராவி பிலவு, ஆண்டாங்குளம், சாத்தானமடு, காட்டுத் தென்னை முறிப்பு, தோண்டாம் முறிப்பு, ஸபா நகர் (ஓடா மலை) போன்ற பிரதேசங்களிலெல்லாம் புல்மோட்டை முஸ்லிம்கள் காணிப் பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர்.

முஸ்லிம்கள் காடுவெட்டினால் உடனடியாக குச்சவெளி பிரதேச செயலாளர், வனவள இலாகாவினர் முதற்கொண்டு சகல அரச தரப்பினரும் களத்தில் இறங்கி விடுகின்றனர். ஆனால், அவர்களுக்கு வேண்டப்பட்ட சமூகத்தவர்கள் என்றால் சட்டங்களும் அதிகாரங்களும் மௌனித்து விடுகின்றன.

இது இவ்வாறிருக்க, புல்மோட்டை 13 ஆம் கட்டை பகுதியில் சட்ட விரோதமாக பெரும்பான்மை மதகுருவினால் இலங்கையின் தென் பகுதி மற்றும் ஏனைய பகுதிகளிலிருந்து வரவழைக்கப்பட்டு குறித்த பிரதேசத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான சில காணிகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த சட்டவிரோத குடியேற்றம் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

இது விடயமாக கடந்த 10ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் அவர்களினால் ஜனாதிபதி செயலாளருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து இச்சட்ட விரோத குடியேற்றங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது விடயமாக ஜனாதிபதியின் செயலாளர் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபருக்கு சட்ட விரோதக் குடியேற்றங்களை நிறுத்தும்படி உத்தரவிட்டதற்கமைவாக குச்சவெளி பிரதேச செயலாளர், உதவிச் செயலாளர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அன்வர், புல்மோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொறுப்பான கிராம சேவகர் உள்ளிட்டோர் குறித்த பகுதிக்கு உடன் விஜயம் மேற்கொண்டு களநிலவரத்தினை பார்வையிட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பிரதேச செயலாளரினால், சட்ட விரோதக் குடியேற்றங்கள் மற்றும் அவர்களால் நிர்மாணிக்கப்பட்டு வரும் குடிசைகள் உள்ளிட்டவைகளைப் பார்வையிட்டு உடன் அறிக்கையொன்றினை தயாரித்துச் சமர்ப்பிக்குமாறு கிராம சேவையாளரை வேண்டிக் கொண்டதுடன், வன பரிபாலன திணைக்களம், புல்மோட்டை பொலிஸ் நிலையம், அரசாங்க அதிபருக்கு சட்ட விரோதக் குடியேற்றங்களை அகற்றும்படி கடிதத்தை அனுப்பி வைப்பதாகக் தெரிவித்துள்ளார்.



அரசின் தற்காலிக தடையுத்தரவு எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதையும் அது எவ்வளவு தூரம் அமுல்படுத்தப்படுகிறது என்பதையும் இனிமேல் தான் அவதானிக்க வேண்டியிருக்கிறது. பிரச்சினை பூதாகரமான பின்பு அரசாங்கம் இவ்வுத்தரவை பிறப்பித்திருக்கிறது. எனினும் இவ்வுத்தரவையும் மீறி சட்டவிரோதக் குடியேற்றங்கள் முன்னெடுக்கப்படுவதற்கான சாத்தியங்களே அதிகம் உள்ளன. இது தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்தும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பது பாதிக்கப்பட்ட மக்களது அவாவாகும்.

இதேவேளை இவ்வாறானதொரு பிரச்சினையை தோப்பூர், நீணாக்கேணி பிரதேச முஸ்லிம் குடும்பங்களும் எதிர்நோக்கியுள்ளன.

சேருவில பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராமங்களில் காணப்படும் ஒரே ஒரு முஸ்லிம் கிராமம் நீனாக்கேணிக் காட்டுக் கிராமமாகும். இப்பிரதேசத்தில் சுமார் 200 வருடங்களுக்கு மேலாக முஸ்லிம்கள் வசித்து வருவதுடன், விவசாய நிலங்களில் பயிர்ச்செய்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள் வாழ்ந்தமைக்கான அனைத்து ஆதாரங்களும் காணப்படுகின்றன.

கடந்த 1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்பிரதேசத்தை அண்டியுள்ள பல சிங்கள கிராமங்களுக்கு காணி உரிமைப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் அக்காலத்தில் இடம்பெற்ற கொடூர யுத்தம், போக்குவரத்து பிரச்சினைகள், உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரியான தொடர்பின்றி காணப்பட்டமையினால் இவ் அனுமதிப் பத்திரம் நீனாக்கேணிக் காடு கிராம மக்களுக்கு கிடைக்கவில்லை.

இவ்வாறான நிலையில் கடந்த வருடம் முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்து வரும் 49 1/2 ஏக்கர் காணிகளும் தொல்பொருள் ஆய்வுகள் திணைக்களத்துக்கு சொந்தமானது என வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு, 49 1/2 ஏக்கர் காணி உட்பட அதனைச் சூழவுள்ள 1000 ஏக்கர் காணிகள் சேருவில ரஜமகா விகாரைக்கு சொந்தமானது என உரிமை கோரப்பட்டுள்ளது. இதனால் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்ற 100 க்கும் மேற்பட்ட குடும்பங்களின் குடியிருப்பு காணிகளும், 300 ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய நிலங்களும் பறிபோகும் நிலையில் உள்ளது.

கடந்த வருடம் தொல்பொருள் ஆய்வுகள் திணைக்களத்துக்கு காணிகள் உள்வாங்கப்பட்ட பின் மக்களின் வேண்டுகோளுக்கமைய நீனாக்கேணி கிராமத்திற்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் ஆகியோர், இக்கிராமத்தில் வசிக்கும் எவரும் வெளியேறத் தேவையில்லை, தங்களது காணிகளில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள முடியுமெனவும் குறிப்பிட்டதோடு பிற்காலத்தில் இதற்கு சுமுகமான தீர்வொன்றினை பெற்றுத் தருவதாகவும் வாக்குறுதியளித்தனர்.

இதனை நம்பிய கிராம மக்கள் கடந்த வருடம் பயிர்ச்செய்கைக்கு தயாரான வேளை விகாரைக்கு சொந்தமான காணிகளில் எதுவும் செய்ய முடியாது என்ற தோரணையில் இனந்தெரியாத சிங்கள இளைஞர்களால் இப்பிரதேசம் தாக்கப்பட்டது. இதில் இருவர் காயமடைந்ததுடன், ஏழு வீடுகளும் சேதமாக்கப்பட்டன. இப்பிரச்சினை தொடர்பாக இடம்பெற்ற உயர் மட்ட கலந்துரையாடலில் இதற்கான நிரந்தரத் தீர்வொன்று பெறப்படும் வரை, இப்பிரதேசத்தில் குடியிருப்பவர்கள் மாத்திரம் குடி இருக்கலாம், புதிய கட்டிட வேலைகள், திருத்த வேலைகள் எதுவும் மேற்கொள்ள முடியாது என தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானமெடுக்கப்பட்டு ஒரு வருடங்களுக்கு மேலாகியும் மக்களுக்கான காணி உரிமைப் பத்திரங்களோ, நிரந்தர தீர்வோ பெற்றுக் கொடுக்கப்படவில்லை. இதனால் இப்பிரதேசத்தில் வசிக்கும் குடும்பங்களின் எதிர்கால இருப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளதுடன் தமது காணிகளில் எந்த ஒரு வேலையையும் செய்ய முடியாது திண்டாடுகின்றனர்.

இந்த நல்லாட்சி அரசாங்கத்திலாவது நல்லதொரு தீர்வு கிடைக்குமென்று நம்பி தினம் தினம் அரசியல்வாதிகளின் பின்னால் இம் மக்கள் அலைந்து திரிகின்றனர். இம்மக்களின் எதிர்கால இருப்பினை கருத்திற் கொண்டு இதற்கு நிரந்தர தீர்வினை காண வேண்டியது மாவட்ட முஸ்லிம் தலைமைகளின் கடமையாகும்.

எனினும் இதுவரைக்கும் இந்த சட்ட விரோத ஆக்கிரமிப்புக்கு எதிராக வழக்குப் பதிவொன்றைச் செய்து, சட்டத்தின் முன்நிறுத்த யாரும் முன்வரவில்லை. அவ்வாறு வழக்குப் பதிவொன்றைச் செய்து சட்டத்தின் முன்நிறுத்தப்படவில்லையாயின் புல்மோட்டை மாலானா, தோப்பூர் நீணாக்கோணி இதுபோன்ற இன்னும் பல இடங்களையும் முஸ்லிம்கள் இழக்க நேரிடலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


• அனஸ் அப்பாஸ்

# தீக்கு இரையான திகனையில் இருந்து சூரிய அடைப்பொறி கண்டுபிடிப்பு

எஸ்.எச். ரஹ்மத்தும்மா - என்.எஸ். எம். சரீப்தீன் தம்பதிகளின் அன்புப் புதல்வர் எம்.எஸ்.எம். சப்ரீன் கண்டி மாவட்டத்தின் திகனை, தியபுபுல பிரதேசத்தை சேர்ந்தவர். 13 வயதான இவர் சூரிய சக்தியில் இயங்கும் அடைப்பொறியை (Solar Power Incubator) கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளார்.

இக்கருவி சூரிய படலின் மூலம் மின்னைப் பெற்று அதை மின்கலத்தில் சேமிக்கின்றது. மின்கலத்தினால் இப்பொறிக்கு மின் கிடைக்கப்பெற்று அது இயங்க ஆரம்பிக்கும். சாதாரண அடைப்பொறிக்கு செலவாகும் மின் அதிகம் என்பதால் மின்சார செலவும் அதிகமாக இருக்கும். அதனை நிவர்த்திக்கும் வகையில் இக்கருவி சூரிய சக்தியில் இயங்குகின்றது. இவ் அடைப் பொறி யின் மூலம் ஒரே தடவையில் 30 முட்டைகளை அடை காக்க முடியும்.




ராஜவெல்ல, கும்புக்கந்துர அல்-ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தற்போது தரம்-8 இல் கற்கும் மாணவரான சப்ரீன், கழிவுப் பொருட்களால் புதிய ஆக்கங்களை வித்தியாசமாக அமைப்பதிலும், வீட்டுத் தோட்ட பராமரிப்பிலும் இயல்பிலேயே அதிக ஈடுபாடு கொண்டவர்.

சித்திரப் போட்டிகள், தமிழ், சிங்கள, ஆங்கில தினப் போட்டிகளிலும் சான்றிதழ்களை குவித்துள்ள சப்ரீன், மத்திய மாகாண சபையுடன், பேராதனை பல்கலைக்கழகம் இணைந்து நடாத்திய புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கான e-INNO 2016 - 2017 போட்டிகளிலும் சிறப்புப் பரிசு வென்றவர். கணித்தல் தேர்ச்சி 'எபகஸ்' பயிற்சிநெறியில் தங்கப் பதக்கம் வென்றவர். தற்போது மாகாண மட்ட சிங்கள தினப் போட்டிக்கு தயாராகி வருகின்றார்.

''அதிக மின் விரயமின்றி இயங்கும் மின் பாரம் தூக்கி'', ''சூழல் மாசடைவதை குறைக்கும் வாகனம்'' ஆகியவற்றை கண்டுபிடிக்கும் எதிர்கால இலக்குடன் பயணிக்கும் சப்ரீன், இந்தியாவின் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஏ.பீ.ஜே. அப்துல் கலாமை தனக்கான முன்மாதிரியாகக் குறிப்பிடுகின்றார்.

''வித்தியாசமாக சிந்திக்க உங்களுக்கு துணிவிருந்தால் அறியப்படாத விஷயங்களுக்கு சவால் விடும் ஆற்றலும் உங்களுக்கு இருக்கிறது என்றே அர்த்தம்'' - டாக்டர் ஏ.பீ.ஜே. அப்துல் கலாம்

அல்ஹம்துலில்லாஹ்! எல்லாம் வல்ல இறைவனுக்கும், பெற்றோர், உறவினர்கள், பாடசாலை அதிபர் அஷ்-ஷெய்க் ரஷாட் (நளீமி), விஞ்ஞான பாட ஆசிரியை திருமதி. ராகினி, வகுப்பாசிரியைகளான திருமதி. லோகினி, திருமதி. ரிபாயா, ஆசிரியை திருமதி ஹசீமா, குறிப்பாக முட்டைகளை அடை காக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான மேலதிக அறிவுரைகளை பெறுவதற்கு புத்தகமொன்றை பரிசாக வழங்கிய ஆசிரியை திருமதி. நிஹாரா, தேவையான உதவிகளை செய்து தந்த ஆசிரியை திருமதி. ரத்னாவதி, ஆசிரியர் இம்தியாஸ், அடைகாத்தல் தொடர்பாக அனுபவ அறிவுரைகளை வழங்கிய சகோதரர் ரிம்சான், வழிகாட்டல்களைத் தந்த பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் துறை விரிவுரையாளர் விஜேகுலசூரிய ஆகிய பலருக்கும் இவரது நன்றிகள் நீள்கின்றன.

எதிர்காலத்தில் தான் ஒரு மின் பொறியியலாளராக வர வேண்டும் என்ற இலட்சியத்துடன் பயணிக்கும் சப்ரீன், அதற்காக தன்னை கல்வி ரீதியாக பலப்படுத்தி வருகின்றார்.

''நான் முதலாவது முறையாக பரிசோதனைக்காக அடைகாக்க வைத்த முட்டைகளில் குஞ்சுகளை பெற முடியாமல் போனது. தொடர்ந்து மனம் தளராமல் முயற்சித்ததன் விளைவையே இன்று சாதனையாக கண்டுகொண்டேன்'' என்று முயற்சியாளர்களுக்கு வலு சேர்க்கும் அறிவுரை ஒன்றையும் அவர் குறிப்பிட்டார்.

அழிவில், ஆக்கம் ஒன்றைக் கண்டறியும் முயற்சி இது. அண்மையில் இனவாதிகளால் குறி வைக்கப்பட்டு அழிவை எதிர்நோக்கிய திகனை பிரதேசத்தில் இருந்து ஒரு கண்டுபிடிப்பை ஒரு பாடசாலை மாணவனால் உருவாக்க முடிந்திருக்கின்றது என்பது மகிழ்ச்சியுடன் கூடிய உத்வேகத்தைத் தரும் ஒரு செய்தியே.

கடினமான சூழ்நிலைகளிலும் கவனமாக அடைகாக்கப்பட்டு இன்று சமூகத்தின் ஒரு சாதனையாக குஞ்சு பொறித்துள்ளார் திகனை சப்ரீன். கண்டுபிடிப்புகள் மக்களைச் சென்றடைந்தால் மட்டுமே வளர்ச்சி என்பது வேகமெடுக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. அதுவே அந்த கண்டுபிடிப்புக்கான உண்மையான அங்கீகாரம். இந்தப் பிஞ்சின் முயற்சிகள் நாட்டுக்கும், சமூகத்துக்கும் பயன்தர ஆவண செய்ய வேண்டியது பொறுப்புதாரிகளின் கடமை.

# இணைய குற்றங்கள்




இஸ்பஹான் சாப்தீன்
Diploma in Journalism
M.A. Journalism and Mass Communication (Reading)

உலகம் முழுவதும் உள்ள ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட இலட்சக் கணக்கான கணனிகளின் வலைப்பின்னல் இணையம் (Internet) என அழைக்கப்படுகிறது. அதாவது, (International Network of Computers) சர்வதேச கணனி வலைப் பின்னலே இணையமாகும். Internet என்ற சொல், International Network என்ற இரண்டு சொற்களிலும் தடித்த எழுத்தில் உள்ளவற்றின் கூட்டினாலேயே உருவாகியுள்ளது.


இந்த இணையத்தின் வழியாக மேற்கொள்ளப் படும் செயல்பாடுகள் நிகழும் மெய்நிகர் (Virtual) வெளியையே இணைய வெளி (Cyberspace) என அழைக்கிறோம். கணனி தொழில்நுட்பம் மற்றும் இணையம் எமது நாளாந்த வாழ்வின் இன்றியமையாத ஒரு அங்கமாக மாறிவிட்டது. சகலரும் சகலதும் எண்ம (Digital) மயமாகி வருவதால் இணைய வெளியின் ஆழ அகலங்களும் விரிந்து கொண்டே செல்கின்றன. நிஜ உலக (Real World) செயற்பாடுகள் அனைத்தும் இணைய மயமாவதால் மெய்நிகர் உலகு (Virtual World) உருவாகி வருகிறது.

இந்த இணைய வெளிக்குள் கணனி வாயிலாக நுழைந்த நாம் இன்று அதன் உச்ச வளர்ச்சியின் வெளிப்பாடுகளான திறன்பேசி (Smart Phone) வாயிலாகவும் இன்ன பிற Laptop, Palmtop, Tablets போன்ற கருவிகள் (Devices) வாயிலாகவும் நுழைகிறோம்.

2017 டிசம்பர் 31 ஆம் திகதியின் கணிப்புப்படி 7,634,758,428 உலக சனத்தொகையில் 4,156,932, 140 பேர் இணைய பயனர்களாக (Internet Users) உள்ளனர். இது உலக சனத்தொகையில் 54.4 சதவீதமாகும்.

2020 ஆகும் போதும் 5 பில்லியன் பேர் இணைய வெளியிலும் தொடர்புபடுவார்கள் என்றும் 50 பில்லியன் கருவிகள் (Devices) தொடர்பு பட்டிருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அதே நேரம் 75 வீதமான இணைய உள்கட்டமைப்புகள் மூன்றாம் தரப்பு மேகக் கணிமைத் திறனை வழங்கும் நிறுவனங்கள் (3rd party clouds) அல்லது இணைய சேவை வழங்குனர்கள் (Internet service providers) கட்டுப்பாட்டில் இருக்கும் எனவும் கூறப்படுகிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் 6.71 மில்லியன் பேர் இணையத்தில் பயனர்களாக உள்ளனர். அதிலும் குறிப்பாக சமூக ஊடக செயல்நிலைப் பயனர்களாக (Active social media users) 6 மில்லியன் பேர் காணப்படுகின்றனர். இவர்களுள் 92 வீதமானவர்கள் திறன் பேசி மூலமாகவே இணைய வெளியில் செயல்படுகின்றனர்.



இலங்கை தகவல் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணையத்தின் தகவல் பிரகாரம், 2009 ஆம் ஆண்டில் சுமார் 90,000 ஆக இருந்த மொபைல் புரோட்பேண்ட் சந்தாக்கள் 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சுமார் நான்கு மில்லியனாக அதிகரித்துள்ளது.

எனவே, இணையத்தினால் பெற முடியுமான அனுகூலங்கள், பயன்கள் மற்றும் நன்மைகள் இவை தான், இவ்வளவுதான் என யாராலும் வரையறுத்துக் கூற முடியாது. அந்த அளவுக்கு இந்த இணையவெளி மிகவும் பரந்துபட்ட ஒரு களமாகக் காணப்படுகிறது. அதேநேரம், இதில் பிரதிகூலங்களும், தீமைகளும் உண்டு என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

நான்கு சுவர்களுக்குள் இருந்து கொண்டு நம் கையில் உள்ள அல்லது நமது கட்டுப்பாட்டில் உள்ள திறன் பேசி மூலமாக இணையத்தில் இணைகிறோம். இணையவெளியில் [illegible] மேற்கொள்கிறோம். எனவே, நாம் பாதுகாப்பாகத் தான் இருக்கிறோம் என்று நினைத்துக்கொள்கிறோம்.

உண்மையில் நாம் ஒரு பாதுகாப்பான இடத்தில் இருந்து கொண்டு எமது கையடக்க திறன் பேசி மூலம் இணையத்தில் உலவுவதால் நமக்கு இந்த எண்ணம் வருவது நியாயம்தான். ஆனால், உண்மை அதுவல்ல. நாம் எந்தளவுக்கு அவதானமாக இருக்கிறோமோ அந்தளவுக்கு பாதுகாப்பாக இயங்க முடியும். எந்த பாதிப்புகளும் இல்லாமல் உச்ச கட்ட பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நிஜ உலகில் (Real World) நாம் திருடர்களின், எதிரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாகி இருப்போம். அதைவிட பாரதூரமான செயல்களை செய்யும் திருடர்களும், எதிரிகளும் மெய்நிகர் (Virtual World) உலகில் உள்ளனர் என்பதை மறந்துவிடக் கூடாது.

உங்களது ஒரு பொருளை சாதாரணமாக ஒருவர் திருடினால் அது உங்களுக்கு ஒரு சில மணி நேரங்களுக்குள் குறித்த பொருள் திருடப்பட்டுள்ளது என்பது தெரிந்து விடும். ஆனால், இணைய திருடன் (Cyber Theft) ஏதாவது ஒன்றைத் திருடினால் உங்களுக்கு மிகப் பெரும் இழப்பு, ஆபத்து ஏற்படும் வரை உங்களால் உணரக்கூட முடியாது போகும்.

அதேபோல், உங்களிடம் இருந்து திருட்டுப் போன பொருள் உங்க ளுக்கு மீளக் கிடைத்தால் அது உங்களிடம் மாத்திரம் தான் உள்ளது என உறுதியாகச் சொல்ல முடியும். ஆனால், இணைய வெளியில் திருடப்பட்ட ஒன்று கணப்பொழுதில் பல்லாயிரக்கணக்கான மக்களின் பார்வைக்குச் சென்று விடும். எனவே, இணைய வெளியில் திருடப்பட்ட ஒன்று முழுமையாக மீள உங்களுக்கு கிடைத்து விடும் என உறுதியாக சொல்ல முடியாது.

இது ஒரு உதாரணம் மாத்திரமே. இது போன்ற பாதிப்பை ஏற்படுத்தும் பல்வேறு விடயங்களும், நடவடிக்கைகளும் இணைய வெளியில் காணப்படுகின்றன.

இணைய வெளியில் தனிமனிதனுக்கு பாதிப்பை [illegible]க்கம் முழு மனித குலத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்துவது வரையிலான விடயங்களும் நடவடிக்கைகளும் காணப்படுகின்றன. அந்த பாதிப்புகள் பல தரப்பட்டவை. இவற்றையே நாம் இணைய குற்றங்கள் (Cyber Crimes) எனக் குறிப்பிடுகிறோம்.

இதனை, கணனி குற்றங்கள் (Computer Crimes), ஈ குற்றங்கள் (E-Crimes), உயர் தொழில்நுட்ப குற்றங்கள் (Hi tech crimes), இலத்திரனியல் குற்றங்கள் (Electronic Crimes), வலைப்பின்னல் குற்றங்கள் (Network Crimes), கணனி சார் குற்றங்கள் (Computer related Crimes), இணைய குற்றங்கள் (Internet Crimes), தொடரறா குற்றங்கள் (Online Crimes), தகவல் யுக குற்றங்கள் (Information Age Crimes), எண்ம குற்றங்கள் (Digital Crimes) என பலவாறு அழைக்கப்படுகிறது. அதாவது, குற்றங்கள், எண்ம சாட்சியை (Digital Evidence) ஐ அடிப்படையாகக் கொண்டிருந்தால் மேற்குறிப்பிட்ட எவ்வகையிலும் அழைக்கப்படலாம்.

எனவே, மேற்சொன்னவற்றை தொகுத்து நோக்கினால் (Cyber Crime) என்றால் என்ன என்பது தெளிவாகும்.

இணைய குற்றம் என்பது இணைய வெளியான மெய்நிகர் உலகில் மேற்கொள்ளப்படும் சகல சட்ட விரோத நடவடிக்கைகளையும் குறிக்கிறது. (Hens, Reyns and Fisher-2011)

அதாவது, கணனி அல்லது இணையத்துடன் தொடர்பை ஏற்படுத்த முடியுமான கருவிகள் (Devices) மற்றும் இணையம் சார்ந்த சகல குற்றச் செயல்களையும் இணைய குற்றங்கள் எனக் குறிப்பிடலாம். Cyber Crime என்பது பரந்துபட்ட ஒரு விடயமாகும். பல்வேறு சட்டத்திற்கு முரணான மற்றும் மனித நலனையும் அவனது உடமைகளையும் பாதிக்கின்ற சகலவிதமானவையும் இதில் உள்ளடங்குகின்றன.

தற்போது உலகம் முழுவதும் இணைய குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இணைய குற்றங்களில் ஈடுபடுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால் பதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

Cyber தாக்குதல் அணுகுண்டு தாக்குதலை விட அபாயகரமானது என இத்துறை சார்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர். எனவே இப்படியாக சிறிய அளவில் தொடங்கி பாரிய பாதிப்புகளை ஏற்படுத்துவது வரையிலான பல்வேறு இணைய குற்றங்கள் அன்றாடம் இடம்பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஷூரா நோன்பு



• முஹம்மத் பகீஹுத்தீன்

### ஆஷூரா நோன்பின் சிறப்புக்கள்

முஹர்ரம் மாதம் 10 ஆம் நாள் ஆஷூரா தினம் என அழைக்கப்படுகிறது. அன்றைய தினம் நோன்பு நோற்பது முக்கியமான சுன்னாவாகும். இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: 'நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது யூதர்கள் ஆஷூரா தினத்தில் நோன்பு நோற்றிருந்ததைக் கண்டார்கள். நீங்கள் ஏன் நோன்பு நோற்கிறீர்கள்? என அவர்களிடம் கேட்கப்பட்டபோது, இது ஒரு மகத்தான நாளாகும். நபி மூஸாவையும் அவர்களுடைய சமூகத்தையும் அல்லாஹ் பாதுகாத்து பிர்அவ்னையும் அவனது பட்டாளத்தையும் அழித்த நாளாகும். அதற்காக நபி மூஸா (அலை) நோன்பு நோற்றார்கள், எனவே நாங்களும் நோற்கிறோம் எனக் கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள்: அப்படியெனில் மூஸா (அலை) அவர்களுக்கு உங்களை விட நாம் அதிகம் அருகதையுடையவர்கள் எனக் கூறி விட்டு தானும் நோன்பிருந்ததுடன் தனது தோழர்களையும் நோன்பிருக்குமாறு ஏவினார்கள்''. (புகாரி, முஸ்லிம்)

மேலும் அபூ ஹுரைரா (ரழி) அறிவிக்கின்றார்கள்: ''நபி (ஸல்) அவர்களிடம் ஆஷூரா நோன்பு பற்றிக் கேட்கப்பட்டது, அது கடந்த வருடத்தில் இடம்பெற்ற (சிறு) பாவங்களுக்குக் குற்றப் பரிகாரமாக அமையும் என குறிப்பிட்டார்கள்''. (நூல்: முஸ்லிம்)

### ஆஷூரா நோன்பின் வரலாறு:

ஆரம்பத்தில் நபி (ஸல்) அவர்கள் மீது மாத்திரம் கடமையானது. ஆஷூரா நோன்பு மக்கா காலப் பிரிவில் நபிகளாருக்கு மாத்திரம் கடமையாக இருந்தது. அத்தினத்தில் நபி (ஸல்) அவர்கள் தனியாக தான் மாத்திரம் நோன்பு வைப்பார்கள். வேறு யாருக்கும் அந்த நோன்பை நோற்குமாறு கட்டளையிடவில்லை.

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ''நபி (ஸல்) அவர்கள் ஆஷூரா தினத்தை மிகுந்த ஆசையுடன் எதிர்பார்த்து அத்தினத்தில் நோன்பு வைப்பார்கள். நபிகளார் வேறு எந்த நாட்களுக்கும் அவ்வாறான முக்கியத்துவத்தை கொடுத்ததில்லை''. (புகாரி)

ஆனால் குறைஷிகளிடம் இந்த நாளில் நோன்பு பிடிக்கும் பழக்கம் இருந்து வந்ததாக ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் புஹாரி மற்றும் முஸ்லிம் ஆகிய இரண்டு கிரந்தங்களிலும் பதிவாகியுள்ளது.

இரண்டாம் கட்டமாக மக்கள் மீதும் விதியாகியது.

இறை தூதர் (ஸல்) அவர்கள் மதீனா நகருக்கு புலம் பெயர்ந்து வந்த போது யூதர்கள் ஆஷூரா தினத்தில் நோன்பு நோற்பதை அவதானித்தார்கள். அந்த நாள் நோன்பு வைப்பதற்கு அவர்களை விட நாம் அருகதையுள்ளவர்கள் என்ற வகையில் நோன்பு இருக்குமாறு மக்களுக்கு கட்டளையிட்டார்கள். அவ்வேளை யார் உணவை உட்கொண்டிருந்தார்களோ அவர்களுக்கு அந்த நாளின் எஞ்சியிருந்த பகுதியில் நோன்பு நோற்குமாறு கட்டளையிட்டார்கள்.

ரபீஃ பின்த் முஅவ்வித் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஆஷூரா நாள் காலைப் பொழுதில் நபி (ஸல்) அவர்கள் மதீனா நகரை சூழவுள்ள குடியிருப்புப் பகுதிகளுக்கு என்னை அனுப்பி, யார் நோன்பு நோற்றார்களோ அவர்கள் தங்களது நோன்பை பூரணமாக நிறைவேற்றும் படியும், யார் நோன்பு வைக்கவில்லையோ அவர்கள் இந்த நாளின் எஞ்சிய பகுதிகளில் நோன்பு பிடிக்கட்டும்'' என அறிவிக்குமாறு பணித்தார்கள். அதன் பிறகு நாம் ஆஷூரா தினத்தில் கட்டாயமாக நோன்பு வைப்பவர்களாக இருந்தோம். எமது சிறார்களுக்கும் ஆஷூரா நோன்பை நோற்க வைத்தோம். அவர்கள் பசிக்குது என்று சாப்பாடு கேட்டால் பருத்திப் பஞ்சால் செய்யப்பட்ட விளையாட்டுப் பொருட்களை கொண்டு பராக்குக் காட்டி நோன்பை முழுமையாக நோற்பதற்கு பயிற்சியளித்தோம் என அறிவித்துள்ளார்கள். (ஆதாரம் புகாரி)

மூன்றாவது கட்டமாக ஆஷூரா நோன்பு சுன்னத்தாக்கப்பட்டது.

ரமழான் மாத நோன்பு கடமையான போது ஆஷூரா நோன்பு 'கடமை' என்ற அந்தஸ்திலிருந்து சுன்னத் என்ற இடத்திற்கு வந்தது.

ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ரமழான் மாத நோன்பு கடமையாகுவதற்கு முன்பு நாம் ஆஷூரா நோன்பையே நோற்று வந்தோம். ரமழான் நோன்பு விதியாக்கப்பட்டதும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ''யார் ஆஷூரா நோன்பை தன்னார்வத்தோடு நோற்பதற்கு விரும்புகிறாரோ அவர் அதனை நோற்கட்டும். யார் விட்டுவிட விரும்புகிறாரோ அவர் அதனை விட்டு விடட்டும்.' (ஆதராம் புகாரி)

ஆஷூரா நோன்பு ஒரே ஒரு வருடம் மாத்திரமே மக்கள் மீது கடமையாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### 'தாஸூஆ' நோன்பு

புனித முஹரம் மாதத்தின் 9 ஆம் நாள் 'தாஸூஆ' என அழைக்கப்படுகிறது. 9 ஆம் நாள் நோன்பு நோற்பதும் சுன்னத்தாக்கப்பட்டிருக்கிறது. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ அய்யூப் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: 'அடுத்த வருடம் நான் உயிருடன் இருந்தால் 9 ஆம் நாளும் நோன்பு நோற்பேன்'. (முஸ்லிம்). ஆனால் அடுத்த ஆண்டு நபி (ஸல்) அவர்கள் வபாதாகி விட்டார்கள்.

'தாஸூஆ' எனப்படும் 9 ஆம் நாள் நோன்பு நோற்பதற்கு நபி (ஸல்) ஏன் ஆசைவைத்தார்கள் என்பதற்கு பல நியாயங்களை அறிஞர்கள் முன்வைத்துள்ளனர். அதில் மிகவும் ஏற்புடையதாக இருப்பது யூதர்களுக்கு மாற்றம் செய்வதற்கு என்பதே.

இப்னு அப்பாஸ் (ரழி) அறிவிக்கின்றார்கள்: 'ஆஷூரா தினத்தில் நோன்பு வையுங்கள். அதில் யூதர்களுக்கு மாறு செய்யுங்கள். எனவே அதற்கு முன்பு ஒரு நாள் அல்லது அதற்கு பின்பு ஒரு நாள் நோன்பு நோற்குமாறு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் முஸ்னத் அஹ்மத்)

இந்த அறிவிப்பு 'ஹஸன்' என்ற தரத்தில் உள்ள ஸஹீஹான ஹதீஸ் என ஹதீஸ் துறை வல்லுனரான அஹ்மத் ஷாகிர் (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அல்லாமா அல்பானி (ரஹ்) அவர்கள் இது ஒரு பலவீனமான ஹதீஸ் என்றே தீர்ப்பு வழங்கியுள்ளார்கள்.

### ஆஷூரா நோன்பை நோற்பதற்கான ஒழுங்குகள்

மேற்கூறிய ஹதீஸ்களில் இருந்து முக்கிய சுன்னத்தாக உள்ள ஆஷூரா நோன்பை நோற்பதற்கான ஷரீஆ சட்டப் பார்வையை இஸ்லாமிய அறிஞர்கள் பின்வருமாறு கூறியுள்ளனர்.

1) தாஸூஆ எனப்படும் 9 ஆம் நாளும் ஆஷூரா என்படும் 10 ஆம் நாளும் நோன்பு பிடிப்பது மிகவும் ஏற்றமானது. பெரும்பாலான இஸ்லாமிய சட்டத்துறை அறிஞர்கள் இந்தக் கருத்தையே வலியுறுத்தியுள்ளார்கள்.

2) ஆஷூரா எனப்படும் 10 ஆம் நாளும் அடுத்து வரக்கூடிய 11ம் நாளும் நோன்பு நோற்பது வரவேற்கத்தக்கது. காரணம் யூதர்களுக்கு மாறுசெய்தல் என்ற இலக்கை இது நிறைவேற்றி வைக்கிறது.

3) 10 ஆம் நாளான ஆஷூரா நோன்பை மாத்திரம் நோற்பது. அந்த நாள் மிகவும் மகிமைக்குரியது என்பதை பல ஹதீஸ்கள் மூலம் மேலே அறிந்து கொண்டோம்.

4) 9 ஆம் நாள், 10 ஆம் நாள், 11ஆம் நாள் ஆகிய மூன்று தினங்களிலும் நோன்பு வைப்பதும் ஒரு வகையில் அலங்கரிக்கப்பட்ட வழிமுறையே என இப்னு உஸைமீன் (ரஹ்) அவர்கள் தனது பத்வாவில் விரிவாக விளக்கிக் கூறியுள்ளார்கள்.

### சத்தியம் வெல்லும்

ஆஷூரா நோன்பு குறித்து வந்துள்ள ஹதீஸ்கள் முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு சுப செய்தியை சொல்லுகிறது.

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ''நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது யூதர்கள் ஆஷூரா தினத்தில் நோன்பு நோற்றிருந்ததைக் கண்டார்கள். நீங்கள் ஏன் நோன்பு நோற்கிறீர்கள்? என அவர்களிடம் கேட்கப்பட்டபோது, இது ஒரு மகத்தான நாளாகும். நபி மூஸாவையும் அவர்களுடைய சமூகத்தையும் அல்லாஹ் பாதுகாத்து பிர்அவ்னையும் அவனது பட்டாளத்தையும் அழித்த நாளாகும். அதற்காக நபி மூஸா (அலை) நோன்பு நோற்றார்கள், எனவே நாங்களும் நோற்கிறோம் எனக் கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள்: அப்படியெனில் மூஸா (அலை) அவார்களுக்கு உங்களை விட நாம் அதிகம் அருகதையுடையவர்கள் எனக்கூறி விட்டு தானும் நோன்பிருந்ததுடன் தனது தோழர்களையும் நோன்பிருக்குமாறு ஏவினார்கள்.'' (புகாரி, முஸ்லிம்)

மேலும் ஒரு ஹதீஸில்: ''இது ஒரு மகத்தான நாள், அல்லாஹ் மூஸாவையும் அவரது சமூகத்தையும் இந்நாளில் காப்பாற்றினான். பிர்அவ்னையும் அவனது சமூகத்தையும் மூழ்கடித்தான். அதற்கு நன்றி செலுத்தும் விதமாக மூஸா (அலை) அவர்கள் இன்றைய தினம் நோன்பு நோற்றார்கள். நாமும் நோன்பு நோற்கிறோம் என்றார்கள்.

இந்த மாதத்தின் சிறப்பு அமலாக இருக்கும் ஆஷூரா நோன்பு பற்றி குறிப்பிடும் மேற்கூறிய இரண்டு ஹதீஸ்களும் கூட அமைதி, சாந்தி நிலவும் வாழ்வு நிலைத்து நிற்கும் என்ற சுப செய்தியைத்தான் குறிப்பிடுகிறது.


பிர்அவ்ன் உலகில் தோன்றிய மன்னர்களில் மிகக் கொடிய ஒரு சர்வாதிகாரி. மாபெரும் அநியாயக்காரன். அமைதிக்கு பங்கம் செய்த கல்நெஞ்சம் கொண்ட மன்னன். இரத்த வெறி பிடித்த சண்டாளன். கர்வத்தின் சிகரத்தில் இருந்த பிர்அவ்னின் அழிவை மேற்கூறிய ஹதீஸ் ஞாபகப் படுத்துகிறது. சத்தியம் வெல்லும், அசத்தியம் அழியும். நீதி வெற்றி பெறும், அநீதி மரணித்து விடும். இறுதியில் சாந்தி சமாதானம் எங்கும் என்றும் நிலவும் மார்க்கமாக இஸ்லாம் திகழும் என்ற சுப செய்தியை அது தருகிறது.

இங்கு ஒரு உண்மை புலனாகிறது. இஸ்லாம் ஒரு கொள்கை. அதை பின்பற்றுவதால் கிடைப்பது சாந்தி, அமைதி, நிம்மதியான வாழ்வு. வரலாறு அதற்கு சான்று. மனித நாகரிகங்கள் இந்த உண்மையை கண்கூடாகக் கண்டன. அன்று போன்று இன்றும் சாந்தி வழிக்கு வேராக இருக்கும் இஸ்லாம் மார்க்கத்திற்கு எதிரிகள் இருக்கவே செய்கின்றனர். அவர்கள் இஸ்லாம் என்றால் அதன் மறுபெயர் பயங்கரவாதம் என்று ஊடகங்கள் மூலம் அச்சத்தையும் பயத்தையும் மக்கள் மத்தியில் திணித்துள்ளனர். அது சுத்தப் பொய் என்று பறைசாற்றிக் கொண்டு முஹர்ரம் புத்தாண்டு பிறக்கிறது. ஆம் முஹர்ரம் பிறந்தால் அமைதி பிறக்கும். சாந்தி சமாதானம் நிலவும்.

---

• உஸ்தாத் ஆஸாத் அப்துல் முஈத்

## கூட்டு இஜ்திஹாத்: அறிமுகமும் பிரயோகமும் (10)



## அல் மஜ்மஉல் பிக்ஹி - மக்கா

### தோற்றம்:

மக்காவை தலைமையகமாகக் கொண்டியங்கும் ராபிததுல் ஆலமில் இஸ்லாமியின் கீழ் 'அல் மஜ்மஉல் பிக்ஹி' எனும் சட்ட மன்றம் 1977 ஆம் ஆண்டு (ஹிஜ்ரி 1298) தோற்றுவிக்கப்பட்டது. முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் மார்க்க மற்றும் சட்டப் பிரச்சினைகளை ஆராய்ந்து கூட்டு இஜ்திஹாத் அடிப்படையில் இவற்றிற்கு தீர்பை வழங்குவது இதன் நோக்கமாக உள்ளது.

தலைவர், உப தலைவர் மற்றும் சட்டத் துறையில் துறை போன இருபது அங்கத்தவர்களைக் கொண்டதாக இந்த சட்ட சபை இயங்குகின்றது. இதன் தற்போதைய செயலாளராக கலாநிதி ஸாலிஹ் பின் ஸாபின் அல் மர்ஸூகி செயற்பட்டு வருகின்றார்.

### பிரதானமான இலக்குகள்:

1. முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட இஸ்லாமிய சட்ட மூலாதாரங்கள் அடிப்படையில் தீர்வுகளை முன்வைத்தல்.

2. மனித சட்டங்களை விட இஸ்லாமிய சட்டத்தின் உயர்ச்சியையும், இஸ்லாமிய சட்டம் முழுமையானது, அது அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு சொல்லும் சக்தியுள்ளது என்பதையும் தெரியப்படுத்தல்.

3. கால மாற்றத்திற்கு ஏற்ப இஸ்லாமிய முதுசங்களை மீள் ஒழுங்குபடுத்தலும், கலைச் சொற்களை தெளிவு படுத்தலும்.

4. இஸ்லாமிய பிக்ஹ் சார்ந்த பரப்புகளில் ஆய்வுகளைத் தூண்டுதல்.

5. புதிய பிரச்சினைகள் தொடர்பில் வெளியான சட்ட வல்லுனர்களினதும், சட்ட மன்றங்களினதும் பத்வாக்களைத் திரட்டலும், அவற்றை முஸ்லிம்களுக்கு மத்தியில் பரப்புவதும்.

6. ஷரீஆ சட்டம் தொடர்பில் எழுப்பப்படும் சந்தேகங்களை எதிர் கொள்ளல்.

### வழிமுறைகள்:

1. இஸ்லாமிய உலகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலான தகவல்களை திரட்டுவதற்கான தகவல் நிலையம்.
2. சட்டம் மற்றும் சட்டம் சார்ந்த கலைச் சொற்களை விளக்கும் வகையிலான அகராதிகளை தயாரித்தல்.
3. சட்டப் பரப்பிலான ஆய்வுகளையும், சட்டமன்றத்தின் முடிவுகளையும் சஞ்சிகை வடிவில் வெளியிடல்.
4. சட்ட மன்றத்திற்கும் உலகில் காணப்படும் ஏனைய கூட்டு இஜ்திஹாத் நிறுவனங்களுக்கும் இடையில் பரஸ்பரம் ஒத்துழைத்தல்.
5. தற்காலத்தில் தோன்றும் புதிய பிரச்சினைகள் பற்றிய ஆய்வு மன்றங்களை நடாத்தல்.
6. சட்ட மன்றத்தின் முடிவுகள், பரிந்துரைகளையும் பல மொழிகளுக்கு மொழிபெயர்த்து சாத்தியமான அனைத்து வழிமுறைகள் மூலமாக பரப்பல்.

### இஸ்லாமிய சட்ட மன்றம் - இந்தியா

#### அறிமுகம்:

1988ம் ஆண்டு இந்தியாவின் இஸ்லாமிய சட்ட மன்றம் தோற்றுவிக்கப்பட்டது. நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்கி இயங்கி வருகின்ற இந்திய இஸ்லாமிய சட்டமன்றம், வருடாந்தம் முக்கிய கருப் பொருட்களில் மன்றங்களை நடாத்தி வருகின்றது.

இவ்வகையில் இதுவரை சுமார் 25 பிக்ஹ் மன்றங்கள் நடைபெற்றுள்ளன. இவற்றில் 140 விவகாரங்கள் தொடர்பான முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இது தொடர்பில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஆய்வுகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

கலாநிதி யூசுப் அல்கர்ளாவி, அலி அல் கரதாஈ, அப்துல்லாஹ் பின் பய்யா, காலித் மத்கூர், ஸலாஹ் சுல்தான், அப்துல்லாஹ் முஹ்ஸின் அத்துர்கி போன்ற ஷரீஆத் துறையில் ஆழ்ந்த அனுபவும், பரந்த அறிவும் கொண்ட அறிஞர்களை கௌரவ அங்கத்தவர்களாக இணைத்துக் கொண்டுள்ளமை இந்திய பிக்ஹ் மன்றத்தின் விஷேட பண்பாகும்.

அறிஞர்களின் சிந்தனைகள், கருத்துக்களை பொது மக்களுக்கும் கொண்டு போய்ச் சேர்க்கும் வகையில் அரபு மொழியில் எழுதப்பட்ட சுமார் 56 புத்தகங்களை (இதுவரை) உர்து மொழிக்கு மாற்றும் பணியை இந்திய சட்ட மன்றம் செய்துள்ளமை முக்கிய ஒரு பணியாகும். இப்புத்தகங்களில் அதிகமானவை ஷரீஆவின் இலக்குகளை விளக்கும் மகாஸிதுஷ் ஷரீஆ தொடர்பில் எழுதப்பட்ட கலாநிதி யூசுப் அல் கர்ளாவி, ஜாஸிர் அவ்தா, ஜமாலுத்தீன் அதிய்யா, முஹம்மத் கமாலுத்தீன் இமாம் போன்றவர்களின் நூற்களாகும்.

மற்றும் உர்து மொழியில் எழுதப்பட்ட பல புத்தகங்களும் அரபு மொழிக்கு மாற்றம் செய்யும் பணியையும் இந்திய சட்ட மன்றம் செய்துள்ளது.


இதன் தற்போதைய தலைவராக ஷெய்க் நிஃமதுல்லாஹ் அல் அஃலமி செயலாற்றுகின்றார். நான்கு பிரதித் தலைவர்களைக் கொண்ட இந்த சட்ட மன்றத்தின் பொதுச் செயலாளராக ஷெய்க் காலித் ஸைபுல்லாஹ் கடமையாற்றுகின்றார்.

#### மன்றத்தின் பிரதானமாக இலக்குகள்:

1. சமூக, பொருளாதார, அரசியல் போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்களினால் தோன்றும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காணல்.
2. தற்காலத்திற்கு ஏற்ற வகையில் இஸ்லாமிய சட்டத்தை முன்வைத்தல்.
3. தற்காலப் பிரச்சினைகள் தொடர்பில் நவீன கால அறிஞர்கள், நிறுவனங்களின் பத்வாக்களைப் பெற்று அவற்றை மக்களுக்கு மத்தியில் வெளியிடல்.
4. இஸ்லாம் பற்றி எழுப்பப்படும் ஐயங்கள், மயக்கங்கள் பற்றிய சரியான பார்வையை முன்வைத்தல்.
5. வளர்ந்து வரும் அறிஞர்களை ஆர்வமூட்டி அவர்களை தயார்படுத்தல்.
6. இந்தியாவிற்கு உள்ளேயும் இந்தியாவிற்கு வெளியேயும் உள்ள சட்ட மற்றும் ஆய்வு நிறுவனங்களுடன் தொடர்பை பலப்படுத்தலும், தகவல்களைப் பரிமாறிக் கொள்வதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அடைவு மட்டத்தில் பாடசாலை சார் காரணி



ஒரு வினைத்திறனுள்ள பாடசாலை கொண்டிருக்க வேண்டிய பல்வேறு பண்புகளை கல்வியியலாளர்கள் விரிவாக விளக்கியுள்ளனர். அப்பண்புகளை ஒரு சேரப் பெறும் பாடசாலைகள் அடைவு மட்டத்திலும் ஒழுக்க மட்டத்திலும் உயர்ந்து நிற்கின்றன. அவ்வடைவு மட்டங்கள் சமூகத்தின் எதிர்பார்ப்புக்களை அதிகபட்சம் நிறைவேற்றும் நிறுவனங்களாகவும் மிளிர்கின்றன. இப்பண்புகளைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

1. சிறந்த அதிபர்.
2. அர்ப்பணிப்புடன் கருமமாற்றும் ஆசிரியர் குழாம்.
3. கல்வி அபிவிருத்திக்கான குறைந்த பட்ச வளம்.
4. ஆரோக்கியமான சமூகத் தொடர்பாடல்.
5. மாணவர்களின் உயர் நிலை அடைவுகள்.
6. மாணவர்களிடம் உயிரோட்டமுள்ள ஒழுக்க சீலம்.
7. பொறுப்புணர்ந்து செயற்படும் பணியாளர்கள்.
8. நவீன கல்வி முன்னெடுப்பு.
9. உயர் நிலை மாணவர் வரவு.
10. பாடசாலைக் கட்டமைப்பு தெளிவாக இருத்தல்.
11. சமுதாய மேம்பாட்டுச் செயற்பாடுகள்.
12. தொடரச்சியான கற்றல் செயற்பாடுகள்.
13. உயர்வான இணைப்பாடவிதான செற்பாடுகள்.
14. பாடசாலையின் நற்பெயர்.

மாணவர் தொடர்ச்சியான வருகையிலும் இடைவிலகலிலும் பாடசாலைசார் காரணி செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதையும் ஆய்வுகள் நிறுவியுள்ளன. பாடசாலை அதிபரின் நிர்வாகத் திறன், முகாமைத்துவக் கட்டமைப்பு, பௌதீக வளங்களின் அளவு போன்றன பாடசாலை அடைவு மட்டத்தில் தாக்கம் செலுத்துவது போலவே மாணவர் இடைவிலகலிலும் தாக்கம் செலுத்துகின்றன. பாடசாலை வளங்கள் எனும் போது ஆசிரியர் எனும் மனித வளம் அதில் முதன்மையானது. இது குறித்து ஆய்வாளர் ஏற்கனவே விரிவாக விளக்கியுள்ளார்.

பௌதீக வளங்களில் போதுமான கட்டடங்கள், கழிப்பறை வசதிகள், விளையாட்டு மைதானம், சுத்தமான குடிநீர், ஆசிரியர் அறை, மனையியல் அறை, மின்சார வசதி, கேட்போர் கூடம், நூலகம், விஞ்ஞான ஆய்வு கூடம், கணனி அறை, செயற்பாட்டு அறை, என்பவை முக்கியத்துவம் பெறுகின்றன. அதே போன்று பாடசாலையின் அமைவிடம், அதன் புறக் கவர்ச்சி, பாடசாலைகளின் போதுமான எண்ணிக்கை என்பனவும் கற்றல் - கற்பித்தலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாய் உள்ளன. இவற்றில் ஏற்படும் குறைபாடுகள் அல்லது போதாமைகள் அடைவு மட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதோடு இடைவிலகலிலும் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன.

பௌதீக வளங்கள் பாடசாலைக் கல்வி மேம்பாட்டில் இன்றியமையாதவை. ஏலவே குறிப்பிட்டது போன்று பௌதீக வளம் என்பது கட்டடங்களும் தளபாடங்களும் மட்டுமன்று. சமகாலக் கல்வி முறையைப் பொறுத்தமட்டில் கல்வித் தொழில் நுட்பம் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் முக்கிய இடம் வகிக்கின்றது. கல்வித் தொழில் நுட்பத்தின் துணையுடனான கல்விச் செயற்பாடுகள் மாணவர்களின் கல்வித் தேர்ச்சியையும் அடைவு மட்டத்தையும் உயர்த்துகின்றது.

மாணவனின் கற்றல் செயலொழுங்கை மேம்படுத்தும் நோக்கில் சாத்தியமான செயற்தொகுதி. நுட்ப முறைகள், துணைக் கருவிகளின் விருத்தி, பயன்பாடு, மதிப்பீடு என்பவற்றை உள்ளடக்கியதே கல்வித் தொழில்நுட்பம் என ஐக்கிய இராச்சியத்தின் கல்வித் தொழிநுட்பக் கழகம் வரையறை செய்கின்றது. கல்வித் தொழில் நுட்பம் எப்படிப் போயினும் கல்விக்கான அடிப்படை பௌதீக வளங்கள் தவிர்க்க முடியாதவை. அவற்றின் போதாமைகள் மாணவர் இடைவிலகலுக்குக் காரணமாகலாம். Ou t of School Children in Sri Lanka எனும் ஆய்வில் யுனெஸ்கோ இந்த உண்மையை வெளிப்படுத்தியுள்ளது.

மாணவர்கள் இடைவிலகுவதற்கான காரணங்களை விளக்கும் இந்த ஆய்வறிக்கை பாடசாலைகளில் கழிப்பறைகள் மற்றும் குடிநீர் வசதியின்மை மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுவதற்கான இரு முக்கிய காரணங்கள் என அடையாளப் படுத்தியுள்ளது.

2017 இல் இலங்கைத் தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் தமது வசிப்பிடங்களிலிருந்து பாடசாலைகள் தூர இடங்களில் அமைந்திருப்பதனால் தமக்கு பாடசாலை செல்வதில் மிகுந்த சிரமங்கள் இருப்பதாகவும் அதனால் பாடசாலைக் கல்வியை தொடர முடியாதுள்ளதெனவும் மாணவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இத்தகைய மாணவர்கள் சிலர் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகுவதற்கான காரணமாக இதனை முன்வைத்துள்ளனர். போக்குவரத்துச் செலவை ஈடு செய்ய முடியாத வறுமை இக்காரணியுடன் இணைந்துள்ளதையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

பாடசாலையின் வினைத்திறனுள்ள முகாமை அதன் அடைவு மட்டத்தில் முக்கிய பங்காற்றுகின்றது. வினைத்திறனுள்ள முகாமைத் தலைவர்கள் (அதிபர்கள்) பாடசாலைகளுக்குக் கிடைக்கப் பெறாத போது அது ஒட்டுமொத்தப் பாடசாலையினதும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைப் பாதிக்கின்றது. ஏனெனில், அதிபரே ஒரு பாடசாலையின் நடுநாயகம் (Brain) எனப்படுகிறார். திட்டமிடலுக்கான நுட்பங்கள், அமைப்பாக்கத் திறன், இயக்குவிக்கும் திறன், மேற்பார்வை செய்யும் திறன், வளங்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் என்பவை முகாமைத்துவ ஆற்றலின் முக்கிய கூறுகளாகும்.

ஆசிரியர்களின் திறமையானது தனியே அவர்களின் ஆற்றலில் மட்டும் தங்கியிருப்பதில்லை. அதனோடு ஊக்கமும் சேரும் போதுதான் அது முழுமை பெறுகின்றது. அதாவது ஆற்றலோடு ஊக்குவிப்பும் சேரும்போது (P = A x M) அடைவு உயர்ந்த மட்டத்தில் காணப்படும். ஊக்கம் என்பது ஒன்றினைச் செய்வதற்கான விருப்பினையே குறித்து நிற்கின்றது. இன்று அநேக ஆசிரியர்கள் கற்றல் - கற்பித்தலில் ஊக்கத்துடன் செயற்படுவதில்லை என்ற பொதுவான குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. அதாவது அவர்களில் சிலர் வகுப்புக்கு கற்பிக்கும் விருப்புடன் நுழைவதில்லை எனக் கூறப்படுகின்றது. இந்நிலையை மாற்றியமைத்து ஆசிரியர்களின் கற்பித்தலை ஊக்குவிக்கும் பொறுப்பு அதிபருக்குரியது.

இத்தகைய திறன் கொண்ட அதிபர்கள் பாடசாலைகளுக்கு வாய்க்காத போது அத்தகைய பாடசாலைகளின் அடைவு மட்டம் வீழ்ச்சியடைகின்றது. பாடசாலையின் கல்விக்கட்டமைப்பில் முதல் நிலை முகாமையாளராக அதிபர்களே விளங்குகின்றனர். ஆசிரியர்கள் போன்று அதிபர்களும் பல்வகை வகிபாகங்களை (Multiple Role) ஆற்ற வேண்டியுள்ளது. சிறந்த முகாமையாளர், அர்ப்பணிப்புடன் கருமமாற்றும் முன்னோடி, வளங்களை விருத்தி செய்பவர், ஒழுக்க விழுமியங்களை ஊக்குவிப்பவர், புதுமை செய்பவர், சிறந்த சமூகத் தொடர்பாளர், இணைப்பாடவிதான ஏற்பாட்டாளர், ஆளணி வளவாளர், கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை ஊக்குவிப்பவர் என அதிபரின் பங்குகள் விரிந்து செல்கின்றன.

# உளநெருக்கீட்டின் உடல் சார் விளைவுகள்






உள நெருக்கீட்டின் உளம் சார் விளைவுகள் குறித்து ஏற்கனவே விளக்கினோம். இங்கு நெருக்கீட்டின் உடல்சார் விளைவுகளை நோக்குவோம்.

### 1. நோய் எதிர்ப்புத் திறனைக் குறைக்கும்

மனஅழுத்தத்தின்போது உடலில் சுரக்கும் கார்டிசல் எனும் நாளமில்லாச் சுரப்பி காரணமாக உடலில் நோய் எதிர்ப்புத் திறன் குறைந்து உடல் நோய்களுக்கு ஆளாகின்றது. காச நோய், ஸ்ட்ரொக், டோக்கல் ஏ வகை இருமல் தாக்குதல் ஏற்பட மனஅழுத்தம் காரணமாவதை ஆய்வுகள் நிறுவியுள்ளன. மேலும் உயர் சுவாசக் குழல் தொற்று ஏற்படவும் ஜல தோசம் ஏற்படவும் மன அழுத்தம் காரணமாகின்றது.

### 2. இதய நாள நோய்கள் அதிகரிக்கும்

திடீர் மனஅழுத்தத்தின்போது இதயத் துடிப்பு அதிகரிக்கின்றது. அதனால் இதயத் துடிப்பு ஒழுங்கீனமாவதுடன், இதய வலியும் ஏற்படுகின்றது. இதனால் கூடுதல் எதிர் விளைவுகள் காட்டுபவராக இருந்தால் மாரடைப்புக் கூட ஏற்படலாம். இதயத் துடிப்பு மிகவும் அதிகரிப்பதுடன் இரத்த அழுத்தமும் அதிகரிக்கின்றது. இதன் விளைவாக இதய இரத்த நாளங்களிலும் இதயத்திலும் அடைப்பு ஏற்படலாம். மன அழுத்தம் காரணமாக இரத்தம் உறையும் தன்மை அதிகரித்து மாரடைப்புக் கூட ஏற்படலாம்.

### 3. வயிற்று உபாதைகள்

வயிற்று வலி, பசியின்மை, தீராத பசி, மலச் சிக்கல் என மாறி மாறி உருவாகும் வாய்ப்பு உள்ளது. இவற்றின் தொடக்கமாக தொண்டை மற்றும் வாய்ப் பகுதிகளில் புண்கள் ஏற்டலாம். மனஅழுத்தம் இருக்கும்போது சளித் தொல்லை, உடல் உளைச்சல், காதால் கேட்கும் எந்த விசயத்தையும் முழுவதும் புரிந்துகொள்ள இயலாமை, ஜூரம் போன்ற உடல் விளைவுகள் ஏற்படுகின்றன. ஆடை அணிகளில் கூட அக்கறையில்லாத நிலையில், உடம்பே சரியில்லை என்று புலம்பும் நிலை உருவாகும். சிந்தனைச் சக்தி குறைந்து தலை சுற்றுவது போன்ற உணர்வுப் பிரச்சினைகள் ஏற்படலாம்.

### 4. தோல் நோய்கள்

தலை அரிப்பது போன்ற உணர்வு ஏற்படுவதோடு, உடலின் எந்த இடத்தைச் சொறிந்தாலும் மேலும் மேலும் சொறியத் தூண்டும் ஓர் உணர்வு ஏற்படும். தோல் வரண்டு முடிச்சுப் போன்று இருக்கும் இடத்தில் முட்கள் தோன்றியது போல் சொர சொரப்பாக இருக்கும். சொறிந்த இடம் சிவப்பாக மாறி, நாளாவட்டத்தில் தோல் கறுத்துப் போகும். இவை தவிர எக்ஸிமா சொரியசிஸ் போன்றனவும் ஏற்படலாம்.

### 5. நோய்களைத் தீவிரப்படுத்தல்

உடல் நோய்களுக்கும் மனஅழுத்தத்திற்கும் இடையிலான உறவு பற்றி மிகத் தெளிவானதும் துல்லியதுமான ஆய்வுகள் இல்லாதபோதும் மனஅழுத்தத்தால் உடல் நோய்கள் தீவிரமடைகின்றன என்பது தெளிவாகக் கண்டறியப்பட்டுள்ளது.

மனஅழுத்தம் தீவிரப்படுத்தும் முக்கியமான நோய்களில் ஒன்று ஆஸ்துமா ஆகும். காற்றுப் பாதை மிகையாகச் செயற்பட்டு ஆஸ்துமா அதிகரிப்பதற்கு மனஅழுத்தம் காரணமாகின்றது. அதேபோன்று குடல் நோய்கள் அரிப்பு போன்றவற்றை மன அழுத்தம் தீவிரப்படுத்துகின்றது. செரிமானக் குறைவு மனஅழுத்தத்தால் நீடிக்கின்றது. மூட்டு அழற்சி, முதுகு வலி போன்றவற்றைச் சரிசெய்வதற்கு வைத்தியர்களால் முடியாமல் போவதற்கு மன அழுத்தமே காரணமாகின்றது. மனஅழுத்தம் நீடித்து நிலைக்கும்போது அதன் அடுத்த கட்ட விளைவான மனச் சோர்வு (Depression) ஏற்படுகின்றது. அது உள நெருக்கீட்டை விட ஆபத்தான விளைவுகளைக் கொண்டது.

மனஅழுத்தத்தினால் மனிதர்களில் நேரடியான நடவடிக்கை மாற்றங்களும் உருவாகின்றன. அதில் பசியார்வமின்மை, மிகையாக உண்ணுதல், பொறுமையின்மை, எதற்கும் வாதிடுதல், மிகையான புகைப் பழக்கம், எதிலும் கலந்துகொள்ளாமை, கடமைகளிலிருந்து நழுவுதல், வேலையில் திறமைக் குறைவு, நெருங்கிய உறவுகளில் மாற்றம், எதையும் சாதிக்க இயலாத உணர்வு, குறிக்கோளற்ற செயல்பாடு, பாதுகாப்பற்ற உணர்வு, உதவிக்கு ஆளில்லையெ என்ற ஏக்கம், எடுத்ததற்கெல்லாம் எரிந்து விழுதல், திடீரெனப் பாதிக்கப்பட்டு விடுவேனா என்ற அச்சம். இப்படி [illegible] மனஅழுத்தத்தினால் ஏற்படும் [illegible]

# டீனேஜ் பருவம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

உணர்ச்சிக் கொந்தளிப்புக்கு அடிக் கடி ஆளாகும் டீனேஜ் பருவத்தினர் பல்வேறு வகையான உளநெருக்கடி களுக்கும் பிரச்சினைகளுக்கும் உள்ளா கின்றனர். உடல், உள மாற்றங்களே இதற்குப் பின்னணியாக உள்ளன. இப் பருவ மாற்றங்களையும் அதனால் விளையும் பிரச்சினைகளையும் பெற் றோர் மனங்கொள்ளல் வேண்டும்.

பொதுவாக, டீனேஜ் பருவத்தினர் அல்லது கட்டிளமையினர் முகங் கொடுக்கும் பிரதான பிரச்சினைகளாக பின்வருவனவற்றை அடையாளம் காணலாம்.

1. பாலியல் விலகல்/தவறான வழிக் குச் செல்லல்
2. உளவியல் சார்ந்த பிரச்சினைகள்
3. சமூகம் சார்ந்த நெருக்கடிகள்
4. நடத்தைசார் பிரச்சினைகள்

டீனேஜ் பருவத்தினருக்கு ஏற்படும் தவறான தொடர்புகள் அவர்களது உளவியலில் மிகுந்த தாக்கம் செலுத்துகின்றது. இளம் வயதினருக்குத் தவ றான தொடர்புகள் ஏற்பட பல்வேறு காரணங்கள் உள்ளன. வீடுகளில் தனித்திருப்பது அதில் முக்கியமானது. அதிலும் கண்காணிப்பற்ற தனிமை மிகவும் ஆபத்தானது.

பொதுவாக டீனேஜ் பருவத்தினர் இரு வழிகளில் தவறான தொடர்பு களுக்கும் சிக்கல் களுக்கும் முகங் கொடுக்க நேர்கின்றது. முதலாவது வழி, இவர்களது அறியாமையையும் உணர்ச்சிசார் நிலமைகளையும் பலர் பலவீனமாகப் பயன்படுத்த எத்தனிக் கின்றனர். வீடுகளுக்கு அடிக்கடி வந்து போகும், தெரிந்தவர்களாகவோ உறவி னர்களாகவோ இருக்கும் சிலர் இப் பலவீனத்தைப் பயன்படுத்தக் கூடும்.

டீனேஜ் பருவப் பெண்கள் குறிப்பான கவனத்திற்கு உள்ளாக வேண்டியவர்கள். ஏனெனில், அவர்கள் மிக இலகுவாக அடுத்த ஆண்களால் ஏமாற்றப்பட வாய்ப்புள்ளது. இவர்களோடு அன்பாகப் பேசி, நட்பாகப் பழகி, தகாத உறவு வரை யாரும் கொண்டு செல்ல முடியும். இத்தகைய இளம் பெண்கள் அறிவோ அனுபவமோ இல்லாமையினால் இவ்வாறான வலைகளில் சிக்கிக்கொள்ளும் பரிதாபமான நிலை உள்ளது.

இரண்டாவது அம்சம், இப் பிள்ளைகள் வெளியில் செல்லும் போது ஏற்படும் இளம் வயது காதல் தொடர்புகள், மீள முடியாத சிக்கல்களில் அவர்களை மாட்டி வைக்கின்றன. இவற்றுக்குப் பக்க பலமாக இவர்களின் கைகளில் கொடுக்கப்படும் கையடக்கத் தொலைபேசிகள், கணனிகள், இணையதள வசதிகள் சமீபகால மாக முகநூல் (Face book) அமை கின்றன. தமது பிள்ளைகள் அந்தள வுக்குப் போக மாட்டார்கள் என பெற்றோர் தமது மனங்களில் கொண்டிருக்கும் அசைக்க முடி யாத நம்பிக்கையே இவ்வாறான சிக்கல்கள் ஏற்படக் காரணமா கின்றது.

இத்தகைய தவறான தொடர்பு கள் பிள்ளைகளில் மீள முடியாத உள, உடலியல் தாக்கங்களை உரு வாக்குகின்றன. பிற்பட்ட கால திரு மண வாழ்க்கையை பயந்தவர் களாகவும் தன்னம்பிக்கை இல்லா தவர்களாகவும் எதிர்கொள்ளும் நிலைக்கு அவர் களைத் தள்ளி விடு கின்றது. மொத்தமாகவே வாழ் வில் வெறுப்பை உருவாக்கிக் கொள்ப வர்களாக இவர்கள் மாறு கின்றனர். சில மாணவர்கள் கல்வி யில் தமது திறமைகளை வெளிக் காட்ட முடியாமல் மங்கிப் போகின்றனர். குடும்ப வாழ்வில் பிரிவுகள் பிரச்சினை களுக்கும் இது காலாக அமைகின்றது.

டீனேஜ் பருவத்தினர் எதிர் நோக்கும் இத்தகைய பிரச்சினை களில் ஒன்று, ஆண் பிள்ளைகளுக் கிடையே ஏற்படும் ஒருபால் உற வாகும். பாலியல் சார் நடத்தை களால் இலகுவாகக் கவரப்படு கின்ற டீனேஜ் பருவத்தினர் இத்த கைய விலகல் சார் நடத்தை களுக் கான வாய்ப்பு ஏற்படும்போது அதனைப் பயன்படுத்தக் கூடும். எனவே, பெற்றோர் இவ்விவகாரங் களில் மிகுந்த கவனம் செலுத்து தல் அவசியம். ஏனெனில், இறுக்க மான ஆன்மீக கலாச்சார சூழலில் வளர்க்கப்படும் பிள்ளைகள் கூட சிலவேளைகளில் இத்தகைய பிறழ்வு நிலைக்குச் செல்லும் வாய்ப்பு உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்ப் பலி... (01 ஆம் பக்கத் தொடர்)

உயிர்ப்பலி தொடர்பான பொதுமக்கள் எதிர்ப்புக்கள் வலுவடைந்து வருவதைத் தொடர்ந்து இந்தப் பத்திரம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சிலாபம் முன்னேஸ்வரம் கோவிலில் வருடாந்தம் நடத்தப்படும் உயிர்ப்பலி தொடர்பில் பரவலான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வந்தது. ஆடுகளும் சேவல் போன்ற பறவைகளும் உயிர்ப்பலி கொடுப்பதற்காக சில இந்துக் கோவில்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த அமைச்சரவைப் பத்திரத்தை இந்து சமய விவகார அமைச்சும் புத்த சாசன அமைச்சும் இணைந்து தயாரித்துள்ளது. கடந்த ஆண்டு இந்துக்கள் அதிகம் வாழும் யாழ்ப்பாணத்தில் உள்ள நீதி மன்றம் ஒன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் கோயில்களில் விலங்குகளைப் பலியிடத் தடை விதித்தது.

அந்த தடை தங்கள் வழிபாட்டு உரிமையில் தலையிடுவதாக விலங்குகளை பலியிடும் இந்து கோயில்களின் நிர்வாகத்தினர் வாதிட்டனர். பல நூற்றாண்டு கால பலியிடும் வழக்கத்தை தொடர அனுமதிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

## இலஞ்ச ஊழல்... (01 ஆம் பக்கத் தொடர்)

எல்லோரிடமும் மொபைல் போனோ ரெகோட் செய்யத் தேவையான உபகரணங்களோ இல்லாதிருக்க முடியும். அவர்கள் நேரடியாக பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறையிட முடியும். ரெகோட் பண்ணப்பட்ட ஆதாரங்கள் இருந்தால் அது எமது பணியை இலகுபடுத்தும் என்றும் அவர் கூறினார்.

பதிவு செய்யப்பட்ட ரெகோடிங்கை dig.traffic@police.lk என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும். பொது மக்களும் கூட இலஞ்சம் வழங்குவது குற்றம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். யாராவது இலஞ்சம் கொடுக்க முனைவதை பொலிசாரும் பதிவு செய்து இந்த முகவரிக்கு அனுப்பி வைக்கவும் முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## பொதுஜன... (01 ஆம் பக்கத் தொடர்)

தனது சகோதரன் 2019 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு மிகவும் பொருத்தமானவராக இருந்தாலும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனயும் அதனுடன் இணைந்த கட்சிகளும் மக்களின் கோரிக்கை யார் என்பதை அறிந்து முடிவெடுக்கும் எனவும்அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான குறைந்த வயதெல்லை 30 இல் இருந்து 35 ஆக அதிகரிக்கப்பட்டிருப்பதன் காரணமாக எனது மகன் நாமல் ராஜபக்ஷவுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது. இருந்தாலும் எனது சகோதரனுக்குப் போட்டியிட முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னை இணைத்துக் கொண்டு செயற்படுவதற்குத் தயாரில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## ட்ரம்பின்... (01 ஆம் பக்கத் தொடர்)

ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஏற்று இலங்கை ஜனாதிபதி இம்மாநாட்டில் கலந்து கொள்வதாக துறைமுக அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இலங்கை தெற்காசியாவின் போக்குவரத்துக்கான கேந்திர நிலையமாக இருப்பதால் இந்த மாநாடு போதைப் பொருள் பாவனைக்கு எதிராகக் குரல் கொடுத்து வரும் எமது ஜனாதிபதிக்கு மிகவும் முக்கியம் வாய்ந்தது எனவும் அவர் தெரிவித்தார். இருந்த போதும் போதைப் பொருள் வர்த்தகர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்ற இலங்கை ஜனாதிபதியின் கருத்துக்கு மாற்றமான கருத்தை அமெரிக்கா கொண்டிருக்கிறது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் செல்லும் ஜனாதிபதி, இம்மாதம் 24 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நடக்கவுள்ள நெல்ஸன் மண்டேலா மாநாட்டிலும் நெல்ஸன் மண்டேலா நினைவுப் பேருரை ஆற்றவுள்ளார்.

## ஊழல்... (01 ஆம் பக்கத் தொடர்)

நிரந்தர உயர் நீதிமன்றங்கள் உருவாக்குவதற்கான தீர்மானத்தின்படி முதலாவது நீதிமன்றம் உயர்நீதிமன்ற கட்டடத் தொகுதியில் ஒகஸ்ட் 21 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இரண்டாவது விஷேட நீதிமன்றமும் உயர் நீதிமன்ற கட்டடத் தொகுதியிலேயே ஆரம்பிக்கப்படவுள்ளது. வளங்கள் தொடர்பில் பிரச்சினைகள் இருந்தாலும் இந்த நீதிமன்றம் விரைவில் ஆரம்பிக்கப்படும் என நீதி அமைச்சர் தலதா அதுகோரல தெரிவித்தார்.

மூன்று நீதிபதிகளைக் கொண்ட 03 குழுக்களை இந்த நீதிமன்றங்கள் கொண்டிருக்கும். எந்த நீதிமன்றத்தில் எந்த வழக்குகள் விசாரிக்கப்படும் என்பதையும் நீதிபதிகளையும் தீர்மானிக்கும் அதிகாரம் பிரதம நீதியரசரிடம் இருக்கும்.

## புதிய அரசியலமைப்பில்... (01 ஆம் பக்கத் தொடர்)

2000-2009 வரை இலங்கை அரசாங்கம் பெற்ற கடன் இரு மடங்காக அதிகரித்துள்ளது. 2009 இன் பின்னரும் கூட வெளிநாட்டுக் கடன்கள் அதிகரிப்பையே காட்டுகின்றன. 2017 இறுதியில் இலங்கை பெற்றுக் கொண்ட கடன் 28.7 பில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

2009 இன் மொத்தத் தேசிய உற்பத்தியில் 86.2 வீதமாகக் காணப்பட்ட கடன் தொகை 2017 இல் 77.4 வீதமாகக் குறைந்தாலும் அதிகரித்துள்ள கடன்தொகை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருப்பதை அவதானித்தேன். 2016 இல் இது 11 வீதத்திலிருந்து 15 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த வரிகளை ஏழை மக்களே சுமக்கிறார்கள். 2017 இல் வட் வரி மூலமாகப் பெற்ற வருமானம் 56.5 வீதம் வரை அதிகரித்திருக்கிறது. இதுவும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். நாட்டின் வரவு-செலவுத் திட்டத்தில் கடனை மீளச் செலுத்துவது தான் பிரதான செலவாக உள்ளது.

2012 இல் இலங்கை நடுத்தர வருமான நாடாக மாறியது. 2006 இல் 07 வீதத்துக்குப் பெறப்பட்ட சலுகையற்ற வெளிநாட்டுக் கடன்கள் 2012 இல் 50 வீதமாக அதிகரித்தது. இந்தக் கடன்களுக்கு பலமான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கான வட்டி வீதம் அதிகம் என்பதோடு இவை குறுகிய காலத்தில் திருப்பிச் செலுத்தப்படவும் வேண்டும். நாட்டின் கடன்கள் மிகவும் கவனமெடுத்து முகாமை செய்யப்பட வேண்டும்.

இலங்கை புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. இதில் பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் உள்ளடக்கப்பட வேண்டும். தேசிய சட்ட ஒழுங்குகளுக்குள்ளால் இந்த உரிமைகள் உள்வாங்கப்பட வேண்டும். சமூக, பொருளாதார கொள்கைகள் வகுக்கப்படும் போது இலங்கை இணங்கியிருக்கும் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான ஒப்பந்தங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர்தெரிவித்தார்.

2009 இல் யுத்தம் முடிவடைந்தவுடன் பெருந்தெருக்கள், அம்பாந்தோட்டை துறைமுகம், விமான நிலையம் என பல அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றன. இவற்றுக்கு முன்னர் மனித உரிமைகள் தொடர்பிலான விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். நுண் கடன் வழங்கும் நிறுவனங்களின் நடவடிக்கைகளால் அநேகமான பெண்கள் உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் தமது சிறுநீரகங்களை விற்றவர்கள் தொடர்பாகவும் எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. கல்வி மற்றும் சுகாதாரத்துக்கான அரச செலவீனங்களைக் குறைத்து வரவு செலவுத் திட்டம் தயாரிக்க முயற்சிப்பதனால் நீண்டகால அபிவிருத்தி பாதிக்கப்பட முடியும். அத்தோடு சமூக பொருளாதார ஸ்திரத்தன்மையிலும் அது கணிசமான பாதிப்பை ஏற்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

தனது இலங்கை விஜயம் சம்பந்தமாக இவர் அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸிலுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளார்.

## பயங்கரவாத... (01 ஆம் பக்கத் தொடர்)

முன்னைய பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்குப் பதிலாகவே இந்தச் சட்டம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவிருக்கிறது. புதிய சட்டத்தில் பல திருத்தங்களை வேண்டி நின்ற உயர்கல்வி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, கொலைக் குற்றத்துக்கு தற்போது அமுலிலுள்ள மரண தண்டனைக்குப் பதிலாக ஆயுள் தண்டனை வழங்கப்பட வேண்டும் என புதிய சட்டத்தில் உள்ளதை திருத்தி அமைக்கும்படி வேண்டிக் கொண்டார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய ஒருவரின் ஒப்புதல் வாக்குமூலத்தைக் கொண்டு நீதிமன்ற நடவடிக்கைகளைத் தொடர முடியுமாக இருந்தது. தற்பொழுது தொடர முடியாது என புதிய சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இங்கிலாந்து போன்ற நாடுகளில் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய ஒருவரின் ஒப்புதல் வாக்குமூலத்தைக் கொண்டு வழக்குத் தொடரப்படுகிறது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

சட்டம் நிறைவேற்றப்பட்டால் அதனை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாக பொலிஸ் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதனை பாதுகாப்பு அமைச்சு பொறுப்பெடுக்க வேண்டும். பிரிவினைவாதம் குற்றமாகக் கருதப்பட வேண்டும் என்ற பல திருத்தங்களும் அமைச்சர் விஜேதாசவினால் முன்வைக்கப்பட்டன. இவற்றை ஜனாதிபதியும் ஏற்றுக் கொண்டார்.

இலங்கைக்கு ஜீஎஸ்பி ப்ளஸ் சலுகையை வழங்குவதற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதான கோரிக்கையாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வந்தது. 03 வருட முயற்சிக்குப் பின்னர் அரசாங்கம் இதனை நடைமுறைப்படுத்த முன்வந்திருக்கிறது.

## ஆய்வுக் கலாசாரம்... (07 ஆம் பக்கத் தொடர்)

ஒன்று முஸ்லிம் சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு பிரச்சினைகளையும் ஆய்வுநோக்கில் அணுகி அதற்கான தீர்வுகளை காண்பதற்கான வழிமுறைகளை முஸ்லிம் சமூகமும் நிறுவனங்களும் அரசியல் கட்சிகளும் ஆரம்பித்து செயற்பட வேண்டும். எமது சமூகம் பின்தங்கிய சமூகமாக உள்ளது. குறிப்பிட்ட பிரச்சினைக்கு சரியாக தீர்வாக ஆய்வு முயற்சிகளை மேற்கொள்ளும் கலாசாரம் பின்பற்றப்பட வேண்டும்.

இரண்டாவது, நாங்கள் சிறுபான்மையாக வாழுகின்றோம் என்ற வகையில் அடுத்த சமூகங்களோடு உறவாடுவதற்கும், நாட்டின் தேசிய பிரச்சினைகளில் எம்மை முதன்மைப்படுத்தியவர்களாக அடுத்த சமூகங்களோடு சமாந்தரமாக பயணிக்கின்ற கலாசாரத்திற்கும் நாம் மாற வேண்டும். நாம் கல்வி ரீதியிலும் பின்தங்கிய சமூகமாக உள்ளோம். இதனையும் முதன்மைப்படுத்திச் செயலாற்ற வேண்டும் என்ற விடயங்களை குறிப்பிட விரும்புகின்றேன்.

## பலம் காட்டும்... (04 ஆம் பக்கத் தொடர்)

முடக்கும் ஒரு நடவடிக்கை. அரசாங்கம் மட்டுமல்ல மேற்கு நாடுகளும் இந்தியாவும் கூட முற்தடுப்பு நடவடிக்கைகளை வேகப்படுத்தும். மகிந்த எவ்வளவிற்கு எவ்வளவு பலத்தைக் காட்டுகிறாரோ அவ்வளவிற்கு அவ்வளவு முற்தடுப்பு நடவடிக்கைகளும் முடுக்கி விடப்படும். ஆயின் தனது பலத்தைத் திரும்பத் திரும்பக் காட்டுவதன் மூலம் மகிந்த தன்னை விரும்பாத தரப்புக்களை உசாரடைய வைக்கிறாரா? இது அவருக்கு விளங்காதா?

விளங்கும். ஆனால் அவருக்கு வேறு வழியில்லை. அவரது அணியைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ளவும் வரவிருக்கும் தேர்தல்களை எதிர்கொள்ளவும் அவருக்குள்ள ஒரே வழி இதுதான். அவருடைய ஆட்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் சட்ட நடவடிக்கைகளால் அவருடைய அணியின் வெளிவட்டம், உள்வெளிவட்டம் என்று கருதப்படும் பலர் விசாரிக்கப்பட்டு விட்டார்கள். அவருடைய சகோதரர்களும், பிள்ளைகளும் கூட விசாரணைகளை எதிர்நோக்குகிறார்கள். இதை இப்படியே விட்டால் அது தனது குடும்பத்தைச் சுற்றி வளைத்து விடும் என்பது மகிந்தவிற்குத் தெரிகிறது.

உள்நாட்டில் சட்ட நடவடிக்கை என்ற கூரான வாள் அவருடைய குடும்பத்தின் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கிறது. அதிலிருந்து விடுபட அவருக்குள்ள ஒரே வழி தனக்குள்ள மக்கள் பலத்தைக் காட்டி அரசாங்கத்தை மிரட்டுவதுதான். அதைத்தான் அவர் இப்பொழுது செய்கிறார். ஆனால் அரசாங்கத்தைத் தற்காப்பு நிலைக்குத் தள்ளுவதற்காக அவர் கடந்த புதன்கிழமை திறந்த ஓர் புதிய போர் அரங்கு அவரையே அதிகரித்த அளவு தற்காப்பு நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறதா?

## மத்ஹபுகளுக்கிடையில்... (03 ஆம் பக்கத் தொடர்)

ஆனாலும் இந்த ஷாபி சட்டமானது, முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் (25) 1 பிரிவினால் மாற்றப்பட்டுள்ளது. ருதா ரைட் எதிர் இப்ராஹிம் வழக்கின் தீர்ப்பின்படி, உடலுறவினால் கன்னித் தன்மையை இழந்த பெண்ணிடம் முறையான சம்மதம் பெற வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. சட்டத்தில் பெண் (Woman) என்பது பருவ வயதையடைந்த பெண்ணையே குறிக்கிறது. சட்டத்தில் இன்னும் சில இடங்களில் (உதாரணம் பிரிவு 23,47) பெண் பிள்ளைகள் (Girl) என்ற சொல்லின் ஊடாக 12 வயதுக்குக் குறைந்த பெண்கள் குறிப்பிடப்படுகின்றார்கள். இதனடிப்படையில் ஷாபி மத்ஹபைச் சேர்ந்த பெண் பிள்ளைகள் (Girls) காதியின் அனுமதியுடன் அவளது வலீயினால் திருமணம் முடித்துக் கொடுக்கப்பட முடியும். அதே போல பருவமடையும் வயதைத் தாண்டிய ஒரு பெண் (woman), அவள் கன்னித்தன்மையை இழந்திருந்தாலும் இல்லாவிட்டாலும், அவளுடைய விருப்பமின்றித் திருமணம் முடித்துக் கொடுக்கப்பட முடியாது.

யாஸீன் எதிர் நூர் நைமா வழக்கில் பெண் பிள்ளை அவளது விருப்பமின்றி அவளது தந்தையால் திருமணம் முடித்துக் கொடுக்கப்பட்டதற்கு எதிராக நீதி வேண்டினாலும் ஷாபி மத்ஹபின்படி அந்தத் திருமணம் செல்லுபடியாவதால் காதிகள் சபை அந்த முறைப்பாட்டை நிராகரித்தது.

இருந்த போதிலும், அகீர் தம்பி மொஹிதீன்பாவா எதிர் செய்லதும்மா வழக்கில் பூப்பெய்துதலை ஒரு விருப்பத் தேர்வாக (Option) வைத்து தனது தகப்பனால் மணமுடித்துக் கொடுக்கப்பட்ட, இமாம் ஷாபியைப் பின்பற்றுகின்ற ஒரு பெண் பிள்ளைக்கு பருவமடைந்தவுடன் திருமணத்தை ரத்துச் செய்வதற்கு காதிகள் சபை அனுமதியளித்தது.

இதனை வைத்து காதிகள் சபை தனது கருத்தை வெளியிட்ட போது, இளவயதுத் திருமணம் எனும் இந்த சமூகத் தீமையை ஒழிப்பதற்கான மக்கள் கருத்து உருவாக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது.

பூப்பெய்துதலை விருப்பத் தேர்வாகக் கொள்ளும் கருத்து, ஷாபி மத்ஹபில் அறியப்படாத ஹனபி மத்ஹப் கருத்தாக இருந்ததனால், ஷாபி பெண் பிள்ளைக்கு இந்த விருப்பத் தேர்வு செல்லுபடியாகாது என்று வழங்கப்பட்ட தீர்ப்பு கடும் விமர்சனத்துக்கு உள்ளானது. ஆனாலும் ஹனபி மத்ஹபின் அடிப்படையிலும், அவளது தந்தையோ தந்தையின் தந்தையோ அல்லாத ஒரு வலீயினால் கலந்தாலோசிக்கப்படாமல் திருமணம் முடித்துக் கொடுக்கப்பட்ட ஒரு பெண் பிள்ளைக்கு மட்டும் தான் இந்த விருப்பத் தேர்வு கிடைக்கிறது.

செய்லதும்மா வழக்கில் அவளது தந்தையே அவளை திருமணம் செய்து கொடுத்திருந்தார். இருந்த போதிலும் அவள் தானாக ஈடுபடாத திருமண ஒப்பந்தமொன்றில் ஒரு பெண் பிள்ளையை ஈடுபடுத்துவது பொதுநலனுக்கு (Public Interest) முரணானது என்ற அடிப்படையில் இந்தத் தீர்ப்பு நியாயப்படுத்தப்பட்டது.

முஹம்மதிய சட்டத்தில் வயதுக்கு வருதல் என்பது இரண்டு வகையானது என நாராயணன் எதிர் ஸாரி உம்மா வழக்கில் குறிப்பிடும் நீதிபதி டி ஸம்பாயோ, பாதுகாவலர்களின் தலையீடின்றி திருமணம் முடிப்பதற்கு உள்ள இயலுமையை முதலாவது வகையாகவும், வயதுக்கு வந்த ஒருவர் செய்ய முடியுமான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான இயலுமையை இரண்டாவது வகையாகவும் கருதுகிறார். ஆனால் முஸ்லிம் சட்டத்தின்படி, பருவமெய்துதல் திருமணத்துக்கான வயதை அடைவதாகவும், சுயமாக இயங்கக் கூடிய தகுதியைப் பெறுகின்றமை (ருஷ்த்) ஏனைய விவகாரங்களுக்கான வயதை அடைவதாகவும் கருதப்படுகிறது.

வயதுக்கு வருதல் சட்டத்தின் (age of majority ordinance) 2 ஆம் பிரிவின்படி, முழுமையாக 18 வயதை அடைதல் என்பதுவே சட்ட ரீதியான வயதை அடைதல் என்று கருதப்படுகிறது. இது முஸ்லிம் சட்டத்தை மேலோங்குவது போலத் தெரிந்தாலும் அப்துல் காதர் எதிர் ராஸிக் வழக்கின் தீர்ப்பின் பிரகாரம், வயதுக்கு வருதல் சட்டத்தின் (age of majority ordinance) 2 ஆம் பிரிவு எப்படிக் குறிப்பிட்டபோதிலும் பருவமடைதல் என்பது தான் ஒரு முஸ்லிம் திருமணத்துக்கான வயதை அடைதல் எனக் கொள்ளப்படும்.

எனவே ஷாபி சட்டத்தின்படி, புத்திசுவாதீனமுள்ள ஒரு முஸ்லிம் ஆண் மாத்திரமே பருவ வயதை அடைந்ததும் திருமண ஒப்பந்தத்தில் இணைவதற்கான தகுதியைப் பெறுகிறான். முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் 25(1) பிரிவின் படி, ஷாபி மத்ஹபைச் சேர்ந்த பருவ வயதைத் தாண்டிய பெண், அவளது வலீயினுடைய அனுமதியையோ, காதியுடைய அதிகாரத்தையோ அவளது திருமணத்துக்காகப் பெற வேண்டும்.

மறுபுறத்தில், ஹனபி மத்ஹபைச் சேர்ந்த பருவமடைந்த புத்திசுவாதீனமுள்ள பெண், அவளது திருமணத்தின் போது வலீயினுடைய அனுமதியையோ காதியினுடைய அனுமதியையோ பெற வேண்டியதில்லை.

(Law college Law Review 2006 க்காக நீதியரசர் ஸலீம் மர்சூப் எழுதிய ஆக்கத்தின் ஒரு பகுதி. முஸ்லிம் திருமணத்துக்கு அவசியமான ஏனைய விடயங்கள் தொடர்ந்து வரும்)


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: [illegible] Peoples Bank A/c: [illegible] (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லது செய்பவனுக்கு எல்லாமே நல்லதுதான் நடக்கும்

ஸ்காட்லாந்து நாட்டில் ஃப்ளெமிங் என்ற பெயரில் ஒரு ஏழை விவசாயி இருந்தார். ஒருநாள் வயலில் வேலை செய்யப் போனபோது உதவி செய்யக் கோரி ஒரு குரல் அருகிலிருந்த சதுப்பு நிலத்தில் இருந்து கேட்டது.

தன் கையிலிருந்தவற்றை அப்படியே போட்டுவிட்டு ஓடினார் ஃப்ளெமிங். ஒரு சிறுவன் இடுப்பளவு ஆழத்தில் அந்தப் புதை மணலில் சிக்கிக்கொண்டு, வெளியே வர முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தான்.

நல்லவேளையாக ஃப்ளேமிங் அவனை காப்பாற்றினார். ஃப்ளேமிங் இல்லையென்றால் அந்தச் சிறுவன் கொஞ்சம் கொஞ்சமாக புதை மணலில் மூழ்கி இறந்திருப்பான்.


அடுத்த நாள் ஒரு ஆடம்பரமான வண்டி ஃப்ளெமிங் வீட்டு முன்னால் வந்து நின்றது.

நேர்த்தியாக உடை அணிந்த ஒரு பிரபு அவ்வண்டியிலிருந்து இறங்கி வந்து நேற்று ஃப்ளெமிங் காப்பாற்றிய சிறுவனின் தந்தை தாம் என்று அறிமுகம் செய்து கொண்டார்.

''நீங்கள் என் மகனின் உயிரைக் காப்பாற்றினீர்கள். உங்களுக்கு நான் ஏதாவது கொடுக்க விரும்புகிறேன்'', என்றார்.

''இல்லை, என்னால் எதுவும் வாங்கிக் கொள்ள முடியாது'' என்று பணிவாக மறுத்தார் ஃப்ளெமிங்.

அப்போது அவரது பிள்ளை அவர்களது எளிய குடிசையின் வாசலுக்கு வந்தான்.



''அவன் உங்கள் மகனா?'' என்று கேட்டார் பிரபு.

''ஆமாம்'' என்று பெருமையுடன் கூறினார் ஃப்ளெமிங்.

''அப்படியானால் சரி, நாமிருவரும் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளுவோம்.

என் பிள்ளைக்குக் கிடைக்கும் அதே மிகச் சிறந்த கல்வியை அவனுக்குக் கொடுக்கிறேன்.

அவன் அவனது தந்தையைப் போலிருந்தால் பிற்காலத்தில் நாமிருவரும் பெருமை அடையக்கூடிய அளவுக்கு வருவான்'' என்றார்.

இப்படியாக அவர்களுக்குள் நட்பு மலர்ந்தது. சொன்னதோடு மட்டுமல்ல; செய்தும் காண்பித்தார்.

விவசாயியின் மகன் மிகச் சிறந்த பள்ளிக் கூடங்களில் படித்தான். லண்டனில் உள்ள புனித மேரி மருத்துவப் பள்ளியில் படித்து உலகம் புகழும் பெனிசிலின் கண்டுபிடித்த சர் அலெக்ஸ் சாண்டர் ஃப்ளெமிங் ஆனார்.

வருடங்கள் பல கழிந்தபின் பிரபுவின் பிள்ளை நிமோனியாவால் பாதிக்கப்பட்ட போது பெனிசிலின் தான் அவரைக் காப்பாற்றியது.

அந்தப் பிரபுவின் பெயர் லார்ட் ரண்டோல்ப் சர்ச்சில். அவரது பிள்ளை? சர் வின்ஸ்டன் சர்ச்சில்!

தினை விதைத்தவன் தினை அறுப்பான். நல்லது செய்பவனுக்கு எல்லாமே நல்லதுதான் நடக்கும்.

# பொறுமை தரும் வெற்றி



பயணத்தில் முதல் அடியை எடுத்து வைத்ததும் வெற்றி கிடைக்கும் என்று எதிர்பார்த்து ஏமாந்து போகக் கூடாது. பொறுமையுடன் தொடர்ந்து முன்னே றிக் கொண்டே இருக்க வேண்டும்.

வாழ்க்கைப் பயணம் என்பது 100 கி.மீ வேகத்தில் செல்லும் நெடுஞ்சாலைப் பயணமாக மட்டும் இருக்காது.

சில சமயங்களில் மேடுபள்ளங்கள் நிறைந்த 10 கி.மீ வேகத்தில் மட்டுமே செல்லக் கூடிய பாதையாகவும் இருக்கலாம்.

பொறுமை என்பது வெற்றியைப் பெற்றுத்தரும் முக்கியமான குணம் ஆகும். ஒருவருக்கு எல்லாத் திறமைகளும் இருந்து பொறுமை இல்லாவிட்டால் அவர் வெற்றி பெறுவது கடினம்.

நம்முடைய எல்லா முயற்சிகளுக்கும் உடனே பலன் கிடைத்து விடுவதில்லை. பலன் கிடைக்கும் வரைக் காத்திருப்பதே பொறுமை ஆகும்.

நாம் விதையை விதைத்த உடனே நமக்குப் பழங்கள் கிடைத்து விடுவதில்லை. விதை முளைத்து மரமாகிப் பூத்துக் குலுங்கிப் பின்தான் பழங்கள் தருகின்றன.

ஒரு விதை மரமாகிப் பயன் கொடுக்கப் பல மாதங்கள் ஆகலாம். ஏன் பல வருடங்கள் கூட ஆகலாம். அதற்கு காத்திருப்பவனுக்குத்தான் கனிகள் கிடைக்கும்.

நம்முடைய இலக்கு நோக்கிய

நமது வாகனம் 100 கி.மீ வேகத்தில் செல்லக் கூடியதாக இருக்கலாம். நாமும் திறமையான வாகன ஓட்டியாக இருக்கலாம். ஆனாலும் பாதை நம்மை 10 கி.மீ வேகத்தைவிடக் கூட்டமுடியாமல் செய்து விடும். அப்போது நமக்குத் தேவை பொறுமை.

இந்தப் பாதையை நாம் மெதுவாகத் தான் கடந்தாக வேண்டும் என்ற பொறுமையும், சற்றுத் தூரத்தில் இந்தப் பாதை நெடுஞ்சாலையுடன் சேர்ந்து விடும் என்ற புரிதலும்தான் நம்மை வெற்றியாளராக மாற்றும்.

பாதை கடினமானதாக இருக்கின்றது என்று பயணத்தில் இருந்து விலகுபவர்கள் இலக்கை அடைய முடியாது.

நிறையப் பேருக்குத் தம்முடைய முயற்சியைக் கைவிடும்போது வெற்றி இன்னும் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றது என்பது தெரியாமல் போய்விடுகின்றது.

பொறுமை இல்லாத காரணத்தால் நிறையப்பேர் இலக்கிற்கு மிக அருகில் வந்தும் இலக்கை அடையாமல் போகிறோம்.

ஓட்டப்பந்தயத்தில் இலக்கிற்கு அருகில் இருக்கும்போதுதான் நமக்கு மிகவும் களைப்பாகவும், வலிப்பதுமாகவும் நமது ஓட்டம் இருக்கும். நம் மனதை இலக்கின்மீது வைக்க வேண்டும். வலியின் மீதுஅல்ல.

வாழ்க்கைப் பயணம் என்பது நேர்கோட்டுப் பாதையில் செல்லும் பயணம் அல்ல. அது நிறைய திருப்பங்கள் நிறைந்த பயணம்.

நாம் நீண்ட தூரம் பயணம் செய்து களைப்படைந்து இருக்கலாம். கூடவே நமது வெற்றி மிகஅருகில் அடுத்த திருப்பத்தில் காத்திருக்கலாம்.

எனவே பொறுமையுடன் பயணம் செய்வோம். வெற்றியை அடைந்தே தீருவோம்.

## வாழ்க்கையில்...

- எந்தக் காலத்திலும்! நம்பிக்கையை மட்டும் இழக்காதீர்கள். வாழ்க்கை ஓர் ஓவியம் போன்றது. அது கணிதமல்ல, நிறையப் பேர் வாழ்க்கையை கணிதமாக்கி நாசப் படுத்தியுள்ளார்கள். நீங்களாவது அதை ஓவியமாக்கி சந்தோசமான உலகத்தை உருவாக்குங்கள். எறும்பின் ஞானத்தைப் பின்பற்றுங்கள்.
- மோசமான பறவைகள்தான் தனது கூட்டிலேயே எச்சமிடும் என்பதை உணர்ந்து தனது குடும்பத்தை அழிக்காமல் குடும்பத்தோடு மகிழ்வாக வாழ்வை அனுபவிக்க வேண்டும்.
- விவேகமுள்ளவர்களுக்கு சோதனைகள்தான் மிகச்சிறந்த ஆசான்.
- பிரபஞ்சம் காலம் இரண்டும் முடிவே இல்லாதவை. இதில் நாம் எங்கே இருக்கிறோம் என்று எண்ணிப் பாருங்கள். நீங்களே வாழ்க்கைக்கு வீணான வரையறைகளை போட்டுக் கொண்டு அதுதான் விதியென எண்ணி வாழ்வை குழப்பாதீர்கள்.
- விட்டில் பூச்சி விளக்கொளியில் பலியாகிறது, மனிதனோ தனது கற்பனையால் பலியாகிறான்.
- உங்கள் போராட்டம் புனிதத் தன்மையோடு அமைய வேண்டும். பலத்தோடு இருப்பதற்காக புனிதத் தன்மையை இழப்பது சிறப்பல்ல. பலத்தை புனிதமான வழியில் உபயோகப்படுத்துவதே பலத்திற்கு சிறப்பு. கோழைகளே பலத்தை தவறான வழியிலும், பழி தீர்க்கவும் பயன்படுத்துவர் என்பதை அறிக.
- கடினமான வார்த்தைகள் வாழ்வை நாசமாக்கும் கொடிய விஷமாகும்.
- எல்லாவற்றையும் அரவணைப்பதே அன்பு, எதையும் நிராகரிப்பது அன்பல்ல.
- நேர்மை ஒரு தெய்வீக ஆணை. அந்த நேர்மை பலன் தரும். ஆனால் சிலருக்கு அது போதியதாகத் தெரிவதில்லை.
- விவேகமற்ற மனிதர்கள் தங்கள் நிழல்களுடனேயே சண்டை போடுவார்கள்.

# தென் இந்தியச் சிறுகதைகள் சிங்கள மொழியில்



இலங்கையில் சிங்கள மொழியிலிருந்து தமிழுக்கும் தமிழ் மொழியிலிருந்து சிங்களத்திற்கும் என இலக்கிய முயற்சிகள் மொழி மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன. இதனால் தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளையும் மனோபாவங்களையும் தனித்துவமான பிரச்சினைகளையும் பெரும்பான்மை சமூகத்திற்கும் அவர்களுடைய நிலைமைகளை மற்றைய சமூகங்களும் புரிந்துகொள்வதற்கான வழிமுறை தோற்றம் பெறுகிறது.

இத்தொடரில் தென்இந்தியாவின் முக்கிய இலக்கிய ஆளுமைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 சிறுகதைகளை சிங்கள மொழிக்கு மாற்றும் ஒரு பாராட்டத்தக்க முயற்சி நடைபெற்றுள்ளது. நான் அறிந்த வகையில் இது முதற் தடவையும் கூட.

சுந்தர ராமசாமி, அசோக மித்திரன், ஜெயகாந்தன், அகிலன், அண்ணாதுரை ஆகிய ஐந்து எழுத்தாளர்களின் 10 சிறுகதைகளை சிங்கள மொழிக்கு மாற்றம் செய்துள்ளார் எழுத்தாளர் ஷசிநானயக்கார. 'எதெர தனவ்வ' என்ற பெயரில் இப்புத்தகம் அண்மையில் வெளியாகியுள்ளது.

இன்னும் பல முக்கிய சிறுகதையாசிரிகள் இருக்கிறார்கள். தமிழ்பேசும் சமூகங்களின் பேசப்படாத பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றையும் எதிர்காலத்தில் ஷசி நானயக்கார சிங்கள சமூகத்திற்குக் கொண்டு சேர்க்க வேண்டும்.

அடுத்த சமூகங்களின் பண்பாட்டை, வாழ்வியலை இலக்கியம் வழியாகவே கூர்மையாகப் புரிந்துகொள்ள முடியும். இப்பணியை மொழிபெயர்ப்பாளர்களும் எழுத்தாளர்களும் வரலாற்று நெடுகிலும் மேற்கொண்டு வந்துள்ளனர்.

சிக்கல்கள் நிறைந்த சமகால உலகில் அடுத்தவர்களின் பண்பாட்டையும் காலாசாரத்தையும் வாழ்முறையையும் புரிந்து கொள்வது ஒரு அவசியத் தேவையாக மாறியுள்ளது. இவற்றைப் புரிந்துகொள்ள முடியாமையினாலேயே சமூகங்களுக்கிடையில் பகையும் மோதலும் உருவாகின்றது.

-இன்ஸாப் ஸலாஹுதீன்-

'எல்லாக் கரைகளையும்
தொட்டுச் செல்லும் நதி'
என்றெனைச் சொன்னாய் தோழி.
இமைகள் படபடக்க
மனவெளியில் நீர் கழித்து
ஆழம் பெறுகிறது.
ஒரு நதியைப் போல
உள்ளூற அர்த்தங்களும் விரிந்து கொண்டேயிருக்கின்றன.
நடந்தாய் வாழி
எந்தன் மன நதியே!
ஓய்வின்றி எப்போதும்
ஓடிக் கொண்டேயிருப்பதில்தான்
உயிரின் உள்ளோசை கேட்கிறது.
காடுமலையெல்லாம் கடந்து
சிறுசந்தில் குறுகி
நெடுவழியில் நீண்டு
பொங்கிப் பிரவகித்து
பெருவெளியில் விரிந்து பரவி
சமுத்திரத்தில் அமைதிகொள்ளும்
இந்த நதி-
எல்லாக் கரைகளையும் தொட்டுச்
செல்லும் நதி.

தேங்கி அழுகிற உலகில்
தாங்கி உறைகிற வெளியில்
உயிர்த்துடிப் போடும் உள்ளசைவோடும்
உன்மத்தம் கொள்கிறது இந்தநதி.
ஒரு நதியின் மனசு
வந்து வாய்த்திருக்கிறது.
வேறென்ன வேண்டும்?
நடந்தாய் வாழி
எந்தன் பெரு நதியே!


-சிராஜ் மஷ்ஹூர்-



## எல்லாக்கரைகளையும் தொட்டுச் செல்லும் நதி!

## இனித் தாங்கவே முடியாது

யார் நிற்கிறார்கள்
என்னைத் தாங்கிக்கொள்ள?
ஒரு திருவிழாவாக மாறிக்கொண்டிருக்கும் குழந்தைகளை
அழைத்துச் செல்லவேணும்
எங்காவது.
நீங்கள் இன்னும் வந்து சேரவில்லை
குழந்தைகள் உங்களுக்காகவா எனக்காகவா
காத்திருக்கின்றன என்று தெரியவில்லை.
நாட்டின் தலைவரை அழைத்தேன்
அவருடைய மனைவியே தொலைபேசுகிறாள்
தலைவரைப் பற்றி ஒரே புகார்
அவளிடம் என்னுடைய புகாரை எப்படிச் சொல்ல முடியும்?
மஞ்சலோடையில்
பழைய கதைகளைப் படித்துச் சிலிர்க்கிறார்கள்
பழைய கதைகளில் எவ்வளவு பொய்களையும் கலக்கலாம்
உண்மையும் பொய்யும் கலந்ததுதானே சரித்திரம்
புதிய கதைகளில் அந்தளவுக்கு சிறகு விரிக்கும் கற்பனை.
எல்லாம் மாறி
இடம் வலம் என்றில்லாமல் அழிகிறது
திசைகளும்தான்.
சூரியனும் சந்திரனும்கூட.
எல்லாம் எதற்காக?
இதோ ஏறிச் செல்கிறேன் தங்கப் புரவியில்
நீங்கள் நம்பவில்லையா
இதோ பறந்துகொண்டிருக்கிறேன்
வந்து பாருங்கள்
வானத்தில் எவ்வளவு அழகான காட்சி என்று
கண்ணீருக்குள்ளும் வசவுக்குள்ளும்
நாறிப் புழுத்தரத்தத்துக்குள்ளும்
எத்தனை காலத்துக்குத்தான் வாழ்ந்துகொண்டிருப்பது?
என்று சலித்துப் போனவர்கள் வெளியேறி
வந்துகொண்டிருக்கிறார்கள் என்னோடு
எது பறக்கும் கணம் என்று தெரிந்துகொண்டால்
அந்தப் பாதையில் உங்களுக்கான சிறகுகள் முளைத்த
தோட்டமிருக்கும்
கைகளை விடுங்கள்
அவரவராகவே சென்றுவிடலாம்
யார் தாங்குவது
யாரை என்று தெரியவில்லை
தங்கப் புரவி பறந்துகொண்டிருக்கிறது.



-கருணாகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை

# விளையாட்டு

## செப்டம்பர் 16இல்

## கொழும்பு சாஹிரா கல்லூரி விளையாட்டு விழா




கொழும்பு சாஹிரா கல்லூரி 90வது பழைய மாணவர்கள் குழு 12 வது தடவையாக ஒழுங்கு செய்துள்ள விளையாட்டு விழா இம்மாதம் 16ம் திகதி கல்லூரி மைதானத்தில் காலை 8.00 மணி முதல் நடைபெறவுள்ளது

இவ்விளையாட்டு விழாவில் கிரிக்கெட், ரக்பி, கால்பந்தாட்டம், 90 வது குழு மற்றும் பழைய மாணவர்கள் இடையிலான கால்பந்தாட்ட போட்டி, கல்லூரி மாணவர்களின் கராட்டி போட்டி மற்றும் குழந்தைகளுக்கான வேடிக்கை மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. கல்லூரி அதிபர் ரிஸ்வி மரிக்கார், 90வது குழு தலைவர் எம். ஆர். ஏ. ரசாக் மற்றும் திட்டத் தலைவர் முகம்மத் மிஹறன் ஆகியோர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தமை விசேட அம்சமாகும்.

இந்த விளையாட்டு களியாட்ட நிகழ்வில் கிடைக்கும் நிதியை கொண்டு 1000 புத்தங்களை கல்லூரி நூலகத்திற்கு வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கை கிரிக்கெட் நிறுவன நிதி மோசடி குறித்து முறைப்பாடு




இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் ஊடக உரிமை அனுசரணைக்காக வெளிநாட்டு நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட 5.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை தனிப்பட்ட ஒருவரது வங்கிக் கணக்கில் வைப்பிலிட எடுக்கப்பட்ட முயற்சி தொடர்பில் கடந்த 10ஆம் திகதி நிதி மோசடி விசாரணைப் பிரிவில் (FCID) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் இடம்பெறவுள்ள இங்கிலாந்து அணியின் இலங்கை சுற்றுப் பயணத்திற்கான ஒளிபரப்பு உரிமைகள் தொடர்பான பணத்தை நிதிப் பிரிவின் பிரதானி ஒருவர் வெளிநாடொன்றிலுள்ள வங்கிக்கணக்கு ஒன்றிற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார் என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நிதி மோசடி விசாரணைப் பிரிவிடம் முறையிட்டுள்ளனர்.

விளையாட்டுத்துறை அமைச்சர் பைசர் முஸ்தபாவின் ஆலோசனைக்கு அமைய, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஏஷ்லி டி சில்வா இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் கணக்குப் பிரிவு முடக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## பிரேசில் அணியின் தலைவராக நெய்மார்



பிரேசில் கால்பந்து அணியின் நிரந்தர தலைவராக பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணிக்காக விளையாடும் நெய்மர் நியமிக்கப்பட்டுள்ளார். பிரேசில் கால்பந்து அணியின் முன்னணி வீரரான நெய்மார் தற்போதைய காலத்தில் தலைசிறந்த வீரர்களில் ஒருவராக திகழ்கிறார். பாசிலோனா அணிக்காக விளையாடிய நெய்மர் தற்போது பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணிக்காக விளையாடி வருகிறார்.

இவர் பிரேசில் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டார். ஆனால் தொடர்ச்சியாக அவர் தலைவர் பதவியை ஏற்கவில்லை. ரஷ்யாவில் நடைபெற்ற உலகக்கிண்ணத்தில் கூட சில்வா, மார்சிலோ ஆகியோர் தலைவராக செயல்பட்டனர். இந்நிலையில் நெய்மர் நிரந்தர தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## உலக கரம் சம்மேளனத்தின் உப தலைவராக பராக்கிரம பஸ்நாயக்க



சர்வதேச கரம் சம்மேளனத்தின் பிரதித் தலைவராக பராக்கிரம பஸ்நாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார். தென் கொரியாவில் நடைபெற்ற, சர்வதேச கரம் சம்மேளனத்தின் விசேட பொதுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டார்.

5ஆவது உலக கிண்ண கரம் போட்டிகள் அண்மையில் தென் கொரியாவில் நடைபெற்றபோதே இந்த விசேட பொதுக்கூட்டம் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பராக்கிரம பஸ்நாயக்க முன்னாள் சுங்கத் திணைக்கள பணிப்பாளராவார். தற்போது அவர் தேசிய சேவைகள் விளையாட்டு சங்கம், தேசிய சேவைகள் ஹொக்கி சங்கம் மற்றும் மேல் மாகாண பெட்மின்டன் சங்கம் ஆகியவற்றின் தலைவராக இருந்து வருகிறார்.


சர்வதேச கரம் சம்மேளனத்துக்கான உத்தியோகபூர்வ அதிகாரிகள் தெரிவு நான்கு வருடங்களுக்கொரு முறை விசேட பொதுக் கூட்டத்தின் போது இடம்பெறும். இம்முறை நடைபெற்ற விசேட பொதுக் கூட்டததில் சுபிட்சர்லாந்தைச் சேர்ந்த ஜோசப் மயர் சம்மேளனத்தின் தலைவராகவும் இந்தியாவைச் சேர்ந்த வி.டி. நாராயன் பொதுச் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வருட உலக கோப்பை கரம் போட்டிகளை இலங்கை வெற்றிபெற்ற அதேநேரம் சர்வதேச கரம் சம்மேளத்தின் பிரதித் தலைவர் பதவியையும் இலங்கை பெற்றுக் கொண்டுள்ள நிலையில் அடுத்த ஆசிய கரம் சம்பியன் போட்டிகளை எதிர்வரும் நவம்பர் மாதத்தில் இலங்கையில் நடத்த பராக்கிரம பஸ்நாயக்க ஏற்பாடுகளை செய்து வருகிறார்.









## நூற்றாண்டு கிண்ணத்தை வென்றது ஹமீட் அல் ஹுசைனி கல்லூரி



களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் விதத்தில், ஒழுங்கு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான அழைப்பு கால் பந்து தொடரின் இறுதிப் போட்டியில் களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி அணியை பெனால்டி முறையில் வீழ்த்திய கொழும்பு ஹமீட் அல் ஹுசைனி கல்லூரி அணி தொடரின் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

களுத்துறை வெட்டும்கட பாகிஸ்தான் மைதானத்தில் இரண்டு நாட்களாக நடைபெற்ற இந்த கால்பந்து தொடரில் எட்டுப் பாடசாலை அணிகள் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் இடம் பெற்றன. தொடரின் அரையிறுதிப் போட்டிகளில் அளுத்கமை ஸாஹிரா கல்லூரி அணியினை வீழ்த்தி களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி அணியும், கிந்தொட்டை ஸாஹிரா கல்லூரியை வீழ்த்தி கொழும்பு ஹமீட் அல் ஹுசைனி கல்லூரியும் இறுதிப் போட்டியில் ஆடும் சந்தர்ப்பத்தினை பெற்றிருந்தன.

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org